24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 கதிர் 85 மாசி 08ஆம் நாள் புதன்கிழமை 20 பெப்ரவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2050

மறப்போம் மன்னிப்போமென்று முடித்துவிட முடியாது அரசு

பன்னாட்டுப் பொறிமுறையூடாக குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்; சம்பந்தன் தடாலடி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 20

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் மறப்போம் மன்னிப்போம் என்ற கருத்தை அடியோடு நிராகரிக்கின்றோம். மறப்போம் மன்னிப்போம் என்ற பேச்சுக்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். படையினரின் போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் வன்னியில் இன்னமும் இருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கும், கொன்றொழிக்கப்பட்ட மக்களுக்கும், காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்கும் நீதி வேண்டும். பன்னாட்டுப் பொறிமுறை ஊடாக உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார். >> 21

போர்க் குற்றங்களுக்கு மக்கள் சாட்சிகளுண்டு

யாழ்ப்பாணம், பெப். 20

மகிந்த ராஜபக்ச இலங்கையின் இறுதிப் போரில் போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை என்று தற்போது உறுதியாகக் கூறுகின்றார். இதனை நாமும் ஏற்க >> 21

தலைமன்னார் விபத்தில் 23 வயது இளைஞர் சாவு

மன்னார், பெப்.20

மன்னார், தலைமன்னார் வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பெரிய கரிசல் கிராமத்தைச் சேர்ந்த முஹம்மது ஜே.ரமீஸ் (வயது-23) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

தலைமன்னார், 2ஆம் கட்டையில் நேற்று முன்தினம் மாலை நீர்க் குழாய் >> 21

கத்திகள், கோடரியுடன் வீடு புகுந்து வாகனங்களுக்கு தீ வைத்த கும்பல்

கொக்குவிலில் பட்டப்பகலில் அட்டகாசம்
இதுவரை எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், பெப்.20

வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் அங்கிருந்த ஹைஏஸ் வாகனம் மற்றும் உந்துருளிகளைத் தீயிட்டுக் கொழுத்தி விட்டு அங்கிருந்து >> 21

போரில் இறந்த மக்களுக்கு மாசி மகத்தில் பிதிர்க்கடன்

முல்லைத்தீவு, பெப்.20

இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களின் ஆத்ம சாந்தி வேண்டி நேற்று முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் ஆத்ம சாத்திப் பிரார்த்தனையும், அன்னதானமும் நடத்தப்பட்டன.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் >> 21

மகன் இறந்த சோகத்தில் உயிரை மாய்த்தார் தாய்

முல்லைத்தீவில் சோகம்

யாழ்ப்பாணம், பெப்.20

முல்லைத்தீவில் பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். மகன் இறந்த சோகத்தைத் தாங்க முடியாது அவர் இந்தத் தவறான முடிவை எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட சிராட்டிக் குளத்தில் நேற்று நடந்துள்ளது.

உயிரிழந்தவரின் மகன் கடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியிருந்தார். அவர் சில நாள்களாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவரது உடல் நேற்று அதிகாலை சிராட்டிக்குளத்துக்கு குடும்பத்தினரால் கொண்டு வரப்பட்டது. இந்தநிலையில் தாய் நேற்று அதிகாலை 5 மணியளவில் வீட்டில் இருந்து சுமார் 800 மீற்றர் தூரத்தில் உள்ள வனப் பகுதியில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

இவரின் மற்றொரு மகனும் முன்னர் உயிரிழந்துவிட்டார் என்றும், தற்போது மற்றைய மகனும் உயிரிழந்ததால் ஏற்பட்ட துயரத்தில் அவர் இந்தத் தவறான முடிவை எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவத்தால் ஊர் மக்கள் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-222)

மத்தளவை நிராகரித்தவர் பலாலியை சீரமைப்பாரா?

ரணிலிடம் கேள்வி எழுப்புகிறது மகிந்த அணி

கொழும்பு, பெப்.20

மத்தள பன்னாட்டு வானூர்தி நிலையத் திட்டத்தை பயனற்றது என்று விமர்சிக்கும் அரசு பலாலி வானூர்தி நிலையத்தை பன்னாட்டு வானூர்தி நிலையமாக அபிவிருத்தி செய்ய திட்டமிட்டுள்ளது ஏன் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வடக்குக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, 20 பில்லியன் ரூபா செலவில் பலாலி வானூர்தி நிலையத்தை பன்னாட்டு வானூர்தி நிலையமாக தரமுயர்த்தும் திட்டம் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

'இது மிகவும் ஆச்சரியம் அளிக்கிறது. மத்தள வானூர்தி நிலையம் அமைக்கப்பட்ட போது நாட்டுக்கு இரண்டாவது பன்னாட்டு வானூர்தி நிலையம் தேவையற்றது என்று கூறியவர்கள், திடீரென யாழ்ப்பாணத்தில் பலாலி வானூர்தி நிலையத்தை தரமுயர்த்த முனைவது ஏன்?' என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் றோகித அபேகுணவர்த்தன கேள்வி எழுப்பினார்.

'மத்தள வானூர்தி நிலையம் பயன்படுத்தப்படாமல் இருக்கும் நிலையில், எதற்காக மூன்றாவது பன்னாட்டு வானூர்தி நிலையம்? பலாலி வானூர்தி நிலையம் அபிவிருத்தி செய்யப்படுவதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் பன்னாட்டு வானூர்தி நிலையங்கள் தொடர்பான அரசின் முந்திய கொள்கைக்கும் தற்போதைய நிலைப்பாட்டுக்கும் இடையில் முரண்பாடு உள்ளது.

மத்தளவை விட பலாலி மிகவும் சிறந்தது என்றும், முதலீடுக்கு ஏற்ப சிறந்த வருவாய் கிடைக்கும் என்ற முடிவுக்கு அரசு எப்படி வந்தது? வடக்கில் ஒரு பன்னாட்டு வானூர்தி நிலையம் இருப்பது எப்போதுமே நல்லது. ஆனால் அது பொது நிதியை வீணாக்குவதை விட வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் ஒரு உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும். மத்தள வானூர்தி நிலையம் பெருமளவு நிதியைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டது. அந்த திட்டம் வெற்றியளிப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. பலாலியை பன்னாட்டு வானூர்தி நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு ஏற்படும் செலவை விட, மத்தள வானூர்தி நிலையத்தை சாத்தியப்படுத்துவது செலவு குறைவானதாக இருக்கக் கூடும், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-5)

முன்பள்ளிக்கு மரத்தளபாடங்களை கையளித்தார் சரவணபவன் எம்.பி

வலி.மேற்கு, பெப்.20

யாழ்ப்பாணம் நவாலி முன்பள்ளிக்கு ஒரு தொகுதி மரத் தளபாடங்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வழங்கியுள்ளார். 2018ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் அண்மையில் முன்பள்ளிக்குக் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் வலி தென் மேற்கு பிரதேச செயலர் திருமதி உதயகுமார் ஜசோதா, உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன், வலி.தென்மேற்கு பிரதேச தவிசாளர் அ.ஜெபநேசன், உறுப்பினர்களான இ.வன்னியசேகரம், ஆ.சி.கணேசவேல், ஜெ.ஜசிந்தன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப் ஆகியோகலந்து கொண்டனர். (ஜ-50)

தர நியமங்களுக்கு அமையவே பால் மா இறக்குமதியாகின்றது

சுகர்தார அமைச்சர் விளக்கம்

கொழும்பு, பெப்.20

இறக்குமதி செய்யப்படும் பால் மா தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது. அதனால் மக்கள் குழப்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர். உண்மையில் பால் மா விவகாரம் என்பது அரசியல் விடயம் அல்ல. அது விஞ்ஞான நிபுணத்துவம் வாய்ந்த துறையுடன் தொடர்புடையது. உண்மையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தனியார் துறையினருக்கு பக்கச்சார்பாக நாம் நடந்து கொண்டோம் என்பது தொடர்பில் ஒரு விடயத்தையாவது முன்வையுங்கள் என்று சவால் விடுக்கின்றேன்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாதாரண மக்களின் பிள்ளைகள் மட்டுமல்ல, எனது பிள்ளையும் பால்மாவைப் பயன்படுத்தியது. நாங்கள் வார்த்தைகளால் வாழ்ந்து கொண்டிருப்பர்கள் அல்லர். நாம் விடயங்களை செயற்படுத்தவே முயற்சிக்கின்றோம். செய்து கொண்டிருக்கின்றோம்.

பால்மாவை இறக்குமதி செய்வதா?, இல்லையா? என்பது அரசியல் சார்ந்த தீர்மானமாகின்றது. ஆனால் இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் அடங்கியுள்ள உள்ளடக்கங்கள் தொடர்பில் மருத்துவ, விஞ்ஞான தொழில்நுட்பத்தைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும். இலங்கையின் பால் உற்பத்தி நூற்றுக்கு பத்து வீதமே. எஞ்சிய 90 சதவீதத்தை எங்கிருந்து எடுத்துக் கொள்வது?. இறக்குமதியை நிறுத்தினால் பிள்ளைகளின் போசாக்குக்கு எவ்வாறு ஊட்டமளிப்பது என்ற கேள்விகள் உள்ளன? இவற்றை நினைவில் கொள்ள வேண்டும் - என்றார்.

சுகாதாரத் துறையின் பிரதி இயக்குநர்களில் ஒருவரான வைத்தியர் எல்.ரி.கம்லத் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பால்மா தொடர்பில் சர்வதேச தரநிலையொன்று உள்ளது. இறுதியாக இந்தப் தரநிலையில் மேற்படி பால்மா தொடர்பான பிரிவானது 2018ஆம் ஆண்டு மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இந்த பிரிவுக்கு அமைவாக இலங்கையும் பால்மா தொடாபான தரநிலையொன்றைத் தயார் செய்துள்ளது. இலங்கை தரச் சான்றிதழ் 31 ஆல் அது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. **இந்தத் தரச் சான்றிதழின் கீழ் வருகின்ற பால்மா வகைகள் 2015ஆம் ஆண்டு வர்த்தமானி அறித்தல் ஒன்றின் ஊடாக இலங்கை உணவுச் சட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளது. எந்தவொரு நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகள் ஆய்வுக்கு உட்படுத்தியே உள்வாங்கப்படுகின்றன.**

பால்மா வகைகள் இறக்குமதி செய்யப்படும் போது துறைமுகத்தில் வைத்து அந்த பால்மா வகைகளுக்காக அந்தந்த நாடுகளின் சுகாதார அமைச்சின் அல்லது நிறுவனத்தின் சான்றிதழ் தொடர்பில் பரிசீலிப்போம். அதற்கு மேலதிகமாக அந்தப் பால்மா வகைகளின் மாதிரிகளைப் பெற்று நாம் எமது ஆய்வு கூடங்களில் இராசாயனப் பகுப்பாய்வைச் செய்வோம்.

சர்வதேச ரீதியாக 200க்கும் அதிகமான நாடுகள் பால்மா இறக்குமதி சம்பந்தமான வலையமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றன. இலங்கையும் அதில் உள்ளது. தரம் குறைந்த பால்மா வகை அந்த நாடுகளின் ஏதாவது துறைமுகத்திலாவது அடையாளம் காணப்படுமாகவிருந்தால் உடனடியாக ஏனைய 200 க்கும் அதிகமான நாடுகளுக்கும் அறிவிப்பு விடப்படும். ஆனால் அவ்வாறாக எந்த அறிவிப்பும் கிடைக்கவில்லை-என்றார். (எ-61)

பன்னாட்டு நீதிபதிகள் எனும் திட்டத்தை முறியடிப்போம்

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கூறுகிறது

2015இல் இலங்கை அனுசரணை வழங்கிய பன்னாட்டு நீதிபதிகளுக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆட்சியமைத்த பின்னர் முறியடிக்கும். அதற்கேற்றதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரும்.

இவ்வாறு அந்தக் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க் குற்றச்சாட்டுக்கு பன்னாட்டு நீதிபதிகள் கொண்ட குழுவை நியமிக்கும் முடிவுக்கு 2015ஆம் ஆண்டு இலங்கை அனுசரணை வழங்கத் தீர்மானித்திருந்தது. இந்தத் தீர்மானத்தைத் துரோக ஆவணமாக நாங்கள் பார்க்கிறோம். இலங்கையின் சட்ட நடைமுறைகளில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்புக்கு அது பரிந்துரைக்கிறது.

பன்னாடுகளின் தலையீடு இல்லாமல் இந்தப் பிரச்சினை இலங்கைக்குள் தீர்க்கப்படவேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். 30/1 தீர்மானத்தின் விளைவுகளைத் திருப்பி விட சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி முயற்சிக்கும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் புதியதொரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, பேரவையின் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றுவதன் மூலம் புதிய அரசால் அதைச் செய்ய முடியும்.

2013ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை ஒரு தீர்மானத்தைச் சமர்ப்பித்தபோதும், அது வாக்கெடுப்பில் தோல்வி கண்டது. இராணுவ அதிகாரிகளை எந்தச் சட்டநடவடிக்கைக்கும் உட்படுத்துவதை எதிர்க்கும் வகையில் தீர்மானம் இருக்கும். நாட்டின் இறைமையை பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டு புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். புதிய தீர்மானத்தை நாங்கள் கொண்டு வருவதால் நாங்கள் நல்லிணக்கத்துக்கு எதிரானவர்கள் என்று அர்த்தமில்லை.

நல்லிணக்க ஊக்குவிப்புகள் உள்நாட்டு வரையறைகளுக்குள், எமக்குப் பொருத்தமான வடிவத்தில் இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (த)

தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

கிளிநொச்சி, பெப்.20

கிளிநொச்சி மாவட்ட இளைஞர், யுவதிகள் தமக்குப் பொருத்தமான தொழில் கல்வியைத் தெரிவு செய்வதற்கான தொழில் கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

சோஆ நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் காலை 10 மணிக்கு இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

அரச தொழில் பயிற்சி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த நிகழ்வாக நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் இளையோர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கோரப்பட்டுள்ளது. (எ)

கிராம எழுச்சித் திட்டத்தில் ரூபா 1,658 மில். ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 20

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்துக்கு இதுவரை ஆயிரத்து 658 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலர் வே.சிவஞான சோதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விவசாயக் குளங்கள் மறுசீரமைப்பு, வீதிகள், பாலங்கள், வடிகால் வசதிகள், நீர் வழங்கல், சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதன் மூலம் கல்வித் துறைமேம்பாடு, பாடசாலைக் கழிவறைகள், குடிநீர் வசதி, வாராந்த சந்தை, கிராம நகர இணைப்பு, ஆன்மீக செயற்பாட்டுத் தளங்கள் போன்ற 12 துறைகளின் கீழ் முன்னெடுக்கப்படும்.

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 928 மில்லியன் ரூபாவில் 424 மில்லியன் ரூபாவில் வீதிகளுக்கும், 41 மில்லியன் ரூபாவில் நீர்ப்பாசனக் குளங்கள் அணைக்கட்டுகளுக்கும், 30 மில்லியன் ரூபா விளையாட்டுத் துறை உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், 23 மில்லியன் ரூபாவும் ஆன்மீக உட்கட்டமைப்பு வசதிகள் மறுசீரமைப்புக்கும், 17 மில்லியன் ரூபா பாடசாலை கழிவறைவசதிகள் உள்ளடங்கலான நீர்வழங்கல் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் வழங்கப்படுகின்றது.

கிளிநொச்சி

கிளிநொச்சியில் 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 156 மில்லியன் ரூபா கிராமிய வீதிகளுக்கும், சமயவழிபாட்டுத் தலங்களுக்கும் 21 மில்லியன் ரூபா, விளையாட்டுத்துறை உட்கட்டமைப்புக்களுக்கு 14 மில்லியன் ரூபாவும் ஒதுக்கிடப்பட்டுள்ளது.

மன்னார்

மன்னார் மாவட்டத்தில் 187 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில், 57 மில்லியன் ரூபா கிராமிய வீதிகளுக்கு, 56 மில்லியன் ரூபா சமய வழிபாட்டுத் தலங்களை மறுசீரமைப்பதற்கும், சிறுவர் பூங்காவுக்கு 4.4 மில்லியனும், குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளுக்கு 3.4 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் 203 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில், 45 மில்லியன் ரூபா கிராமிய வீதிகளுக்கும், 34 மில்லியன் ரூபா விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், 17 மில்லியன் ரூபா வணக்கத்தலங்களுக்கும், 9 மில்லியன் ரூபாவும் சிறுகுளங்கள் மற்றும் அணைக்கட்டுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா

வவுனியா மாவட்டத்தில் 140 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் கிராமிய வீதிகளுக்கு, 47 மில்லியன் ரூபாவும் கோவில்கள் சமயதலங்களை மறுசீரமைப்புக்கும், 22 மில்லியன் ரூபா விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஒ.5)

லஞ்சீட்டுக்குப் பதிலாக வாழையிலைப் பயன்பாடு

வல்வெட்டித்துறை நகர சபை முன்மாதிரித் தீர்மானம்

வடமராட்சி, பெப்.20

வல்வெட்டித்துறை நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் லஞ்சீட் பாவனையை முற்றாகத் தடைசெய்து அதற்குப் பதிலாக வாழை இலையைப் பயன்படுத்துவது என்று சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை நகரசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்தில் நகரபிதா கோ.கருணானந்தராசா தலைமையில் இடம்பெற்றது .

இதன்போது சூழல், கடல்வளம் என்பன மாசுபடாமலும், உயிர் ஆபத்தை தடுக்கும் நோக்கிலும், வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் பிளாஸ்ரிக், பொலித்தீன் பிளாஸ்ரிக், பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டது. அதற்கு அமைய முதற்கட்டமாக நகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள உணவகங்கள், லஞ்சீட் பாவனை உள்ள இடங்களில் அதனைத் தடைசெய்வது என்றும், அதற்குப் பதிலாக வாழையிலையைப் பயன்படுத்துவதன் மூலம் பிரதேசத்தையும் மக்களையும் பாதுகாக்கவேண்டும் என்று தெரிவித்து நகரசபை உறுப்பினர் கைலாஜினி தீர்மான வரைவு கொண்டுவந்தார். அது ஆராயப்பட்டு ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

வல்வெட்டித்துறை நகரசபையின் தீர்மானத்தைப் பாராட்டிய மக்கள், வடக்கு மாகணத்தில் பொலித்தீனுக்குத் தடைவிதிக்கப்பட்டதாகவும், கடதாசிப் பைகளைப் பயன்படுத்துவது என்றும் கடந்த ஆண்டுகளில் தெரிவிக்கப்பட்டது. பொலித்தீன் பாவனைகள் தொடர்ந்தன. இலகுவில் உக்கக்கூடிய நிறைகுறைந்த பொலித்தீன் பயன்படுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

அதுபோன்று தடைசெய்யப்பட்ட ,லஞ்சீட்டும் நிறைகுறைக்கப்பட்டு பாவனைக்குக் கொண்டுவரப்படலாம். எனவே தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதிலும் நகர சபை ஒருமித்து செயற்படவேண்டும் என்று தெரிவித்த சமூக ஆர்வலர்கள் மக்களுக்குப் பாதகமான விடயங்களை எதிர்ப்பதற்கு கட்சி வேறுபாடுகளைத் தாண்டி உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

(க-21,26)

கீரிமலைக் கரையில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ்ப்பாணம், கீரிமலைக் கடற்கரைப் பகுதியில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டு கடலில் வீசப்பட்டாரா என்ற கோணத்திலும் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். கீரிமலைக் கடலில் சடலம் ஒன்று மிதக்கின்றது என்று நேற்றுக் காலை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டனர். விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் மீட்கப்பட்ட பகுதிக்கு அண்மையில் கடற்கரையில் உடை, சோடா, மதுபானப் போத்தல் என்பன மீட்கப்பட்டுள்ளன. மதுக்குவளைகள் ஏதும் அந்தப் பகுதியில் காணப்படவில்லை.

அந்தப் பகுதியில் உள்ள பாதுகாப்புக் கமராப் பதிவுகள் ஆராயப்பட்டுள்ளன. முதல்நாள் இரவு முதல் காலை வரை அந்தப் பகுதிக்கு எவரும் வந்தமைக்கான சான்றுகள் எவையும் காணப்படவில்லை என்றும், நள்ளிரவு நேரம் ஓர் வெள்ளை நிறக் கார் ஒன்று சந்தேகத்துக்கு இடமான வகையில் வந்து சென்றுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அது தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் நேற்றிரவு வரை இனங்காணப்படவில்லை. சடலமாக மீட்கப்பட்டவர் வெளிநாடொன்றில் இருந்து வந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

(ஏ-105,26)

இலங்கையின் நிலப்பரப்பை மீள அளவீடு செய்யத்திட்டம்

கொழும்பு, பெப். 20

இலங்கையின் நிலப்பரப்பை மீண்டும் அளவீடு செய்வதற்கு இலங்கை நில அளவீட்டுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான புதிய வரைபடத்தை அறிமுகப்படுத்துவதற்காகவே புதிய அளவீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று திணைக்களத்தின் பணிப்பாளர் ஜீ.எம்.ஜீ. உதயகாந்த தெரிவித்தார்.

இவ்வாறு அளவிடுவதன் ஊடாக தற்போதுள்ள கரையோரப் பகுதியிலுள்ள மாற்றங்கள் பல உள்ளடக்கப்படும். கொழும்பு நகரின் நகர அமைப்பில் நிலப்பரப்பு அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(த)

வவுனியாவில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு

வவுனியா பிராந்திய சுகதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டம் ஒன்று நேற்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிராந்திய சுகாதார திணைக்களத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.தியாகலிங்கம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி பசுபதிராஜா, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் மகேந்திரன், தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மருத்துவர் லவன், தாபரி கலாமன்ற உறுப்பினர்கள், மாணவர்கள், மற்றும் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தொழுநோய் ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் அதனைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டதுடன், தொழுநோயைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தை கடந்த காலங்களில் முன்னெடுத்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(க-110)

செய்தி சேகரித்த ஊடகவியலாளர் மீது தாக்குதல் எனக் குற்றச்சாட்டு

தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கோப்பாய் பதில் பொறுப்பதிகாரி கைது

யாழ்ப்பாணம், பெப்.20

செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர் பொலிஸ் அதிகாரியின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். ஊடகவியலாளரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கோப்பாய் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டார். அவர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொலைக்காட்சி ஒன்றின் ஊடகவியலாளரான நடராஜா குகராஜாவே முகத்தில் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த குழு ஒன்று அங்கிருந்த வாகனங்களைத் தீயிட்டு எரித்ததுடன், வீட்டையும் சேதப்படுத்தித் தப்பிச் சென்றிருந்தது. அது தொடர்பில் செய்தி சேகரிப்புக்குச் சென்றபோதே ஊடகவியலாளர் மீது பொலிஸ் அதிகாரி தாக்கினார் என்று கூறப்படுகின்றது.

தாக்குதலில் முகத்தில் காயமடைந்த நிலையில் ஊடகவியலாளர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கோப்பாய் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் நேற்று இரவு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இன்று அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஏ-26)

மீள்குடியமர்வுப் பிரதேசமான வலி.வடக்கில் இந்தாண்டு ஆயிரத்து 500 வீடுகள் அமைப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

வலிகாமம் வடக்கில் தற்போது அமைக்கப்பட்டு வரும் 500 வீடுகளுக்கு மேலதிகமாக ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணிகள் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படும் என்று தெல்லிப்பழை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் காணிகள் பகுதி அளவில் விடுவிக்கப்பட்டு மக்கள் குடியேறி வருகின்றனர். மக்களின் காணிகளில் வீடுகள், கிணறுகள் என்பன முற்றாகச் சேதம் அடைந்த நிலையில் காணப்படுகின்றன.
விடுவிக்கப்பட்ட தமது சொந்த காணிகளில் மக்கள் சிறு கொட்டில்களை அமைத்து குடியேறி வருகின்றனர்.
வடக்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் இவர்களுக்கான வீடுகளுக்கு கடந்த 14 ஆம் திகதி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அடிக்கல் நட்டு வைத்தார். இதில் முதற் கட்டமாக 500 வீடுகள் தலா 10 லட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்படுகின்றன. இதற்கான அத்திபாரம் கட்டும் பணிகள் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளன. இந்த நிலையில் தற்போது அமைக்கப்பட்டு வரும் வீடுகளுக்கு மேலதிகமாக ஆயிரம் வீடுகள் தலா 10 லட்சம் ரூபா பெறுமதியில் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வீடுகள் அமைக்கும் பணிகள் ஏப்ரல் மாதமளவில் நடைபெறும். வலி.வடக்கில் இந்த வருடம் மொத்தமாக ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.
இது தவிர விடுவிக்கப்பட்ட கலைமகள் மகாவித்தியாலயம் உட்பட நான்கு பாடசாலைகளில் 12 மில்லியன் பெறுமதியான இரு மாடி கட்டடங்கள் அமைப்பதற்கான கேள்வி கோரல் நடைபெற்றது. இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

திருத்தமின்றி நிறைவேறிய கூட்டறிக்கை பிரதேச சபை அமர்வில் இதுவும் சாதனை

வலி.மேற்கு, பெப்.20
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டறிக்கை வழமைக்கு மாறாக எந்தவிதமான திருத்தங்களோ, விவாதங்களோ இன்றி ஒரு சில நிமிடங்களுக்குள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது..
பிரதேச சபையின் வரலாற்றில் முதன்முதலாக இடம் பெற்ற இந்த விடயம் செயலரை மட்டுமல்ல தவிசாளர் மற்றும் உறுப்பினர்களையும் வியப்படையச் செய்துள்ளது.
வலி.தென்மேற்கு பிரதேசசபையின் அதிகாரம் 1998 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டுவரை ஈ.பி.டி.பி.யின் கையிலிருந்தது. அதற்குப் பின் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரை த.தே.கூட்டமைப்பின் ஆட்சியிலிருந்தது. பிரதேச சபையில் அங்கம் வகித்த 16 உறுப்பினர்களில் 12 உறுப்பினர்கள் த.தே.கூட்டமைப்பையும் 4 உறுப்பினர்கள் ஈ.பி.டி.பி. கட்சியையும் சேர்ந்தவர்கள். இந்த நான்கு ஆண்டுகள் காலப்பகுதியில் த.தே.கூட்டமைப்பு உறுப்பினர்களின் கரங்களில் ஆட்சி இருந்த போதிலும் மாதாந்தக் கூட்டறிக்கைகள் திருத்தங்களோ விவாதங்களோ இன்றி ஏற்றுக் கொள்ளப்படவில்லை..
மாதாந்தக் கூட்ட அறிக்கைகள் பல மணி நேரங்கள் ஆராயப்பட்டுத்திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 28 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஐந்து கட்சிகளைச் சேர்ந்த இவர்களில் 12 உறுப்பினர்கள்மட்டும்த.தே.கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களாவர்.
இதுவரை நடைபெற்ற பத்து மாதாந்தக் கூட்டங்களில் கூட்டறிக்கைகள் மணிக்கணக்கில் ஆராயப்பட்டு விவாதங்களுக்குப் பின் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டு வந்தன.
கடந்த வாரம் நடைபெற்ற பெப்ரவரி மாதக் கூட்டத்தில் ஜனவரி மாதத்துக்கான கூட்டறிக்கை எந்தவிதத் திருத்தங்களோ, விவாதங்களோ இன்றி ஒரு சில நிமிடங்களுக்குள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பிரதேச சபையின் வரலாற்றில் ஆரவாரம், அமளிதுமளி இன்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இவ்விடயம் தொடர்பில் அனைவரும் பாராட்டியுள்ளனர். (ஐ-115)

ஜோன்புர தேசிய இளைஞர் பாசறை

யாழ்ப்பாணம், பெப். 20
இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஜோன்புர தேசிய இளைஞர் பாசறை 2019 ஆம் ஆண்டுக்கான நிகழ்வுகள் மார்ச் 27 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 31 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளன.
ஜோன்புர தேசிய இளைஞோர் பாசறையில் நாடு முழுவதிலிருந்தும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளையோர் பன்னாட்டிலிருந்து வருகை தரும் இளையோர்களும் கலந்து கொள்வர்.
அனைவரும் ஐக்கியமாக இன மத மொழி பேதமின்றி புரிந்துணர்வுடன், பழகுவதுடன் சகோதர இனங்களின் கலை கலாசாரம் உணவுப் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.
விளையாட்டு நிகழ்வுகள், தொழிற் பயிற்சி வகுப்புகள், வேடிக்கை வினோத நிகழ்வுகள், கலை கலாசார நிகழ்வுகள், தொழில் வழிகாட்டல் நிகழ்வுகள், பன்னாட்டு நிகழ்ச்சிகள் எனப் பல்வேறுபட்ட நிகழ்வுகள் இளையோரின் ஆளுமை விருத்திக்கும் அறிவுக்கும் பொழுதுபோக்குக்கும் விருந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
நிகழ்வுகளில் யாழ்.மாவட்டத்திலிருந்து 195 இளையோர் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதால், பங்குபற்ற விரும்பும் யாழ்.மாவட்ட இளையோர் தமது பெற்றோரின் முன் அனுமதியுடன் விண்ணப்பிக்க வேண்டுமெனவும் விண்ணப்பம் செய்தால் மாற்றம் செய்யமுடியாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

பொதுக் கூட்டம்

சாவகச்சேரி, பெப். 20
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் சிறப்புப் பொதுக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் சங்க உறுப்பினர்களை வருகை தருமாறு சங்கத் தலைவர் செ.பேரின்பநாதன் அறிவித்துள்ளார். (ஐ-9)

செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம், பெப்.20
அச்சுவேலி ஆரம்ப பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளை வியாழக்கிழமை மதியம் 1.30 மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் வே.குணசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கனடா பொறியியலாளரும் பழைய மாணவருமான க.செந்தில் வேலன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சசிகுமார், மதிப்புறு விருந்தினர்களாக அச்சுவேலி வடக்கு கிராம சேவையாளர் திருமதி குருபரன் பத்மலதா, அபிவிருத்தி அலுவலர் திருமதி தர்சினி பாலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-159)

திறன் வகுப்பறை திறப்பு நிகழ்வு

கொடிகாமம், பெப் .20
வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் திறன் வகுப்பறை திறப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் வை. விஜயகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது .
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக நலன்விரும்பி தம்பு செல்வகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
தென்மராட்சிக் கல்வி வலயத்தில் ஆரம்ப பிரிவு பாடசாலைகளில் திறன் வகுப்பறை கொண்ட இரண்டாவது பாடசாலையாக இந்தப் பாடசாலை விளங்குகின்றது. (க-159)

சடலத்தை பொறுப்பேற்கவும்

யாழ்ப்பாணம் ,பெப். 20
அடையாளம் காணப்பட்ட சடலத்தை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாண போதனா மருத்துவமனைப்பணிப்பாளர்மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.
ஊர்காவற்துறை பொலிஸாரால் கடந்த 3 ஆம் திகதி பெருமாள் பரமசிவம்(வயது 65) என்பவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
சிகிச்சை பெற்று வந்த அவர் கடந்த 11 ஆம் திகதி சாவடைந்தார். அவரது சடலத்தை உரிமை கோர எவரும் முன்வரவில்லை.
ஆகவே 7 நாள்களுக்குள் சடலத்துக்கு உரித்து உடையவர்கள் யாரும் இருப்பின் அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாண போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் கோரியுள்ளார். (க-8)

பங்குனித் திங்கள் உற்சவம் தொடர்பில் ஆலோசனை கூட்டம்

சாவகச்சேரி, பெப். 20
பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஆலய மண்டபத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.
இவ்வருடத்துக்கான பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 18, 25 மற்றும் ஏப்ரல் 1, 8 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது. இவ் உற்சவ காலங்களில் போக்குவரத்து, சுகாதாரம், குடிதண்ணீர், பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளன.
எனவே இவை சார்ந்த அரச திணைக்களங்கள் மற்றும் பொது அமைப்புகளைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு அறிவித்துள்ளார். (ஐ-9)

கரம்பைக்குறிச்சிப் பிரிவு கிராம அலுவலர் நியமனம்

சாவகச்சேரி, பெப். 20
தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கரம்பைக் குறிச்சி பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றிய நல்லதம்பி இராஜலிங்கம் தனது சேவையிலிருந்து கடந்த 15 ஆம் திகதி இளைப்பாறியுள்ளார்.
இவரின் இடத்துக்கு அல்லாரை பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றிய மோகனதாஸ் பிரகாஷ் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ஐ-9)

பெண்கள் சாரணிய அமைப்பின் தேசிய விருது பெற்ற த.துஷியந்தி

யாழ்ப்பாணம்,பெப்.20
இலங்கை பெண்கள் சாரணிய அமைப்பின் தேசிய அரச தலைவர் விருதை விக்ரோறியாக்கல்லூரி மாணவி செல்வி துஷியந்தி தனபாலசிங்கம் இவ்வருடம் தனதாக்கியுள்ளார்.
இலங்கைப் பெண்கள் சாரணிய அமைப்பின் தேசிய அரச தலைவர் விருது வழங்கும் நிகழ்வு கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது.
விக்ரோறியாக்கல்லூரி மாணவி செல்வி துஷியந்தி தனபாலசிங்கம் வலிகாமவலயத்தில் முதல் தடவையாக இவ்விருதை திருமதி சிம்றின்சிங்கிடமிருந்து பெற்றுக்கொண்டார். (க)

துஷியந்தி தனபாலசிங்கம்

கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்தவரை குற்றவாளியாக அடையாளம் கண்டது மன்று

வெளிநாடு சென்றுள்ள அவருக்கு எதிராகப் பகிரங்கப் பிடியாணை

யாழ்ப்பாணம், பெப். 20

கஞ்சா போதைப்பொருளை வைத்திருந்தவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளபோதும், அவர் வெளிநாடு சென்றுள்ளார் என்பதால் அவருக்கு எதிராகப் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நீதிவான் ஏ.எஸ்.பி.போல் நேற்று முன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

யாழ்ப்பாணத்தில் பிறிதொரு வழக்குடன் தொடர்புடையவரைப் பொலிஸார் தேடிச்சென்ற போது அவரிடம் இருந்து 3 கிராம் 900 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளை மீட்டோம் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டி நீதிமன்றத்தில் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டு விசாரணை நடந்தது. வழக்கு விசாரணையின் பின்னர் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. சந்தேகநபர் மன்றில் முற்பட்டிருக்கவில்லை. அவருக்கு பிணை வைத்தவர் முற்பட்டிருந்தார். குற்றவாளி நாட்டைவிட்டுச் சென்றுள்ளார் என்று பிணையாளி மன்றில் கூறினார். போதைப்பொருளுடன் பிடிபட்டவரைக் குற்றவாளியாக இனம் கண்ட நீதிமன்றம் அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்துள்ளது. (த-8)

கஞ்சாவுடன் கைதானவர் மீது மேலும் பல குற்றச்சாட்டுக்கள்

மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 20

கஞ்சா வைத்திருந்தவருக்கு எதிராக வேறுசில குற்றச்சாட்டுக்களும் உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்ததால் பிணை மறுக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் 2 கிராம் 275 மில்லிக்கிராம் கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்து யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். அவர், யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நீதிவான் ஏ.எஸ்.பி.போல் முன்னிலையில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார். கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த குற்றத்தை ஏற்றுக்கொள்கிறீரா? என்று கேட்டபோது ஆம் என்று ஏற்றுக்கொண்டார்.

அதேநேரம், அவருக்கு எதிராக வேறு சில குற்றச்சாட்டுக்களும் உள்ளன என்றும் அவரைப் பிணையில் விடுவிக்க வேண்டாம் என்றும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். அதனையடுத்து வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (த-8)

வீட்டில் திருடினாரென பொருள்களுடன் கைது

சாவகச்சேரி, பெப். 20

கைதடி நுணாவில் பகுதியில் ஆள்களில்லாத வீட்டில் திருடினார் என்ற குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். திருட்டுப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நுணாவில் பகுதி வீட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொருள்களையும் 6 ஆயிரம் பணமும் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் வீட்டில் வசிப்பவர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த வீடுகளை அண்மித்துள்ள வீடுகளில் பொருத்தியிருந்த மறைகாணிகளின் உதவியுடன் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-9,26)

கஞ்சாவுடன் கைதான

இருவருக்கு எச்சரிக்கையுடன் 7,500 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், பெப். 20

உடலுக்குத் தீங்கு ஏற்படுத்தும் கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த இருவரைக் கடுமையாக எச்சரித்த யாழ்ப்பாண நீதிவான் மன்று, தலா 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து அனுப்பியது.

யாழ்ப்பாணத்தில் ஒரு கிராம் கஞ்சா போதைப்பொருள்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டனர். தனித்தனியே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. (த-8)

யாழ்ப்பாண மாவட்டத்தில்

சீவல் தொழிலாளிகளின் எண்ணிக்கை நான்கில் ஒரு பங்காகக் குறைந்துள்ளது

யாழ்ப்பாணம், பெப் 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் சீவல் தொழிலாளிகளின் எண்ணிக்கை நான்கில் ஒரு பங்காகக் குறைந்து காணப்படுவதாக பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. இந்தத் தொழிலை அநேகமானோர் சமூகம் சார்ந்து பார்க்கப் பட்டமையாலும் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவடையக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாணமாவட்டத்தில் போருக்கு முன்னரான காலப்பகுதியில் சுமார் 25 ஆயிரம் பேர் சீவல் தொழிலில் ஈடுபட்டனர்.

கள்ளு மற்றும்பதநீருக்கான விலைகளும் வரையறை செய்யப்பட்டு அவை பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களால் கொள்வனவு செய்யப்பட்டது.

தற்போது இந்த தொழிலை அநேகமானோர் சமூகம் சார்ந்து பார்ப்பதாலும் அடுத்த சந்ததிக்கு அதாவது பிள்ளைகள் மற்றும்உறவுகளுக்கு அந்த தொழிலை கற்றுக்கொடுக்க முன் வராமையாலும் சீவல் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது சுமார் 6 ஆயிரம் பேர் வரையிலே சீவல் தொழிலை மேற்கொள்ளுகின்றனர்.

பனை சார்ந்த அபிவிருத்தி வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 19 கூட்டுறவுச் சங்கங்கள், மூன்று கொத்தணிகள், ஒரு சமாசம் யாழ்ப்பாணத்தில் உள்ளன. அவை தமது வேலைகளை செய்தாலும் பனை மரங்களில் ஏறுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றது.தற்போது ஒருவர் பனை மீது ஏறித் தான் ஆக வேண்டும் அப்போது தான் பனை சார்ந்த உற்பத்தி நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

பனை ஏறுவதற்கு வேறு இடங்களில் என்ன தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது என்பது தொடர்பில் ஆராய்ந்தும் தற்போது தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு அதனை வழங்கி அவர்களை உற்சாகப் படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஈ-7)

சாரதிப் பயிற்சிக்கான அனுமதிப் பத்திரத்துடன் போதையில் சாரத்தியம்

இன்றுவரை மறியல்

யாழ்ப்பாணம், பெப். 20

சாரதி உரிமப் பத்திரம் இல்லாது சாரதிப் பயிற்சி அனுமதிப் பத்திரத்துடன் மதுபோதையில் உந்துருளி செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதானவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிமன்று நேற்று உத்தரவிட்டது. அவரை யாழ்ப்பாணப் போக்குவரத்துப் பொலிஸார் கைது செய்திருந்தனர். நீதிமன்றில் அவர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி கைது செய்யப்பட்டவரின் சாரதிப் பயிற்சி அனுமதிப் பத்திரத்தை மன்றில் சமர்ப்பித்தார்.

இதனை ஆராய்ந்த நீதிவான் ஏ.எஸ்.பி.போல், சாரதி உரிமப் பத்திரம் எடுக்க முன்னரே மது போதையில் வாகனம் செலுத்துகிறார் என்றால் அதை எடுத்த பின்னர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டாரா? என்று கேள்வி எழுப்பினார்.

சந்தேகநபரை இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-8)

காணிப்பிணக்குக் காரணமாக

சகோதரனை வெட்டினரென கைதானோருக்குப் பிணை

யாழ்ப்பாணம், பெப். 20

காணிப்பிணக்குக் காரணமாக கூடப்பிறந்த சகோதரனைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைதான இருவரையும் கடுமையாக எச்சரித்த யாழ்ப்பாண நீதிவான் மன்று பிணை வழங்கியது.

கோப்பாயில் சகோதரர்கள் மூவருக்கு இடையே காணிப் பிணக்கு ஏற்பட்டது. இறுதியில் இரண்டு சகோதரர்கள் சேர்ந்து மூன்றாவது சகோதரனை கத்தியால் வெட்டினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

கத்தியால் வெட்டினர் என்ற குற்றச்சாட்டில் கோப்பாய்ப் பொலிஸார் இருவரையும் கைது செய்தனர். யாழ்ப்பாண நீதிவான் மன்றில் வழக்குத் தொடுத்தனர். நீதிவான் ஏ.எஸ்.பி.போல் முன்னிலையில் நேற்றுமுன்தினம்வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முதுகு,கை போன்றவற்றில் வெட்டிக் காயப்படுத்தினர் என்றும் காயப்பட்டவரின் வீட்டையும் அடித்து உடைத்தனர்என்றும்முறைப்பாட்டாளர் சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி அவ்வாறு நடக்கவில்லை வேறு காயங்களைக் காட்டி இவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் ஆராய்ந்த நீதிவான் சந்தேக நபர்கள் இருவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள்பிணைகளில் விடுவித்தார். வழக்கு விசாரணைகள் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. (த-8)

திருடியவரின் படங்களை முகப்புத்தகத்தில் பதிவிட்டதால் சந்தேகத்தில் ஒருவர் மக்களின் உதவியுடன் பிடிபட்டார்!

சாவகச்சேரி, பெப். 20

உணவகத்தில் திருடியவர் தொடர்பான விவரங்களை முகநூலில் பதிவுசெய்து, அது பற்றித் தகவல் கிடைத்ததால் சந்தேகநபர் பிடிபட்டார்.

அவரை, சாவகச்சேரியிலிருந்து முல்லைத்தீவுக்குச் சென்று மக்களின் உதவியுடன் பிடித்து சாவகச்சேரிக்குக் கொண்டுவந்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார் உணவக நடத்துநர்.

இந்தத் திருட்டு சாவகச்சேரி மருத்துவமனைக்கு அருகில்உள்ள உணவகமொன்றில் கடந்த ஜனவரி 8ஆம் திகதி இரவு இடம்பெற்றது. ஓடு பிரித்து உள்நுழைந்த திருடன் முதலில் கடையில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணிகளின் செயற்பாடுகளை நிறுத்திவிட்டு உணவகத்துக்குள் வைக்கப்பட்டிருந்த 7 லட்சம் ரூபா பணத்தையும் 3 லட்சம் ரூபா பெறுமதியான அலைபேசி மீள்நிரப்பு அட்டைகளையும் திருடிச் சென்றுள்ளார்.

அது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துதானும் விசாரணையில் இறங்கினார் கடை நடத்துநர்.

கடைக்குள் செயலிழக்காமல் இருந்த மறைகாணியின் உதவியுடன் அதற்கு முன்னைய நாள்களில் கடைக்கு வந்திருந்தவர்கள் தொடர்பாகப் பார்வையிட்டபோது முதல் நாளில் அங்கு உணவருந்த வந்திருந்தவரும் திருட்டின் போது செயற்பட்ட மறைகாணிப் பதிவில் காணப்பட்ட நபரும் ஒரேமாதிரியாக இருந்துள்ளார் என்பதை இயன்றளவு உறுதி செய்துகொண்டார்.

அந்தப் படங்களை முகநூலில் பதிவு செய்து அவர் தொடர்பான விவரங்களைத் தமக்குத் தெரியப்படுத்துமாறும் இந்தத் தகவலை அனைவருக்கும்பகிருமாறும்வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தப் பதிவைப் பார்த்த முல்லைத்தீவுஉடையார்கட்டைச் சேர்ந்த ஒருவர் அங்குள்ள ஒருவர் பற்றிக் கடை உரிமையாளருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

உணவக உரிமையாளர் நேற்றுமுன்தினம் சிலருடன் அங்கு சென்றபோது இவர்களைக் கண்டதும் சந்தேக நபர் அங்கிருந்து தப்பியோட முயற்சித்துள்ளார். பொதுமக்களின் உதவியுடன் அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

அவரை வாகனத்தில் கொண்டு வந்து சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

பொலிஸார் இந்த நபரை உணவகத்துக்கு முன்பாக சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வைத்திருந்துவிட்டுக்கொண்டுசென்றுள்ளனர். அவர் வேறு இடங்களிலும் திருட்டில் தொடர்புபட்டுள்ளாரா என்பது பற்றி விசாரணை இடம்பெறுகின்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-9,26)

நள்ளிரவு மணல் கடத்தல்: மடக்கியது அதிரடிப் படை

தென்மராட்சி, பெப். 20

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த வாகனத்தை நள்ளிரவில் மறைந்திருந்து சிறப்பு அதிரடிப் படையினர் வழிமறித்து சாரதியைக் கைது செய்தனர். இந்தச் சம்பவம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அங்கு இரவில் வாகனங்களில் மணல் கடத்தப்படுவதாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அதிரடிப் படையினர் வாகனம் வரும் வீதியில் மறைந்திருந்தனர்.

நள்ளிரவு 12 மணியளவில் வந்த வாகனத்தை மறித்துச் சோதனையிட்டபோது அனுமதியின்றி மணல் அகழ்ந்து சென்றமை தெரியவந்தது. சாரதி கைதானார். வாகனம் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-9)

முப்பது ஆண்டுகாலப் போர்

தொழில் வளர்ச்சியை பூச்சியமாக்கியுள்ளது

மன்னாரில் பிரதி அமைச்சர் வேதனை

மன்னார்,பெப்.20

வடக்குமாகாணத்தில் இடம் பெற்ற 30 வருட கால போர் காரணமாகத் தொழில் வளர்ச்சி பூச்சியத்தை விட தாழ்ந்த மட்டத்திலே காணப்பட்டது.

வடமாகாணம் தவிர்ந்து ஏனைய மாகாணங்களில் போர் இடம்பெறவில்லை. ஒரு சில காரணங்களைத் தவிர ஏனைய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் ஒரு முன்னேற்றப் பாதையிலே சென்று கொண்டிருந்தார்கள். இவ்வாறு கைத்தொழில் மற்றும் வர்த்தகப் பிரதி அமைச்சர் புத்திக பத்திரன தெரிவித்தார்.

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள கைத் தொழில்மற்றும்சிறுகைத்தொழில்முயற்சியாளர்களுக்கும், கைத்தொழில் மற்றும் வர்த்தகப் பிரதி அமைச்சர் புத்திக பத்திரனவுக்கும் இடையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் சிறப்புக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களை கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் தொடங்கி நவம்பர் மாதம் வரை சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்ள இருந்தோம்.

ஆனால் முடியவில்லை.வரவு - செலவு திட்டத்துக்கு முன் பாக உங்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளுக்கு விடை கண்டு அவற்றுக்குத் தீர்வுகளை காண்பதற்காக நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டபோதும், ஒக்ரோபர் 26ஆம் திகதி ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலை காரணமாக அந்த முயற்சி தோல்வியில் முடிவடைந்தது - என்றார்.

நிகழ்வில் பிரதேச செயலர்கள், திட்டமிடல் அதிகாரி, திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாவட்டத்தில் உள்ள கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். (க-56)

முல்லைத்தீவு விபத்து:

பொலிஸாரின் பக்கச்சார்பை கண்டித்து மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு,பெப்.20

விபத்து தொடர்பில் பொலிஸார் விபத்தை ஏற்படுத்தியவர்களிடம் கையூட்டுப் பெற்று பக்கசார்பாக செயற்படுகின்றனர் என்று குற்றம் சாட்டியதுடன் இதுவரை எவரையும் கைது செய்யாததைக் கண்டித்தும் முத்துஐயன் கட்டு மக்கள் போராட்டம் நடத்தினர்.

முத்துஐயன்கட்டுவலதுகரைமுதன்மை வீதியை மறித்து ரயர் எரித்து நேற்று முற்பகல் 10 மணியளவில் அந்தப் பகுதி கிராம மக்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு முத்துஐயன் கட்டுப்பகுதியில் வலதுகரை முதன்மை வீதியில் கடந்த திங்கட்கிழமை உந்துருளியில் பயணித்த மூவர் உருளியில் செல்ல முற்பட்ட தாயார் ஒருவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினர்.

விபத்தில் படுகாயமடைந்த தாயார் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக வவுனியா மருத்துவமனைக் மாற்றப்பட்டு அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.இதில் முத்துஐயன்கட்டு முதலாம் கண்டத்தைச் சேர்ந்த 41 வயதுடைய சுபாதீஸ்வரன் நந்தினிதேவி என்ற குடும்ப பெண்ணே படுகாயமடைந்தார். இந்த விபத்து தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச வீதிபோக்குவரத்து பொலிஸாருக்கு எதிராகவே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடியதுடன் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை தாம் மேற்கொள்வதாகவும் தெரிவித்தனர். இதனையடுத்து போராட்டத்தைக் மக்கள் கைவிட்டனர். (ஐ-ரி3)

புவனேஸ்வரியின் நினைவு நாளில் பல்வேறு உதவிகள்

வவுனியா,பெப்.20

மறைந்த திருமதி புவனேஸ்வரியின் ஐந்தாம் ஆண்டு நினைவை முன்னிட்டு வவுனியா புவனேஸ்வரி அன்பு இல்லத்தின் ஏற்பாட்டில் பல்வேறு உதவிதிட்டங்கள் வழங்கபட்டன.

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள புவனேஸ்வரி இல்லத்தில் குறித்த நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன

23 பாடசாலைகளைச் சேர்ந்த 600 மாணவர்களுக்கு கல்விசார் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.தெரிவுசெய்யப்பட்ட 7 மாணவர்களுக்கு உருளிகளும், பல்கலைகழக மாணவர்கள் சிலருக்கு நிதி உதவியும் வழங்கப்பட்டன. அத்துடன் சிறப்பு மருத்துவமுகாம், கண்சிகிச்சை முகாம் என்பனவும் நடைபெற்றன இலவசமாக மூக்கு கண்ணாடிகளும் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் விருந்தினர்களாக மூத்த ஆசிரியர் முத்துலிங்கம் , பிரதேசச்செயலர் கா.உதயராசா, பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.அமிர்தலிங்கம், முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-110)

மக்களுக்கான பணியில் சமாதான நீதிவான்கள் சங்கம்

வினாசியோடை மாணவர்களுக்கு உதவி

கிளிநொச்சி, பெப்.20

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்கள்கல்விபயிலும்கிளிநொச்சி, வினாசியோடை மகாவித்தியாலயத்துக்குபலவழிகளிலும்உதவிகளைச்செய்துபாடசாலையைமுன்னேற்றுவதாகவட இலங்கைசமாதானநீதிவான்கள் சங்கம்உறுதியளித்துள்ளது.

பூநகரிகௌதாரிமுனையில்உள்ள கிளிநொச்சி வினாசியோடை மகாவித்தியாலயத்தில்'மக்களுக்காக மக்கள் பணி' எனும் வட இலங்கைசமாதானநீதிவான்கள் சங்கத்தின் செயற்றிட்டத்தில் ஆரம்பப்பிரிவுமாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமைநடைபெற்றது.

பாடசாலையைச் சேர்ந்த 50மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

பாடசாலையின் தேவைகள் குறித்துபாடசாலைச்சமூகத்தால் வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்துக்கு எடுத்துக் கூறப்பட்டது. வகுப்பறை வசதிகள், மற்றும் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது என்று பாடசாலைச்சமூகம்சங்கத்தைக்கோரியது. வகுப்பறைக் கட்டடங்கள் தொடர்பில் பலருடன் பேசி அவற்றைஅமைப்பதற்கானஏற்பாடுகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்த வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் தலைவர் பி.ஜெயவிந்தன் குடிதண்ணீரைப்பெற்றுக்கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

அங்குள்ளகுடிதண்ணீர்க்கிணறு ஒன்றிலிருந்து பாடசாலைக்கு குடிதண்ணீரைக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை அவர் மேற்கொண்டுள்ளார் என்று சங்கம் தெரிவித்தது. இதனை அடுத்துவடஇலங்கைசமாதான நீதிவான்சங்கத்தினருக்குபாடசாலைச் சமூகம் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தது. தொடர்ந்தும்பாடசாலைக்குத் தேவையான உதவிகளைசெய்துதருவதாகசங்கத்தினர்தெரிவித்தனர்என்றும்தெரிவிக்கப்பட்டது.

கற்றல் உபகரணங்கள் கையளிக்கும்நிகழ்வில்வடஇலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத் தலைவர் கலாநிதி பி.ஜெயவிந்தன், சங்கத்தின்செயலர்கலாநிதி எஸ்.திசையானந்தன், உபசெயலர்ஸ்ரீமான்மு.சு.கணேஸ்வரன், வடஇலங்கைசமாதானநீதிவான்கள் சங்க கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் த.அரியரட்ணம், யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர்பெ.திருச்செல்வம்,மருத்துவ கலாநிதி க.ஜெயச்சந்திரமூர்த்தி, கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் பொ.வன்னியசிங்கம், பாடசாலைஆசிரியர்கள்,சமூகஅமைப்புக்களின்பிரதிநிதிகள், மாணவர்கள்எனப்பலரும்கலந்துகொண்டிருந்தனர். (ஐ-21, 237)

இளைஞர் கழகத் தெரிவு

முல்லைத்தீவு, பெப். 20

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளன நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் கடந்த 17 ஆம் திகதி கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில்இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் கலந்தகொண்டார்.

இளைஞர் கழக கரைதுறைப்பற்று பிரதேச சம்மேளனத் தலைவர் மு.சொகைல் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் கழக சமேளனத்தின் புதிய நிர்வாகத்தினர் தெரிவுசெய்யப்பட்டனர். நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் திருமதி.கே.சரோஜா, முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ம.சசிக்குமார், கரைதுறைப்பற்று இளைஞர் சேவை அதிகாரி சி.சதீஸ்குமார், த.இரதீசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-246)

முல்லையில் 438 ஆசிரியர்கள் வெற்றிடம்

முல்லைத்தீவு,பெப்.20

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முல்லைத்தீவு மற்றும் துணுக்காய் கல்வி வலயங்களில் 438 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன என்று மாவட்டச் செயலகத்தால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 147 ஆசிரியர்களுக்கும், துணுக்காய் கல்வி வலயத்தில் 291 ஆசிரியர்களுக்கும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஆயிரத்து 462 ஆசிரியர்கள் தேவையாக உள்ள நிலையில், ஆயிரத்து 315 ஆசிரியர்களே காணப்படுகின்றார்கள்.

துணுக்காய் வலயத்தில் 870 ஆசிரியர்கள் தேவையாகவுள்ள இடத்தில், 579 ஆசிரியர்களே கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி தலைமை அமைச்சர் தலைமையில் அபிவிருத்தி தொடர்பிலான கலந்துரையாடலின் போதும் மாவட்ட செயலகத்தால் இந்த புள்ளி விவரம் தெரியப்படுத்தப்பட்டது. (க-ரி3)

கரந்தாய் காணி விவகாரம்:

தென்னைச் செய்கைச் சபை அடாத்து; ஆணைக்குழுவின் உத்தரவும் உதாசீனம்

கிளிநொச்சி, பெப்.20

தென்னைப் பயிர்ச் செய்கை சபை ஆக்கிரமித்த கரந்தாய் மக்களுடைய காணிகளை மீண்டும் அவர்களிடமே ஒப்படைப்பதற்கு மனிதஉரிமைகள் ஆணைக்குழு விதித்த காலக் கெடு இன்றுடன் நிறைவு பெறுகிறது. ஆணைக்குழுவின் உத்தரவை உதாசீனம் செய்த தென்னைப் பயிர்ச் செய்கை சபை காணிகளை ஒப்படைக்கவில்லை. நாளையதினம் காணிகளை ஒப்படைக்காது விடின் அந்தக் காணிகளுக்குச் சென்று குடியமர்வோம் என்று காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

பின்னணி

1976ஆம் ஆண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் கரந்தாய் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன. போரை அடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

இடம்பெயர்ந்த மக்கள் 2015ஆம் ஆண்டு அங்கு வந்து தமது காணிகளில் கொட்டில்களை அமைத்துக் குடியிருந்தனர்.

அந்தக் காணிகள் தெங்குப் பயிர்ச் செய்கை சபையினரால் உரிமை கோரப்பட்டதுடன் அங்குமீளக்குடியமர்ந்த மக்களை பளைப் பொலிஸாரின் உதவியுடன் விரட்டியடித்தனர்.

பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர். தங்களுடைய காணிகளிலேயே அந்த மக்கள் அத்துமீறிக் குடியமர்ந்தனர் என்று தெரிவித்த தென்னைப்பயிர்ச் செய்கை சபையினர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணைகளில் மக்கள் தங்களுடையது தான் அந்தக் காணி எனக் கோரும் ஆவணத்தை சமப்பிக்குமாறு தெரிவித்து கைது செய்யப்பட்ட அனைவரையும் மன்று விடுவித்தது.

இந்த விடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்குக் கொண்டுவரப்பட்டது. காணிகள் தொடர்பில் ஆராயப்பட்டன. காணி சீர்திருத்த ஆணையாளர் அது மக்களுடைய காணி தான் என்பதை ஆணித்தரமாக கூறினார். தென்னைப்பயிர்ச்செய்கை சபையினருக்கு அந்தக் காணிகளில் இருந்து வெளியேற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கால அவகாசம் வழங்கியது. ஐந்துக்கும் மேற்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கரந்தாய் காணி தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இருந்தும் எந்தத் தீர்வுகளும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. தென்னைப் பயிர்ச் செய்கை சபையினர் மக்களுடைய அந்தக் காணிகளில் தங்களுடைய ஆதிக்கத்தைத்தொடர்ந்தும்செலுத்தி வருகின்றனர், காணிகளில் தென்னைப்பயிர்களை நட்டனர். மக்கள் மனிதஉரிமைஆணைக்குழுவின் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர், தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் அதிகாரிகள், காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரிகள் உள்ளிட்டோர் ஆணைக்குழுவால் விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டனர். விசாரணைகள் இடம்பெற்றன.

விசாரணைகளை அடுத்து தென்னைப் பயிர்ச் செய்கை சபையினர் அபகரித்துள்ள கரந்தாய் காணி மக்களுடையது என்று முடிவு செய்யப்பட்டது. மக்களுக்குக் காணிகளை வழங்கும் நடவடிக்கைகளைப் பிரதேசசெயலகம்முன்னெடுத்துள்ளது என்று பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் கரந்தாய்க் காணியைத் தென்னைப் பயிர்ச்செய்கை சபை மக்களிடம் கையளிக்கவில்லை.

காணிகள் மக்களுடையது என்று மீண்டும் நிரூபிப்பு

இது தொடர்பில் காணி உரிமையாளர்கள்மனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். ஆணைக்குழு களத்தில் இறங்கியது. தென்னைப் பயிர்ச் செய்கை சபையினர், காணி சீர்திருத்தஆணைக்குழு, நிலஅளவைத் திணைக்களத்தினர், காணி உரிமையாளர்கள் அனைவரும்கடந்த 14ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டனர். அங்கு விசாரணைகள் இடம் பெற்றன. விசாரணைகளில்கரந்தாயில் உள்ள 21ஏக்கர் காணிகள் மக்களுடையவையே என்று நிலஅளவைத்திணைக்களத்தினர்ஆணைக்குழுவுக்குக் கூறினர். கரந்தாயில் மக்களுக்குக்குச் சொந்தமான காணிகள்உள்ளன என்றுமீண்டும் நிரூபிக்கப்பட்டது.

கரந்தாயில் மக்களுடைய காணிகளை அபகரித்துள்ள தென்னைப் பயிர்ச்செய்கைசபைஏழுநாள்களில் அந்தக் காணிகளை மக்களிடம் கையளித்துவிட்டு வெளியேற வேண்டும் என்று ஆணைக்குழு கட்டளையிட்டது. காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவே இந்த நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும் என்றும்தெரிவித்தது.

அது தொடர்பில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குமனிதஉரிமைகள் ஆணைக்குழு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்தது.

காணிகளில் குடியமர மக்கள் தயார்

குடியமர்ந்த காணிகளை விட்டு துரத்தப்பட்டதால் கரந்தாய் மக்கள் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இரவல்வீடுகளிலும், கொட்டில்களிலும் வாழ்க்கை நடத்திவருகின்றனர். மனித உரிமைகள் ஆணைக்குழு பெற்றுக் கொடுத்த தீர்ப்பைஅடுத்துஅந்தக்காணிகளில் குடியமர்வதாக முடிவு செய்துள்ளனர்.

காணிகளைவிட்டுவெளியேறுமாறு மனிதஉரிமைகள்ஆணைக்குழு 7 நாள்கள் அவகாசம் கொடுத்தும் தென்னைப் பயிர் செய்கை சபை அங்கிருந்து வெளியேறவில்லை. அவகாசம் நாளையதினம் நிறைவு பெறுகிறது. நாளையதினம் யார் தடுத்தாலும், கைதுசெய்தாலும்நாம் எமதுகாணிகளுக்குள்செல்வோம். அங்குகொட்டில்கள் அமைத்தாவது குடியேறுவோம் என்று கரந்தாய் மக்கள் தெரிவித்தனர். (ஜ-216)

அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, பெப். 20

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய டிப்பர் வாகன சாரதியை விளக்கமறியலில் வைத்தது கிளி நொச்சி நீதிவான் மன்று.

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புலோப்பளையில் அனுமதிப்பத்திரம் இன்றி தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம் பெறுகிறது. நேற்றுமுன்தினமும் அவ்வாறு இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலின்படி, பொலிஸார் அங்கு திடீர் சோதனை நடத்தினர்.

அனுமதி பெறாது மணல் ஏற்றிச் சென்றமை தெரிய வந்தது. சாரதி கைது செய்யப்பட்டார். 14 நாள்களுக்கு அவரை விளக்கமறியலில்வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (த-6)

ஏரியில் குளித்த காதலர்கள் சாவு

கொழும்பு, பெப். 20

ஏரியில் குளித்து கொண்டிருந்த இளம் காதலர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் புத்தளத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்றது.

புத்தளம், நவத்தேகம, வெலேவெவ பகுதியில் தேசத்தில் உறவினர்கள் வீட்டுக்குச் சென்றிருந்த காதலர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வென்னப்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான இளைஞன் மற்றும் 17 வயதான பெண்ணுமே உயிரிழந்துள்ளனர்.

இருவரும் தங்கள் வீடுகளுக்குத்தெரியாமல் திருமணம்செய்து கொள்ளும் நோக்கில் உறவினர்களின் வீட்டுக்குச் சென்றிருந்தனர்.

அங்குள்ள ஏரியில் குளித்துக்கொண்டிருந்தபோது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த 17 வயதுப்பெண் காணாமல் போயுள்ளார் என்று அவரது பெற்றோர் மாரவில, கொஸ்வத்தை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தனர் என்றும் இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்திருக்கக் கூடும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)



பீடி சுற்றும் 820 கிலோ இலைகள் மீட்பு

மன்னார், பெப். 20

820 கிலோக்கிராம் நிறை கொண்ட பீடி சுற்றும் இலைகள் அடங்கிய பொதிகளை கடந்த செவ்வாய்க்கிழமைகாலை மீட்டுள்ளதாக மன்னார் அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து கீலிக்கரையான் கடற்பகுதியில் சோதனை நடத்தியபோது பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் 13 பொதிகள் மீட்கப்பட்டன. எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை இடம் பெறுகிறது என்று அடம்பன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-56)

வவுனியாவில்

நடைபாதைக் கழிவுகளால் நுளம்பு பெருகும் அபாயம்

வவுனியா.பெப்.20

வவுனியா இலுப்பையடி, சந்தை சுற்றுவட்ட வீதிகளில் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதால் அவற்றின் கழிவுகள் கால்வாய்களை அடைத்து தண்ணீர் தேங்கி அந்தப் பகுதியிலிருந்து நுளம்பு பெருகும் சூழல் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். நடைபாதை வியாபாரத்தால் இலுப்பையடி பேருந்து தரிப்பிடத்தில் வாகன நெரிசல் ஏற்பட்டு அந்தப் பகுதியில் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலுப்பையடி, சந்தை சுற்றுவட்ட வீதிகளிலுள்ள கால்வாய்கள், நடைபாதையின் இருபகுதி ஓரங்களில் சிலர் வியாபாரம் மேற்கொண்டு வருகின்றனர். தமது கழிவு குப்பைகளை அந்தப் பகுதியில் வீசிவருகின்றனர். கால்வாயில் செல்லும் கழிவு தண்ணீர் அங்கு தேங்குகின்றது. அதிலிருந்து நுளம்புகள் பெருகுகின்றன.

இது தொடர்பில் நடைபாதை வியாபாரிகளிடம் கேட்டபோது,

எமது வாழ்வாதாரத்துக்காகவே நாம் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றோம். அநேகமாக கழிவுகளை அகற்றி வடிகான்களை துப்புரவாகவே வைத்திருக்கிறோம். வேறு பகுதிகளில் இருந்தும் கழிவுகள் வாய்க்காலூடாக வருகிறது. இரவு வேளைகளில் இனம்தெரியாதநபர்கள் கழிவுகளை இங்கு கொட்டிசெல்கின்றனர். நகரசபை தலைவர் எமக்கு நல்லமுறையில் ஒத்துழைப்புகளை வழங்கிவருகின்றார். எனவே தவறுகள் நடைபெற்றிருந்தால் இனிவரும் காலங்களில் அதனை தொடராது கழிவுகளை அகற்றி சுகாதாரமாக செயற்படுவதாக தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக சுகாதார ஊழியர்களை விரைவாக அனுப்பிக் கழிவுகளை அகற்றுவதாக நகரசபையின் உபதவிசாளர் சு.குமாரசாமி தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாக பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு அமைய நடைபாதை வியாபாரம் மேற்கோள்வதற்கு நகரசபையால் தடைவிதிக்கப்பட்டு வருகின்றது. வியாபாரிகளின் பொருள்களும் பறிமுதல் செய்யபட்டுவருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஜ-110)

இந்திய வம்சாவளியினருக்கு பிரதிநிதித்துவம் இல்லையே

வடக்கில் 40ஆயிரம் பேர் இருந்தும் இந்த நிலை என்கிறார் எம்.பி.நடராஜ்

வவுனியா, பெப். 20

வவுனியா மாவட்டத்தில் 40 ஆயிரம் இந்திய வம்சாவளி மக்களின் வாக்குகள் இருந்தும் எமது இனம் சார்ந்து ஒருவரைத் தெரிவுசெய்யவேண்டும் என்று எமது மக்கள் சிந்திக்கவில்லை இவ்வாறு வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.பி.நடராஜ் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற அகதேசிய முற்போக்குக் கழகத்தின் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்கு எமது அரசியல் பிரதிநிதித்துவம் என்பது முழுமையாக அடையப்படாத நிலை இருக்கிறது. 1993ஆம் ஆண்டுக்குப் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வை.பாலசந்திரனைத் தவிர வேறு எவருமே எமது இனம் சார்ந்து தெரிவு செய்யப்படவில்லை. இது கவலைக்குரிய விடயம். கடந்த மாகாணசபைத் தேர்தலில் கூட இந்தியவம்சாவளி மக்களை மையப்படுத்தி வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக இருவர் போட்டியிட்டிருந்தோம். கிடைத்த நியமன ஆசனத்தில் ஒன்றை முழுமையாக எமக்கு வழங்குமாறு கூட்டமைப்பைக் கேட்டிருந்தோம். அது சாத்தியப்படவில்லை. ஒருவருடம் மாத்திரமே எனக்கு வழங்கப்பட்டது.

இந்த மக்களை ஒன்றிணைக்கவேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டது. அது பிரிவினைவாதமல்ல. சிதறி இருக்கின்ற மக்களை ஒன்றிணைத்து நாடாளுமன்ற, மாகாண சபைகளில் பிரதிநிதித்துவத்தைப் பெறவேண்டும் என்பதற்காகவே இந்தக் கட்சி உருவாக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு நோக்கி நாம் வருகை தந்தபோது எம்மை இங்குவாழும் மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் வரவேற்றிருந்தனர். வடக்கு - கிழக்கில் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளியினர் வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு இலட்சம் பேர் வரையில் வாக்காளர்களாகக் காணப்படுகின்றார்கள். எனினும் இங்கு இருக்கின்ற அலுவலர்கள், குடிமக்கள் அரசியல்வாதிகள் எமது மக்களின் சிலவிடயங்களைக் கண்டும் காணாதநிலை காணப்படுகின்றது. போராட்டகாலத்தில் கூட 30 ஆயிரம்போராளிகள் இந்த மக்கள் சார்பாகப் பங்கெடுத்திருந்தனர் - என்றார். (க-110)

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர் கைது

கிளிநொச்சி, பெப். 20

நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த இருவர் 4 நாள்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்குத் தவணைகளுக்குச் செல்லாதவர்களுக்கு அந்தந்தப் பொலிஸ் நிலையங்கள் ஊடாக மன்று பிடியாணை பிறப்பிப்பதற்கு இணங்க பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை மற்றும் வெற்றிலைக்கேணி பகுதிகளில் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-6)

பழைய மாணவர் சங்க சிறப்புப் பொதுக்கூட்டம்

வவுனியா,பெப்.20

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க சிறப்புப் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முதன்மை மண்டபத்தில் அதிபர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இறைவணக்கம்,தலைமை உரை, கடந்த கூட்ட அறிக்கை ,அபிவிருத்திக் குழு தொடர்பான அறிக்கையுடன் பொதுவான விடயங்களும் கலந்தாலோசிக்கப்படவுள்ளன என்று பாடசாலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (க-222)

ஆன்மீகச் சுற்றுலா சென்ற முதியவர்கள்

பளை,பெப்.20

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் இயங்கும் இத்தாவில், முகாவில் ஆகிய முதியோர் சங்கங்களைச் சேர்ந்த முதியவர்கள் ஆன்மீகச் சுற்றுலாவுக்காக அனுராதபுரத்துக்கு அண்மையில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் முதியோர்களின் உளநல செயற்பாடுகளை மேம்படுத்த ஆன்மீகத் தலங்களுக்கு அழைத்துச் செல்லும் திட்டத்தின் கீழ் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு இந்து பௌத்த வழிபாட்டுத் தலங்களைத் தரிசித்தனர்.

மாவட்ட அலுவலகத்தால் மாவட்டத்தில் இயங்கும் முதியோர் சங்கங்களைச் சேர்ந்த முதியோர்களை திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா வெந்நீருற்று, திருக்கோணேச்சரம், பத்திரகாளி அம்பாள் ஆலயம் மற்றும் மன்னார் மாவட்டத்தில் மடு திருக்கேதீச்சரம் போன்ற ஆன்மீகத் தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

கல்வியின் அவசியம் தொடர்பில் கருத்துரை

வவுனியா,பெப்.20

கல்வியின் அவசியம் தொடர்பில் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக கருத் துரை வழங்கும் நிகழ்வு வவுனியா ஈஸ்வரிபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சமூகசேவை அலுவலகர் செ.ஸ்ரீநிவாசன் கருத்துரையை வழங்கினார். கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வெளிச்சம் நிறுவன உறுப்பினர் லம்போதரன், கார்த்திக் சமூக ஆர்வலர் சுரேந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கருத்துரை நிகழ்வில் கலந்து கொண்ட 30 மாணவர்களுக்கு சிவானந்தன் நற்பணி மன்றத்தின் சுரேஷ் சிவானந்தன் குடும்பத்தினர் கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (ஜ-222)

அரசியல் தீர்வுக்கு உத்தரவாதமளிக்கும் வேட்பாளரையே ஈ.பி.டி.பி. ஆதரிக்கும்

யாழ்ப்பாணம், பெப். 20

தமிழ் மக்களின் அரசியல் உரிமைக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நிலையான அரசியல் தீர்வை வழங்க உத்தரவாதமளிக்கும் வேட்பாளரையே அடுத்த அரசதலைவர் தேர்தலில் ஈ.பி.டி.பி ஆதரிக்கும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் இளைஞர் அணியின் பிரதிநிதிகள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவைச் சந்தித்தபோது குழு மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியதுஎன்று ஈ.பி.டி.பி. விடுத்த செய்திக் குறிப்பில் உள்ளது. அதில், கடந்த அரசதலைவர் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதாகவும், அபிவிருத்தி உட்பட அன்றாடப்பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுத் தருவதாகவும், பன்னாட்டு நீதிப்பொறிமுறை ஊடாக போர்க்குற்றவிசாரணையை முன்னெடுப்பதாகவும், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து தருவதாகவும், படையினர் வசமுள்ள தனியார் காணிகளை முழுமையாக மீட்டுத் தருவதாகவும் பல விடயங்களைக் கூறியபோதும் இதுவரை எதுவும் நடக்கவில்லை - என்றுள்ளது. (த)

"என்ர பிறைஸ் சிறிலங்கா" திட்டத்தில் வடக்கில் 51 மில்லியன் ரூபா கடன்கள்

இலங்கை வங்கி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.20

சிறிய, நடுத்தர மற்றும் இளம்தொழில்முனைவோரினை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் "என்ர பிறைஸ் சிறிலங்கா இலங்கை வங்கியின்துறுணு தீரிய" கடன் திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மட்டும் 51 மில்லியன் ரூபா பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு தை மாத இறுதியில் வடக்கு மாகாணத்தில் 71 வரையான இளம்தொழில்முனைவோருக்கும், கிழக்கு மாகாணத்தில் 60 வரையான இளம் தொழில் முனைவோருக்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன என்று இலங்கை வங்கி தெரிவித்துள்ளது.

அந்த வங்கியின் வாராந்த முன்னேற்ற மீளாய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

2019 பெப்ரவரி மாத முதல் வாரத்தில் நாடளாவிய ரீதியில் 532 வரையான இளம் தொழில் முனைவோருக்கு 223 மில்லியன் ரூபா பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மட்டும் 51 மில்லியன் ரூபா பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2019 தை மாத இறுதியில் வடக்கு மாகாணத்தில் 71 வரையான இளம்தொழில்முனைவோருக்கும், கிழக்கு மாகாணத்தில் 60 வரையான இளம் தொழில் முனைவோருக்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

"துறுணு தீரிய" கடன் திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 130க்கும் மேற்பட்ட கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் 28 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான கடன்களையும், கிழக்கு மாகாணத்தில் 22 மில்லியனுக்கும் அதிகமான கடன்களும் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ரீதியிலான கடன் வழங்களில் யாழ்ப்பாண மாவட்டம் 43 கடன்களை வழங்கி முன்னிலை வகிக்கின்றது. அம்பாறை மாவட்டம் 34 கடன்களை வழங்கி இரண்டாவது நிலையில் உள்ளது.

இந்த "துறுணு தீரிய" கடன் திட்டமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆடைத் தொழில், ஒளிப்படம் மற்றும் காணொலி சீரமைப்பு (வீடியோ எடிற்றிங்), மோட்டார் வாகன திருத்தம், அழகுக்கலை, உணவு உற்பத்தி, இரசாயன உரம் தயாரித்தல், கணினி மற்றும் அச்சுப் பதிப்பு, தளபாடம், கையடக்கத் தொலைபேசி திருத்துதல், குடிசைக் கைத்தொழில்கள், கட்டுமானம் போன்ற வெவ்வேறு வணிகத்தில் ஈடுபட்டுவரும் 131 இளம் தொழில்முனைவோருக்கு 51.27 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. "துறுணு தீரிய" கடன் திட்டத்தின் மிக அதிக எண்ணிக்கையிலான கடன்கள் அழகுக் கலை மற்றும் ஆடைத்தொழிற்துறையைச் சேர்ந்த இளம் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

"துறுணு தீரிய" கடன் திட்டம் "என்ர பிறைஸ் சிறிலங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கை வங்கியானது, தலைமை அமைச்சர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகத்துடன் இணைந்து, தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவு என்பவற்றின் நேரடித் தலையீடு மற்றும் கண்காணிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தேசிய, மாகாண மற்றும் பிரதேச ரீதியிலான அனைத்து அரச அலுவலர்களின் செயலூக்கத்துடனான பங்களிப்பின் காரணமாக இந்தக் கடன் திட்டம் வெற்றியடைந்துள்ளது.

இலங்கை வங்கியின் "துறுணு தீரிய" கடன் திட்டத்தின் கீழ் 3 வருடங்கள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற பட்டதாரிகள் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க தொழில்சார் தகைமைகளைக்கொண்ட 40 வயதுக்குட்பட்ட தொழில்முனைவோருக்கு உத்தரவாதமற்ற மற்றும் பிணைகளற்ற இலகுபடுத்தப்பட்ட பிணை நிபந்தனைகளின் கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றன.

இந்தக் கடன்திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களை நாடுதழுவிய ரீதியில் இலங்கை வங்கியின் அனைத்துக் கிளைகள் மற்றும் பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் - என்றுள்ளது. (எ)

ஒக்ரோபர் அரசியல் குழப்பத்தின் பின் ஒரே நிகழ்வில் மைத்திரி – சந்திரிகா

கொழும்பு, பெப். 20

கொழும்பு அரசியலில் கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி இடம்பெற்ற அரசியல் குழப்பத்தின் பின்னர், முதல்முறையாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் அரசதலைவர் சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரணதுங்கவும் ஒரே நிகழ்வில் ஒரே நேரத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் மேல் மாகாண செயற்குழுக் கூட்டம் விளிம்புல, ஹேனேகமவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் இருவரும் கலந்து கொண்டுள்ளனர்.

அந்த அரசியல்குழப்பத்தின் பின்னர் பொதுநிகழ்வுகளில் இருவரும் ஒன்றாகக் கலந்துகொள்வதைத் தவிர்த்து வந்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரில் சந்திரிகாவுக்கு ஆதரவான தரப்பினர் கட்சியின் தலைவரும் அரசதலைவருமான மைத்திரிபால சிறிசேனவை வெளிப்படையாக விமர்சித்து வந்தனர். இரண்டு வாரங்களுக்கு முன்னர் அப்படி விமர்சிக்க வேண்டாம் என்றும் சந்திரிகா தனது அணியினருக்கு அறிவுறுத்தியிருந்தார். இந்த நிலையில் இருவரும் ஒரே நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர். நிகழ்வில், அமைச்சர்ஜோன்அமரதுங்க, இராஜாங்கஅமைச்சர்அஜித் மான்னப்பெரும, லசந்த அழகியவன்ன, ஹர்சனராஜ கருணா, மேல் மாகாண ஆளுநர் அஷாத் சாலி, மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய மற்றும் அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (த)

சிறு வியாபாரங்களைப் பதிவுசெய்யும் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 20

நாட்டில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறிய வியாபாரங்களைப் பதிவு செய்யும் போது அறவிடப்படும் கட்டணத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் மேல் மாகாண செயற்குழுக் கூட்டம் விளிம்புல, ஹேனேகமவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார் என்று அவரது ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் உள்ளது.

அதில்தெரிவிக்கப்பட்டதாவது:

கிராமசக்தி மக்கள் இயக்கத்தை வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள நகர மக்களையும் இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

2019ஆம் ஆண்டு கிராம சக்தி மக்கள் இயக்கம் கொழும்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக 117 மில்லியன் ரூபாவும் கம்பஹா மாவட்டத்துக்கு 117 மில்லியன் ரூபாவும், மேல் மாகாணத்தில் அதிக வறுமை நிலவும் மாவட்டமான களுத்துறை மாவட்டத்துக்கு 216 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (த)

விடுமுறை நாள்களில் மான்கள் வேட்டை

மூவர் கைதாகியுள்ளனர்

போயா தினங்களில் மான்களைச் சுட்டு இறைச்சியாக்கி பிரபல விடுதிகளுக்கு விற்பனை செய்துவந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹல்துமுல்லை வன உயிரியல் திணைக்களத்தைச் சேர்ந்த சுற்றிவளைப்புக் குழுவினர் அவர்களை நேற்றுக்காலை கைது செய்துள்ளனர். 300 கிலோக்கிராம் மான் இறைச்சி மீட்கப்பட்டுள்ளது.

அவர்களை வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. அவர்களிடமிருந்து துப்பாக்கிகள், வனப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்றும் அவைகளை மீட்கத் தேடுதல் நடத்தப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி பிரிட்டனுக்குள் நுழையும் தமிழர்கள்

பிரிட்டன் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 20

இலங்கையிலிருந்து பிரிட்டனுக்குள் நுழையும் தமிழர்களுள் 85 சதவீதமானோர் போலி ஆவணங்களைப் பயன்படுத்தியே நுழைகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டனின் மனித உரிமைகள் செயற்பாட்டாளரான அம்பிகை சீவரத்னம் பன்னாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சட்டரீதியாக பிரிட்டனுக்குள் வருவதற்குக் காணப்படும் கெடுபிடிகள் மற்றும் இலங்கையில் வாழ்வதற்கு ஏற்பட்டுள்ள பயமான சூழல் காரணமாகவே அதிகமானவர்கள் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி பிரிட்டனுக்குள் நுழைகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

பன்னாட்டு மகளிர்தினத்தில் பெண்களுக்கு விருதுகள்

கொழும்பு, பெப். 20

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு முறைசாரா பொருளாதாரத் துறையில் பல சவால்களுக்கு முகம்கொடுத்து துணிச்சலுடன் பணிபுரிகின்ற பெண்களுக்கு ஊக்கமளிப்பதற்காக விருது வழங்கல் நிகழ்வொன்றை ஏற்பாடுசெய்துள்ளது.

முறை சாரா பொருளாதாரத்தினூடாக தமது வாழ்க்கையை முன்னேற்ற சில பெண்கள் முயற்சித்துள்ளதுடன், சிலர் முயற்சித்தும் வருகின்றனர். இவர்கள் பிற பெண்களுக்கு தைரியம் அளிப்பதுடன் பெண்களுக்கு முன்னுதாரணமாகவும் திகழ்கின்றனர்.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்து சிறந்த சேவை செய்து வருகின்ற பெண்கள் அல்லது பெண்கள் அமைப்புக்கள் இந்த விருதுக்கு விண்ணப்பிக்கமுடியும்.

தங்களுடைய பெயர் முன்மொழிவை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இல.14 ஏ த மெல் மாவத்தை கொழும்பு 4 என்ற முகவரிக்கு அனுப்பிவைப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'முறைசாரா பொருளாதாரத் துறையில் பணி புரிகின்ற பெண்களை ஊக்கமளிப்பதற்கான விருது வழங்கல்' எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறுஅறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

உரிமை கிடைத்துவிட்டதுபோல ஒடுப்பட்டுத் திரிகிறீர்களே ஏன்?

தமிழ் அரசியல்வாதிகளைக் கேட்கிறார் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள்

வவுனியா,பெப்.20

அபிவிருத்தி பற்றிப் பேசமாட்டோம், உரிமைகள் கிடைக்காது என்று நான்கு வருடங்களாகக் கூறிவிட்டு, தற்போது உரிமை கிடைத்தது போல ஒடுப்பட்டுத் திரிகின்றார்கள். அமைச்சர்கள் வந்தால் பின்னாலும், முன்னாலும் போய் நின்று படமெடுக்கிறார்கள், தூக்குகிறார்கள், காவுகிறார்கள். நாங்கள் பிழைவிட்டு விட்டோம் மன்னித்துகொள்ளுங்கள் என்று மக்களிடம் கூற வேண்டியதுதானே!

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரா.சுப்பிரமணியத்தின் 'இலங்கை மன்னன் இராவணன் - திராவிடன்' எனும் நூல் வெளியீட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழருக்கு நியாயமான தீர்வுகள் வழங்கப்படவேண்டும்என்று சிங்களத் தரப்பில் பலர் கூறிநின்றனர். எங்களில் எத்தனை பேருக்கு அவர்களைத் தெரியும். அவர்களை மதிப்பளிக்கநாம் தயாராக இருக்கிறோமா?. அவர்கள் இன்று சிங்கள மக்கள் மத்தியில் துரோகிகளாக மாற்றப்பட்டுள்ளார்கள். நாங்களும் அவர்களைப் படலைக்கு எடுக்கமாட்டோம். எங்களது படலையில் நின்றிருந்த இந்தியாவை எங்கயோ கொண்டுசென்று நிறுத்தினோம். இருக்கின்ற நண்பர்களை எல்லாம் கெடுத்துச் சுடுகாடாக்கினோம். புதிய சிந்தனைகளை நோக்கி நகரவேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. பழைய விடயங்களையும் புதிதாகச் சிந்திக்கவேண்டும். இது முன்னேறவேண்டிய சமூகம் அதற்கான எல்லா வாய்ப்புகளும் இருக்கிறன.

வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது 1988ஆம் ஆண்டு நடந்ததுபோல அமையாது. ஆனால் தமிழர்களின் தலைவர்கள் முஸ்லிம் தலைவர்களோடு மனம் திறந்துபேசி அவர்களது சந்தேகங்களுக்கும் கோரிக்கைகளுக்கும் இடமளித்தால்வடக்கு-கிழக்குஇணைவதற்கு சிங்களவர்களும் இணைந்து வருவார்கள். அந்த அரசியல் நிலமை ஏற்படுத்தப்பட வேண்டும். அரசோடு நின்றால் துரோகி அமைச்சர்களுடன் நின்றால் ஒட்டுக் குழு என்று கூறிவிட்டு கட்சியில் அண்மைய நாள்களில் எங்கு போய் இவர்கள் நிற்கின்றார்கள்?. இப்பொழுது அவர்கள் தலைவர்களாம். இப்படி ஏன் மக்களை ஏமாற்றுகிறீர்கள். இவர்கள் மோசமானவர்கள், பொய்யர்கள் புலிகளின் பெயரைச்சொல்லி தங்களுடைய பதவிகளைக் காப்பாற்றிவரும் இவர்கள் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்துக்காக எந்த முயற்சியையும் ஏற்படுத்தவில்லை.

இன்னும் மூன்று மாதங்கள் கடந்த பின்னர் மீண்டும் வருவார்கள். ரணில் ஏமாற்றிவிட்டார், நாங்கள் அரசுக்கு எதிரானவர்கள் என்று. எனவே புதிய சிந்தனைகளையும் நோக்கி நாங்கள் செயற்படவேண்டும் - என்றார். (த-110)

நேற்று அதிகாலையும் விபத்து இருவர் உயிரிழந்துள்ளனர்

கொழும்பு, பெப். 20

நாவலப்பிட்டியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில், இருவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில், கண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலப்பிட்டிகண்டிமுதன்மைவீதியில் நாவலப்பிட்டி பத்துலுபிட்டிய பாடசாலைக்கு முன்பாக அதிகாலை 2.30 அளவில் விபத்து இடம்பெற்றது.

கம்பளையிலிருந்து கினிகத்தேனை நோக்கி, சென்ற முச்சக்கரவண்டியும் கினிகத்தேனைப் பகுதியிலிருந்து கம்பளை நோக்கிச் சென்ற டிப்பர் வாகனமும் நேருக்குநேர்மோதிவிபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதியும், அதில் பயணித்த பயணியுமான கினிகத்தேனையைச் சேர்ந்த எஸ்.எஸ். ஜ.கலப்பத்தி(வயது 31) மீதலாவ குருந்துவத்த பகுதியைச் சேர்ந்த திலக்சிரிகே அமல் குணரத்ன (வயது 38) ஆகியோரே உயிரிழந்தனர்.

முச்சக்கரவண்டியைத் தவறான பக்கத்தில் செலுத்தியதால் விபத்து இடம்பெற்றதாகவும் சடலங்கள் நாவலப்பிட்டி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன எனவும் டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இதுதவிர, வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து மாரவெல மகவெவ சந்தியில் நேற்றுமுன்தினம் அதிகாலை வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த 4 பேர் உயிரிழந்திருந்தனர். (த)

வாகனம் புரண்டு சாரதி சாவு

கொழும்பு, பெப். 20

வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் தடம்புரண்டதில், அதனைச் செலுத்திச் சென்ற பெண் உயிரிழந்தார். 6 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் உடவலவ்வ என்ற இடத்தில் 36ஆவது மைல் கல்லருகே நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பெண் சாரதிஉட்பட மூன்றுபெண்களும், மூன்றுஆண்களும் விபத்தில் காயங்களுக்குள்ளாகிச் சிகிச்சை பெறுகின்றனர். (த)

கோப்புப்படம்

எத்தகைய துறை என்றாலும்

பதவியிலுள்ளோர் குற்றமிழைத்தால் தண்டனையை அனுபவிக்க வேண்டும்

கூறுகிறது தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், பெப் .20

எத்தகைய துறையாக இருந்தாலும், சேவையோடு தொடர்புடைய அரச அலுவலர்கள் எவராக இருந்தாலும், குற்றம் செய்தால் விசாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டால் அவர்கள் தண்டனை அனுபவித்தே தீரவேண்டும். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அப்படியல்ல அதிலும் கல்வித்துறையில் அதிகாரத்தில் இருப்பவர்கள் எத்தகைய குற்றங்களும் செய்யலாம். அவர்களை விசாரிக்கவோ அன்றி தண்டனை வழங்கவோ முடியாத அளவுக்கு வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கள் அவர்களைப் பாதுகாக்கின்றன என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலர் சரா புவனேஸ்வரன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு - கிழக்கில் அதிபர்கள், ஆசிரியர்கள் சார்ந்த முறைப்பாடுகள் கிடைத்ததும், அதற்கான விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு, விசாரணை செய்யும் அதிகாரிகள் பல லட்சம் ரூபாக்களைச் சம்பாதித்தும் முறையான தீர்ப்புகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

அதிகாரிகள் செய்கின்ற குற்றச் செயல்கள், அதிகார முறைகேடுகள் பற்றிக் கல்வி அமைச்சிடம் முறைப்பாடுகள் செய்தால் முறைப்பாடு செய்தவருக்குப் பதிலேதும் அனுப்பாமலும், முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்யாமலும் இருப்பதும் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் சர்வசாதாரணமான விடயமாகிவிட்டது.

இவ்விடயம் தொடர்பில் கல்வி அமைச்சுக்கு மேலுள்ள ஆளுநரிடம் முறையிட்டும் எந்தப் பயனும் இல்லை. இந்த நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வி எவ்வாறு மேம்படும். வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் கல்வித் துறையைமேம்படுத்தஆலோசகர்குழு அமைக்கவுள்ளதாகவும், வடக்கு மகாணம் முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாகவும் கூறிவரும் நிலையில், இது போன்ற அதிகார நிலை மூடிமறைப்புக்கள் உள்ளவரை வடபுலத்துக் கல்வியில் மாற்றம்கொண்டுவரவே முடியாது. அதே போன்று கிழக்கு மாகாண ஆளுநரிடம் முறைப்பாடுகள் முன்வைத்தும் எந்தப்பயனும் இல்லை என்பது புதிய மாகாணக் கல்விப்பணிப்பாளரின் மீள் நியமனம் உறுதிப்படுத்திவிட்டது.

அதைவிட அதிகாரிகள் மட்டத்தில் கதிரைக்கான போட்டிகள் உச்சமாக இன்று உருவெடுத்துள்ளது என்பதனைநாம்சுட்டிக்காட்டியிருந்தோம்.

அவர்களைக் கட்டுப்படுத்தி கொடுக்கும் நிலையங்களில் கடமை செய்ய வேண்டும் என்று கட்டளை இடும் அளவுக்குஉயர்அதிகாரிகள்இல்லை. மாறாக ஆசிரியர்களையும், அதிபர்களையும்படுமோசமாக அச்சுறுத்தி, வற்புறுத்தி வறுத்தெடுக்கும் காரியத்தை மட்டும்செய்வது கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தாது. ஆசிரியர்களின் மனங்களைக் காயப்படுத்தி அவர்களிடம் கடமைசெய் எனப் பணிப்பது அல்லது திணிப்பது பொருத்தமானகாரியமா? என உரியவர்கள் சிந்திக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-8)

பூச்சிகளை பிடித்த வெளிநாட்டவர் இருவர் கைது

கொழும்பு,பெப்.20 நுவரெலியா ஹோட்டன் பகுதியில் 13வகையான வண்டுகளை ஒரு வேளை உணவுக்காகப் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பன்னாடுகளைச் சேர்ந்த இரண்டுபேரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு வேளை உணவுக்காகவே அவற்றைப்பிடித்தோம் என்று சந்தேநபர்கள் கூறியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் இத்தகைய ஏராளமான பூச்சிகளைப் பிடித்து பன்னாடுகளுக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது மூவர் கைதாகியிருந்தனர். (கு)



காட்டிக் கொடுத்தால்தான் காங்கிரஸ் பிழைக்கும்!

வேலுகுமார் எம்.பி. தெரிவிக்கிறார்

கொழும்பு, பெப். 20

அமைச்சுப் பதவி இல்லையேல் அரசியல் இல்லை. காட்டிக் கொடுப்பு இல்லையேல் அரசியலில் கூட்டணி இல்லை. இதுதான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 'அரசியல் ஸ்டைல்.'எனவேதான், தொழிலாளர்களை அப்பட்டமாகக் காட்டிக்கொடுத்துவிட்டு, அமைச்சர்களின் கை, காலைப் பிடித்தாவது அரசுக்குள் நுழைவதற்கு இ.தொ.கா. பெரும்பாடுபடுகின்றது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். வேலுகுமார் தெரிவித்தார்.

நாவலப்பிட்டிய ரிலாகல பகுதியில் அமைக்கப்பட்ட வீட்டைத் திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார் என்று அவரது கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அதில் உள்ளதாவது:

ஐக்கிய தேசிய முன்னணியில் நாம் பங்காளிக் கட்சியாக இருந்தாலும் சரணாகதி அரசியலை நடத்தவில்லை. அதனால்தான் மக்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது அதைத் துணிவுடன் தட்டிக்கேட்கின்றோம். நீதியை வென்றெடுப்பதற்காகப் போராடுகின்றோம்.

எமது இந்தக் கொள்கை அரசியல் பயணத்தைக்கண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்று மனம் நொந்துப்போயுள்ளது. இதேநிலை தொடருமானால், காணாமல் போய்விடுவோம் என்ற அச்சத்தால் குறுக்குவழியிலாவது அரசியலைநடத்திமுன்னேறிவிட வேண்டும் என நினைக்கின்றது.

இதனால்தான் தொழிலாளர்களை அப்பட்டமாகக் காட்டிக்கொடுத்துவிட்டு அமைச்சர் நவீனின் காலைப்பிடித்தாவது ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குள் நுழைந்து அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு இ.தொ. காவினர் பெரும்பாடுபடுகின்றனர் - என்றுள்ளது. (கு)

ஆசிரியர், அதிபர் சேவையில் நிலவும் பிரச்சினைகளை கண்டித்துப் போராட்டம்

கொடிகாமம், பெப் 20

ஆசிரியர், அதிபர்சேவையில் எதிர் நோக்கும் பிரச்சினைகளை முன்னிறுத்தி இலங்கை அதிபர், ஆசிரியர் சேவை சங்கத்தால் மாபெரும் போராட்டம் ஒன்று யாழ்ப்பாணம்பேருந்து நிலையத்துக்கு முன்பாக எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. .

முரண்பாடுகளை நீக்கி சம்பளத்தை அதிகரிக்கவும், கொள்ளையடித்த 30 மாத நிலுவைச் சம்பளத்தை உடனடியாக வழங்கு, மாணவர்களின் ஒழுக்கங்களை பாதுகாக்கும் ஆசிரியர்களை பாதுகாப்போம், கற்பித்தலுக்கு இடையூறு விளைவிக்கும் மேலதிக வேலையை இல்லாமல் செய், இல்லாமற் செய்த ஓய்வூதிய சம்பளத்தை மீண்டும் வழங்கு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மாபெரும் போராட்டத்தை நடத்தவுள்ளனர். (ஈ-159)

கோத்தபாயவே அரசதலைவர் வேட்பாளர் தேசியவாதிகளும் இடதுசாரிகளும் முடிவு

இப்படிக் கூறுகிறார் கம்மன்பில

கொழும்பு, பெப். 20

அடுத்த அரசதலைவர் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளவர் கோத்தபாய ராஜபக்சதான் என்ற இறுதியான முடிவுக்கு தேசியவாதிகளும் இடதுசாரிகளும் வந்துவிட்டனர் என்று பிவிதுருஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவைக் களமிறக்குவது தொடர்பாக இந்த இரண்டு தரப்பினரும், முன்னர் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தனர். தற்போது கோத்தபாய ராஜபக்சதான் மிகப்பொருத்தமான வேட்பாளர் என்று இரண்டு தரப்புகளும் புரிந்து கொண்டுள்ளன. இருந்தாலும், இறுதியான முடிவு எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்சவின் கைகளிலேயே உள்ளது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி நிறுத்தும் வேட்பாளரை மாத்திரமே தங்களால் ஆதரிக்க முடியும் என்று அந்தக் கட்சியின் சில உறுப்பினர்கள் கூறி வருவது உண்மை.

ஆனால், கோத்தபாய ராஜபக்ச சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அரச தலைவர் தேர்தலில் எந்தக் கட்சி என்பது அதிகம் பிரச்சினையல்ல, யார் வேட்பாளர் என்பதே முக்கியமானது.

அதற்குத் தகுந்த உதாரணம், 2015இல் அன்னம் சின்னத்தில் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றிருந்ததைக் குறிப்பிடலாம்.

நாங்கள் செல்லுபடியான வாக்குகளில் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறக்கூடிய பொருத்தமான வேட்பாளரையே தேட வேண்டும். அதுதான் எமது குறிக்கோளாக இருக்க வேண்டும்.

பலர் இதனை மறந்து விடுகிறார்கள். அவர்களின் பேச்சு தோல்வியைப் பற்றியதாகவே இருக்கிறது - என்றார். (கு)

திருமுடியின் மேல் திருவடி

இராமபுரத்தூர் நிஷாந்தன்

இராமனின் பாதுகைகளை தன் திருமுடியில் சுமந்திட்ட பரதன்

இறைவன் எப்பொழுதும் உயிர்கள் மீது கருணையும், அன்பும் கொண்டவன். தன் பக்தர்களை என்றும் காத்தருள் செய்கின்ற தெய்வீகத் தன்மை கொண்டவன். பரம்பொருளாக வியாபித்துள்ள இறைவன் தன் அடியவர்கள் துயர் போக்கத் திருவுள்ளம் கொண்டு செயலாற்றுகின்றான். அந்த வகையில் காத்தல் தொழில் புரியும் விஸ்ணு பகவான் தன் அடியவர்கள் துன்பம் போக்க அவதாரம் செய்தருளுகின்ற அற்புத தெய்வம்.

பகவான் விஸ்ணுவின் இராம அவதாரம்

விஸ்ணு பகவான் மேற்கொண்ட இராம அவதாரம் பூமியில் மனித குலத்தினருக்கு எடுத்துக் காட்டான ஓர் அவதார வடிவமாகும். மனிதன் எப்படியெல்லாம் வாழ வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டிய அற்புதமான அவதாரம். இந்த அவதாரத்தில், தன் தந்தையின் வார்த்தைகளை ஏற்று பதின்நான்கு ஆண்டுகள் வன வாசம் செல்கின்றார் இராமன். அப்படியிருக்கும் காலம்தனில் பரதன் இராமனைத் தேடி காட்டுக்கு வந்து அவனிடம் இருந்து திருவடிப் பாதுகைகளைப் பெற்று அவற்றை தன் சிரசில் அதாவது தன் திருமுடியின் மேல் வைத்து அயோத்தி திரும்புகின்றான். இவ்வாறு பரதன் இராமபிரானின் திருவடிகளில் காணப்பட்ட பாதுகைகளைத் தனது திருமுடியின் மேல் வைத்தமை ஒரு புராணக்கதையுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். அது பெரும்பாலும் எம்மில் பலருக்குத் தெரியாத கதையாகும். அத்தகு கதையாடலை இங்கு காண்போம்.

பகவான் விஸ்ணு
வைகுண்டத்தில் வீற்றிருத்தல்

பகவான் விஸ்ணு வைகுண்டத்தில் வாசம் செய்கின்றவர். அலைமகளாகிய மகாலட்சுமி திருப்பாதங்களை வருடிச் சேவை செய்திட ஆதிசேஷனில் பள்ளி கொள்ளுகின்றவர். அத்தகு பெருமாள், தன் கரங்களில், சுதர்சனம் எனும் சக்கரத்தையும், பாஞ்சசன்னியம் எனும் சங்கையும், கௌமோதகி எனும் கதாயுதத்தையும் தாங்கியிருப்பவர். அவரது தலையில் அழகிய துளசி சூடிய கிரீடம் பிரகாசித்திருக்கும்.

ஒரு முறை பகவான் விஸ்ணு வைகுண்டத்தில் ஓய்வாக ஆதிசேசன் மீது அமர்ந்திருந்தார். வழக்கமாகத் தன் திருவடிகளை அலங்கரிக்கும் பாதணிகளை அதாவது பாதுகைகளைத் தான் பள்ளி கொள்ளும் அறைக்கு வெளியே, துவாரபாலகர் அருகில்; நீக்கி விடும் விஸ்ணு பகவான் அன்றைய தினம் அவற்றை தன் அறைக்குள், ஆதிசேசனின் கீழ் பகுதியில் கழற்றி விட்டு, தன் சிரசில் அணிந்திருந்த கிரீடத்தையும், தன் கரங்களில் தாங்கியிருந்த சங்கு மற்றும் சக்கரத்தையும் நீக்கி ஆதிசேசனாகிய படுக்கையின் மீது வைத்து விட்டு ஓய்வாக இருந்தார். அச்சமயம் விஸ்ணுவை காண்பதற்கு முனிவர்கள் வருகை தந்திருந்தனர். இதன் காரணத்தினால் அக்கணமே பகவான் விஸ்ணு முனிவர்களைப் பார்ப்பதற்காக சங்கு, சக்கரம், கதை மற்றும் கிரீடம், பாதுகை எதனையும் தரிக்காது எழுந்து சென்று விடுகின்றார்.

சங்கும், சக்கரமும்
பாதுகைகளை இகழ்தல்

அச்சமயம், ஆதிசேசன் மீது இருந்த சங்கும், சக்கரமும், கம்பீரமாக பார்ப்பதற்கு அழகாக காட்சியளித்தன. அதனால் சற்று கர்வம் அடைந்த அவை ஆதிசேசனின் கீழுள்ள பாதுகைகளைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தன. பின் அவற்றை நோக்கி, கௌரவத்தால் உயர்ந்தவர்களாகிய நாம் பகவானின் சிறப்பிற்கு காரணமாக அமைகின்றோம். பகவானது கரங்களில் சங்கும், சக்கரமுமாகிய நாம் அழகுற காட்சி கொடுக்கின்றோம். இப்படி உயர்வு பெற்ற நாம் இருக்கும் இடத்தில் தூசியிலும், அழுக்கிலும் தவளும் பாதுகைகளான நீங்கள் எப்படி இருக்க முடியும்? பகவானுக்கு அருகில் இருக்கும் தகுதி எங்களுக்கு மட்டுமே உள்ளது. இவ்விடத்தில் இருந்து நீங்கள் வழக்கமாக இருக்கும் இடம் நோக்கிச் சென்று விடுங்கள் என சங்கும், சக்கரமும், கிரீடமும் ஒருசேர பாதுகைகளை இகழ்ந்து பேசின. இதைக் கேண்மையுற்ற பாதுகைகளோ பணிவுடன், இது எங்கள் தவறில்லையே. பகவானே, எம்மை இங்கு விட்டுச் சென்றார். மேலும், நாங்கள் பகவானின் பாதங்களில் இருந்தாலும், கீழ்ப்பட்டவர்கள் இல்லை. பகவானது தாமரை போன்ற பாதங்களுக்கு நாம் அணி செய்கின்றோம். இது மட்டுமன்றி தேவர்களும், முனிவர்களும் கூட பகவானது திருவடிகளில் தம் சிரம் படுமாறு வணங்குகின்றனர். அப்போது அந்தப் பேறு எங்களுக்கும் கிடைக்கின்றனவே. அது போக பகவான் செல்லும் இடமெல்லாம் அவரது திருப்பாதங்கள் துன்பமடையா வண்ணம் நாமே பாதுகாத்து வருகின்றோம். எனவே புனிதமுடைய

எங்கள் பகவானின் பாதங்களில் இருப்பதால் நாங்களும் புனிதமானவர்களே எனக் கூறிக் கொண்டன. ஆனாலும் பாதுகைகள் உரைத்ததை மதிக்காது சங்கும், சக்கரமும் மேலும் அவற்றை அதட்டி இகழ்ந்துரைத்தன. இதைத் தாங்கிட முடியாத அந்தத் திருவடிகள் மேற்கொண்டு எதுவும் பேசிடாது பகவான் விஸ்ணு வரும் வரைக்கும் அமைதியாக காத்திருந்தன. வெளியே சென்ற பகவான் மீண்டும் தான் சயனிக்கும் இடம் நோக்கி வந்தார். அப்போது திருவடிகள் அதாவது பாதுகைகள் இரண்டும் வருத்தத்துடன் இருப்பதைக் கண்டு யாது நிகழ்ந்தது என வினவினார். பாதுகைகள் சங்கும், சக்கரமும் தம்மை எள்ளி நகையாடியதை வருத்தத்துடன் எடுத்துக் கூறின.

திருமால் பாதுகைகளுக்கு
ஆறுதல் உரைத்து அருள் புரிதல்

அங்கு நடந்தவற்றை அறிந்து கொண்ட பகவான் விஷ்ணு, திருவடிகளான பாதுகைகளுக்கு ஆறுதல் கூறி அவற்றை சமாதானம் செய்தார். பின் அங்கிருந்த சங்கினையும் சக்கரத்தையும் நோக்கி கோபத்துடன், நீங்கள் செய்த செயல் மன்னிக்க முடியாதது. அவரவர் செய்யும் தொழிலே அவர்களுக்கு உயர்வினைக் கொடுக்கின்றது. ஆனால் நீங்களோ கர்வம் குடி கொண்டவர்களாக பாதுகைகளை எள்ளி நகையாடியுள்ளீர்கள். ஆக நீங்கள் செய்த தவறிற்கு தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும் என பகவான் உரைத்து நின்றார்.

சங்கும் சக்கரமும் சாபம் பெறுதல்

அதன்படி, சங்கு மற்றும் சக்கரத்திடம், நான் வருங் காலத்தில் நிலவுலகில் இராம அவதாரம் செய்யவுள்ளேன். அப்போது நீங்கள் இருவரும் என் தம்பியராக பிறப்பீர்கள். அந்தக் காலத்தில் ஒரு சமயத்தில் நீங்கள் எந்தப் பாதுகைகளை இன்று பழித்துரைத்தீர்களோ, அவற்றை உங்களது திருமுடியில் அதாவது தலையில் சுமந்தவாறு வலம் வருவீர்கள். மேலும் அந்தத் திருவடிகளையே அரியணையில் ஏற்றி அவற்றை மலர் தூவிப் போற்றி வழிபட்டும் வருவீர்கள் என திருவாய் மலர்ந்தருளினார் வைகுண்டவாசன்.

சங்கும் சக்கரமும் பரதனாகவும்
சத்ருக்கனாகவும் பிறத்தல்

பகவான் நாராயணர் உரைத்த வாக்கின் படி, நாராயணன் அயோத்தி வேந்தன் தசரதனுக்கு மகனாக கோசலை வயிற்றில் இராமனாக அவதாரம் செய்தார். அது போல சங்கின் அம்சமாக பரதன் கைகேயிக்கும், சக்கரத்தின் அம்சமாகச் சத்ருக்கனும்; ஆதிசேசனின் அம்சமாக இலக்குவனனும் சுமித்திரையின் வயிற்றிலேயே மகன்களாகவும் பிறந்தனர். சிறு வயது முதலே இராமனும் இலக்குவனும் இணை பிரியாதவர்களாகவும், பரதனும் சத்ருக்கனும் இணை பிரியாதவர்களாகவும் வாழ்ந்து வந்தனர்.

இராமபிரானை அழைத்துவர
பரதன் வனம் செல்லுதல்

தந்தையின் ஆணை ஏற்று பதின்நான்கு ஆண்டுகள் வனவாசம் சென்ற இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வந்து அவனுக்கு அரியணையை கொடுப்பேன் என உறுதி கொண்டு பரதன் தன் தாய்மார்களுடன் காட்டிற்குச் செல்கின்றான். அவ்வாறு அண்ணன் இராமன் இருக்கும் இடம் சென்று அண்ணனிடம், தாங்கள் மீண்டும் அயோத்தி திரும்பி ஆட்சியுரிமையை பெற்று அயோத்தியை ஆட்சி செய்ய வேண்டும் என வேண்டினான். அதற்கு இராமனும், தம்பி, என் தந்தை கொடுத்த வாக்கினை நிறைவேற்றவே, நான் காட்டிற்கு வந்துள்ளேன். அப்படியிருக்க நான் அவ்வார்த்தைகளை மீறி மீண்டும், அயோத்தி திரும்ப முடியாது. எனவே நான் வரும் வரைக்கும், நீயே அயோத்தியை ஆட்சி செய்வாயாக என வேண்டினார். அதற்குப் பரதன், அண்ணா, தாங்கள் அமர வேண்டிய சிம்மாசனத்தில் நான் அமர முடியாது, எனவே தாம் வரும் வரைக்கும், நான் தம் பாதங்களில் அணிந்துள்ள பாதுகைகளையே சிம்மாசனத்தில் வைத்து வழிபட்டு வருவேன், எனக் கூறினான். இராமனும் அதற்கு சம்மதித்து தன் பாதுகைகளை பரதனிடம் கொடுத்தார்.

இராமனது திருவடிப் பாதுகைகளை
பரதன் திருமுடியில் சுமந்து வருதல்

ஆம். தன் அண்ணன் கொடுத்த திருவடிகளை தன் இரு கரங்களால் வணங்கி அவற்றை தன் தலையின் மீது வைத்து அயோத்தியினை வந்தடைந்தான் பரதன். பின் அயோத்தியின் அரியணையில் அத் திருவடிப் பாதுகைகளை வைத்து விட்டு நகரிற்கு வெளியே நந்திக்கிராமம் எனும் இடத்தில் இராமன் திரும்பும் வரைக்கும் மரவுரி தரித்து தவக் கோலத்தில் வாழ்ந்து வரலானான் பரதன்.

திருமுடியின் மேல்
திருவடிகள் உணர்த்தும் தத்துவம்

இவ்வாறு பரதன் தன் தலையில் இராமன் அளித்த பாதுகைகளை சுமந்து வந்த காரணத்தினால் அதனை திருமுடியின் மேல் திருவடி என்கின்றனர். இன்றும் விஷ்ணு ஆலயங்களில் வழிபாடியற்ற வரும் அடியவர்கள் சிரசில் சிவாச்சாரியார் கிரீடம் ஒன்றினை வைத்து ஆசிர்வாதம் செய்வார். அதுவே இந்தத் திருமுடி. அதன் மேல் பகுதியில் இரு பாத அடையாளங்கன் பொறிக்கப்பட்டிருக்கும். அதுவே இந்தத் திருவடிகள். ஆக திருமுடியின் மேல் திருவடி இவ்வாறே உருவானது. மேலும் இது உணர்த்தும் தத்துவமாக இறைவன் ஏற்றத் தாழ்வு காணாது அனைவருக்கும் கருணையோடு அருள் புரிபவன் என்பதுடன் அவரவர் புரிகின்ற தவறுகளிற்கேற்ப தண்டனைகளை அனுபவிக்க வேண்டும் என்பதும் புலனாகின்றது. ஆகவே மனதில் ஆணவ எண்ணம் குடி கொள்ளாது, அனைவரிடத்திலும் மாறாத அன்பு செலுத்தி இறைவனைத் தூதித்து தர்ம மார்க்கம் தனில் வாழ்வோமாக.

யாழ். தமிழ்ச்சங்கமும் வடமாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து முன்னெடுத்த தமிழ் பாடத்துக்கான கருத்தரங்கம்





யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து இந்த ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக தமிழ்ப் பாடத்துக்கான பரீட்சையை எதிர்கொள்ளும் வடபுல மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கை முன்னெடுத்திருந்தன.

வவுனியா, வரணி, யாழ்ப்பாணம், மருதனார்மடம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களில் வடபுலத்தின் 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களும் பங்கேற்கக்கூடிய வகையில் கடந்த வாதம் இந்தக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. ஏறத்தாழ 2 ஆயிரத்து 500 மாணவர்கள் கருத்தரங்குகளில் பங்கேற்றுப் பயன்பெற்றிருந்தனர்.

தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் தகைசார் பேராசிரியர் அ.சண்முகதாஸ், உப தலைவர் முனைவர் மனோன் மணி சண்முகதாஸ், கிழக்கு பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் செ.யோகராஜா, கிழக்கு பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந்ாக.தமிழிந்திரன், ஆசிரியர் ந.சத்தியவேந்தன் ஆகியோர் ஐந்து நாள்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இவர்களுடன் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.பௌநந்தி, பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர்க ளான கலாநிதி செ.சிவசுப்பிரமணியம், க.அருந்தாகரன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் ஆகியோர் பகுதியளவில் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வுக்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் சார்பில் மாகாண தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வ.வசந்தகுமார் மேற்கொண்டார்.

கிளி.இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் சிறப்புற்ற தமிழ் இலக்கிய வினாவிடைத் தொகுப்பு நூல் வெளியீடு



கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் இரா.நிசாந்தனின் தரம் 10, 11 மாணவர்களுக்கான தமிழ் இலக்கிய வினா விடைத் தொகுப்பு எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த 14ஆம் திகதி வியாழக்கிழமை, பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் காலை 11.30 மணிக்கு பாடசாலை அதிபர் ம.கிறிஸ்ரி றெனால்ட் மனுவலின் தலைமையில் இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக கரைச்சி கல்வி வலய முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் கலந்துகொண்டார்



நாளை உலக தாய் மொழி தினமாகும். அதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது

உலக தாய்மொழி தினத்தில் தமிழின் பெருமை அறிவோம்

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்



தமிழ் எங்கள் உயிர். தமிழ் உயர் தனிச் செம்மொழியாகும். உலகிலே உயர்ந்த மொழியாகவும் விளங்குவது எங்கள் தமிழே. வல்லினமாகவும் மெல்லினமாகவும் இடையினமாகவும் அமைவது தமிழ்மொழியே. இயல், இசை, நாடகம் என்ற வகையில் தமிழ் முத்தமிழாக அழைக்கப்படுகிறது. "தமிழுக்கு அமுதென்று பேர். அது எங்கள் உயிருக்கு நேர்" என உயிருக்கு ஒப்பாகத் தமிழையே கூறியவர் கவிஞர் பாரதிதாசன்.

> தமிழ்மொழியின் காலத்தை எவரும் கணித்துக் கூறுவதற்கில்லை. ஏனெனில் அது ஒரு காலங்கடந்த மொழி. அதற்கு வரலாறு இல்லை. எனவே அதன் மென்மையை ஆராய்ந்து கூறுவதற்கில்லை. எனினும் காவியமும், ஓவியமும், காவிரியும், வைகையும் கட்டடமும், சிற்பமும், கல்வெட்டும், புதை பொருள்களும் ஒருவாறு அதன் தொன்மையைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. உலக மொழி ஆராய்ச்சியாளரின் சிலர் "தமிழ்மொழியே உலகின் முதல் மொழி" எனக் கூறுவர்.

தங்கத் தமிழ்
தனி அழகு

தன்னைப் பித்தன் என்று சுந்தரமூர்த்தி நாயனார் வைதபொழுது இறைவன் பெரிதும் மகிழ்ச்சியடைந்தாராம். காரணம் தமிழால் வைததுதான் என்பதே. இதனானேயே இறைவனுக்குத் தமிழால் வைதாரையும் வாழவைப்போர் என்ற பெயர் ஏற்பட்டிருக்கின்றது.
முதன் முதலாக வலக்காலை எடுத்து வைக்கும் மணமக்களை நோக்கி தமிழும் அதன் இனிமையும் போல ஒன்று பட்டு வாழுங்கள் என்று நல்லறிஞர்கள் வாழ்த்துவது மரபாக இருந்து வருகிறது. இதுமட்டுமா! பாருங்கள் ஒரு செய்தி இப்படி வருகிறது.
கொல்லிமலைக் காட்டிலுள்ள ஓர் ஆணிடம் தேன் கொண்டு வரும்படி சொல்லியிருந்தேன். அவன் அன்று வராமல் மறுநாள் வந்து வெறுங்கையோடு நின்றதால் சிறிது கோபித்தேன். அவன் பேசினான்...

நேற்றே மலைக்கு நடந்தேன்
பல விடங்களில் அலைந்தேன்
இறுதியில் பெரும் பாறைத்தேன்
கண்டு சிறிது மலைத்தேன்
ஒரு கொடியைப் பிடித்தேன்
ஏறிச் சென்று கலைத்தேன்
சட்டியில் பிழிந்தேன்
நன்றாக வடித்தேன்
அதனைக்கண்டு மகிழ்ந்தேன்
அதில் சிறிது குடித்தேன்
களித்தேன், களைத்தேன், அயர்ந்தேன்
மறந்தேன் இன்று காலை எழுந்தேன்
நினைதேன் தேனை அடைத்தேன்'
எடுத்தேன், விரைந்தேன், நடந்தேன்
வந்தேன், சேர்ந்தேன்

இப்பொழுதான் உங்கள் ஆளிடம் கொடுத்தேன் என்று நானும் இதைக் கேட்டு மகிழ்ந்தேன். அவனுக்கு உரியதையும் தந்தேன். அடடா! எப்படி தேன்? எவ்வளவு தேன்? ஒவ்வொரு சொல்லிலும் தேன் சொட்டுகிறதே. இதைப் பார்த்தேன், குடித்தேன் என்று கூறாமல் "படித்தேன்" எனக் கூறுங்கள். அப்பொழுதுதான் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு படித்தேன் என ருசிக்கும். பாருங்கள் என்னே தமிழின் இனிமை. இந்த இனிமையை அனுபவிக்க நாம் மறந்து விடுகிறோம்.

தொன்று நிகழ்ந்த தனைத்தும்
அறிந்து தொல் புலி வாணர்களும்–இவள்
என்று பிறந்தாள்? என்றறியாத
இயல் பினள் அந்த தமிழ்த்தாய்

கவிரி பழம் பட்டினத்தில் நிலைத்து நின்று வாழும் தமிழ் மக்களைப் "பதியெழுஅறியாப் பழங்குடியினர்" என இளங்கோவடிகள் கூறுகிறார். இதற்கு உரை கூறவந்த அடியார்க்கு நல்லார், படைப்புக் காலஞ்தொட்டே வாழுங்குடியினர் எனக் கூறியிருந்தார்.
தமிழ்மக்கள் தோன்றிய காலத்தைக் குறிப்பிடும் பொழுது "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த குடியினர்" என பரிமேலழகர் கூறுகிறார். இத்தகைய மக்கள் பேசிய மொழியே தமிழ் என்றார்.
தமிழ்மொழியின் காலத்தை எவரும் கணித்துக் கூறுவதற்கில்லை. ஏனெனில் அது ஒரு காலங்கடந்த மொழி. அதற்கு வரலாறு இல்லை. எனவே அதன் மென்மையை ஆராய்ந்து கூறுவதற்கில்லை. எனினும் காவியமும், ஓவியமும், காவிரியும், வைகையும் கட்டடமும், சிற்பமும், கல்வெட்டும், புதை பொருள்களும் ஒருவாறு அதன் தொன்மையைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. உலக மொழி ஆராய்ச்சியாளரின் சிலர் "தமிழ்மொழியே உலகின் முதல் மொழி" எனக் கூறுவர்.

மூவேந்தர் வளர்த்த தமிழ்மொழி

தொன்றுதொட்டு தமிழ்நாட்டை ஆண்ட மன்னர் சேரன், சோழன், பாண்டியன் என்னும் முடிவேந்தர் மூவர். இம்மூவர் தம் தாய் மொழியான தமிழை நன்கு ஆதரித்து வந்தார்கள்.

தமிழரின் உயர்ந்த அரசாட்சி

உண்மை நீதியை நிலைநாட்ட சோழ மன்னன் ஒருவன், தேரின் மீதேறி வீதியுலாச் சென்ற இளவரசன் ஒரு பசுக்கன்றைத்தெரியாமல்கொன்றகுற்றத்துக்காக தன் ஒரேமகன் என்றும் பாராது அதே தேர்க்காலினால் கொன்று மிரு கத்துக்காகவும் சமநீதி வழங்கிய செய்தி தமிழரின் உயரந்த பண்பட்ட அரச ஆட்சிக்கு ஓர் எடுத்துக் காட்டு.
இத்தகு மகத்துவமான எம் தாய்மொழியில் எமக்கு பற்றுவேண்டும். கருமங்களை தாய்மொழியினால் நிகழ்த்த வேண்டும். ஏனைய இனத்தவர்கள் தம் தாய்மொழியில் காட்டிவிடும் நேசம் எம்மொழியில்குறைந்து விட்டது. ஆகக் குறைந்து தமிழில் கையொப்பமிடும் வழக்கம் இல்லாமலே போய்விட்டது. இனி ஒரு விதிசெய்வோம் வாரீர்.

ஒன்பது நூல்களின் வெளியீட்டு விழா!

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்படும் ஒன்பது நூல்களின் வெளியீட்டு விழா மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி வளர்மதி ரவிந்திரனின் தலைமையில் இடம்பெறவுள்ளது.
விழாவில் முதன்மை அதிதியாக மட்டக்களப்பு மாவட்டச் செயலர் எம். உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு அதிதியாக மாகாண கல்விச்செயலாளர் ஜ.கே.ஜி.முத்துபண்டா, மதிப்புறு அதிதியாக மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் கா.சித்திரவேல் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.
இங்கு சய்ந்தவன் வதை (கலாநிதி வ.இன்பமோகன்), தென் திருமலை தேசம் (வைத்தியர் சம்பூர் அ.சதீஸ்குமார்), சிட்டுக்குருவிகள் (செல்வி.வ.மீனாம்பிகை), பஞ்சதீபம் (வ.பிரவீன்), சிவப்புக்கீரக மனிதர்கள் (எம். எஸ்.எம். முகைதீன்), வண்ணச்சரம் (ந.நவநாயக மூர்த்தி), கூடிழந்த குருவிகள் (ஏ.சீ.அப்துல் ரகுமான்), வீரமுனைப்பதியின் கூத்துக்கலை (இப்றாலெப்பை ஜலீல்), ஒரு வானில் இரு நிலவுகள் (ஏ.எம்.முகைதீன்) ஆகிய நூல்களே வெளியிடப்படவுள்ளன. (ம-40)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் இந்த ஆண்டு கம்பன் விழா மார்ச்சில்

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 2019ஆம் ஆண்டுக்கான 'கம்பன் விழா' மார்ச் மாதம் 15ஆம் திகதி முதல்மார்ச்மாதம்17ஆம்திகதிவரையானமூன்று நாள்கள் யாழ்ப்பாணம் நல்லூரில்நடைபெறவுள்ளது. இவ்விழாவின் காலை நிகழ்ச்சிகள், நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள கம்பன் கோட்ட மேல் மண்டபத்திலும், மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீ துர்க்கை அம்மன் மணிமண்டபத்திலும் நடைபெறவுள்ளன. விழாவில் எம்நாட்டு, தமிழ் நாட்டு அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு கம்பன் புகழ்ப் பாடிக் கன்னித்தமிழ் வளர்க்க உள்ளனர்.
வழமைபோல இவ்வாண்டும் இவ்விழாவில் பட்டிமண்டபம், வழக்காடு மன்றம், கவியரங்கம், கருத்தரங்கம், இலக்கிய ஆணைக்குழு, இலக்கியப் பேருரை, விவாத அரங்கம், போன்ற நிகழ்ச்சிகளோடு நாட்டிய வேள்வி நிகழ்வும் நடைபெறவுள்ளன. (ம-9)

தமிழ் எழுத்தாளர்களை மதிப்பளிக்கும் இலக்கிய விழா

கொடிகாமம், பெப். 20
வரணி நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத்தினர் உலகளாவிய ரீதியில் உள்ள தமிழ் எழுத்தாளர்களை மதிப்பளிக்கும் இலக்கிய விழாவை இந்த வருடம் நடத்தவுள்ளனர். இதற்காக எழுத்தாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.
இதற்கு 2010ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளியிடப்பட்ட இலக்கிய நூல் அல்லது நூல்களை சமர்ப்பிக்கலாம். விரும்புவோர் நூலின் மூன்று பிரதிகளை அனுப்பிவைக்கப்பட வேண்டும். எழுத்தாளரால் வெளியிடப்பட்ட எத்தனை இலக்கிய நூல்களையும் போட்டிக்கு அனுப்பலாம். எழுத்தாளர்கள் சார்பாக பதிப்பகங்களும் இலக்கிய நூல்களை ஆய்வுக்காக அனுப்பலாம். விருது எழுத்தாளர்களுக்கே வழங்கப்படும். போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் நூல்கள் குறித்த காலப்பகுதியில் எழுத்தாளரின் சொந்தப் படைப்பான முதல் பதிப்பு நூலாக இருக்கவேண்டும். விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி மார்ச் மாதம் 31ஆம் திகதி என்று வரணி நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம் அறிவித்துள்ளது. (க-159)

சிவத்தமிழ் வித்தகர் மகாலிங்கம் சிந்தைக்கு விருந்தளித்த சீரியர்!

ச.லலீசன்



தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற வள்ளுவர் வாக்கிற்குத் தமிழுலகோர் இன்னும் தெளிவான விளக்கத்தைத் தந்தபாடாக இல்லை. பிறக்கும் போதே ஒருவன் புகழை முற்கூட்டியே பதிவு செய்துகொண்டு பிறக்க முடியாது. தகுதி இருந்தால் மட்டுமே ஒருவன் சபையில் தோன்ற வேண்டும் என்ற அர்த்தத்திலேயே வள்ளுவர் இந்தக் குறட்பாவை ஆக்கினார் என்று திருக்குறளுக்குப் புத்துரை வகுத்த சுஜாதா குறிப்பிடுகின்றார். கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் மு.வ. போன்றோரும் இக்கருத்தை அடியொற்றியே தமது உரையை தந்துள்ளனர். எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் ஈடுபட வேண்டும் என்ற கொள்கைப் பற்றுடன் எங்கள் மண்ணில் வாழ்ந்தவர்களுள் ஒருவராக அமரர் சிவ.மகாலிங்கத்தை அடையாளப்படுத்தலாம். 1949ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதியன்று பிறந்த இவர், கடந்தமாதம் 13ஆம்திகதிதனது 70ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

குப்பிளான் பெற்றெடுத்த மைந்தர்

குப்பிளான் கிராமம் பெற்ற சான்றோர் பெருமக்கள் வரிசையில் சிவ.மகாலிங்கத்திற்கும் நீங்காத பெருமை உண்டு. சிவசுப்பிரமணியம் அன்னபூரணம் தம்பதியரின் மகனாகப் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை குப்பிளான் விக்னேஸ்வர வித்தியாலயத்திலும் உயர்கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் கற்றார். அவரது திருமணப் பேறும் ஊரிலேயே வாய்த்தது. ஐந்து ஆண்மகவுகளுக்குத் தந்தையாகிப் பெருமை பெற்றார்.

இளைய நல்லாசிரியர்

கணிதத் துறையில் தேர்ச்சி மிக்க சிவ.மகாலிங்கம், கொழும்புத்துறை சைவாசிரிய கலாசாலையில் கணித ஆசிரியராகப் பயிற்சி பெற்றார். இதற்கு முதல் நில அளவையாளராகவும் கடமையாற்றியிருக்கின்றார். சைவம், தமிழ் ஆகிய துறைகள் அவருக்குப் பிறப்பில் வாய்த்திருந்தன. அவர் பிறந்த குப்பிளான் கிராமம் இயல்பாகவே அவருக்கு இத்திறன்களை ஊட்டியிருந்தது. இதனால் சைவநெறி மற்றும் இந்து நாகரிகம் போன்ற பாடங்களைத் திறம்படப் போதிக்கும் ஆசிரியராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். உரும்பிராய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நல்லாசிரியராகத் தன்னை அடையாளப்படுத்தினார். பாடசாலை ஆசிரியராகச் செயற்பட்ட காலத்தில் திருமுறை மீது விருப்புக் கொண்டு திருமுறை மாநாடுகளை நடத்தினார்.

பலாலி ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக உள்வாங்கப்பட்டுச் சேவையாற்றும் காலத்தில் இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டார். கல்வித் தத்துவம், பாடசாலை முகாமை முதலிய தொழில்சார் பாடங்களையும் சைவநெறிப் பாடத்தையும் ஆசிரிய மாணவர்களுக்குப் போதித்தார். தனது அரச சேவை ஓய்வின் பின்னரும் கற்பித்தலில் வேட்கை கொண்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் மூன்றாண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்தில் முதுகலைமானிக் கற்கையை மேற்கொண்டதோடு அக்கற்கை நெறிக்கான வருகை விரிவுரையாளராகவும் விளங்கினார்.

உதவிப் பணிப்பாளர்

பலாலி ஆசிரிய கலாசாலையில் இருந்து இளைப்பாறுகை பெறுவதற்கு முன்னர் 2002ஆம் ஆண்டில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராகப் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு வாய்த்தது. நான்காண்டுகள் உதவிப்பணிப்பாளராகப் சேவையாற்றினார்.

அந்தக்காலப் பகுதியில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் சொற்பொழிவு நடத்தும் திட்டத்தைச் செயற்படுத்தினார். 135 சொற்பொழிவுகள் இந்தத் திட்டத்தின் ஊடாக நடைபெற்றன என்பது பெருமைக்குரிய விடயம். அத்துடன் திணைக்களம் முன்னெடுத்த சகல பணிகளிலும் ஆலோசகராகவும் வளவாளராகவும் செயற்பட்டார். ஆன்மிகப் பேச்சாளர்களை பயிற்றுவிக்க வேண்டும் என்ற அவரது வேணவாவும் திணைக்களத்தால் செயலுருப்பெற தனது பங்களிப்புக்களை நல்கினார்.

ஆன்மிகப் பேச்சாளர்

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ப் பேச வல்ல சொற்பொழிவாளராக சிவ.மகாலிங்கம் திகழ்ந்தார். சைவசித்தாந்தத்தை முன்னிலைப்படுத்துபனவாக இவரது உரைகள் அமையும். திருமந்திரத்தில் அதிக ஈடுபாடு கொண்டமையால் இவரது சொற்பொழிவில் திருமந்திரக் கருத்துக்களுக்குப் பஞ்சமிருக்காது.

1990ஆம் ஆண்டுகளில் ஆன்மிகச் சொற்பொழிவு அலை யாழ்ப்பாண மண்ணில் ஆர்ப்பரித்திருந்த காலங்களில் கோவில்களில் திருமுறைகள் சார்ந்த தொடர் பேருரைகளை நிகழ்த்தினார். இதனால் லண்டன், கனடா, மலேசியா முதலிய நாடுகளுக்கும் ஆன்மிகப் பயணங்கள் மேற்கொண்டார்.

தனது வழியில் ஆன்மிகச் சொற்பொழிவு மற்றும் கட்டுரை ஆக்கங்களை மேற்கொள்ள வல்ல மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவதிலும் வெற்றி கண்டார். சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் உள்ளங்கவர்ந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார்.

இவரது சொற்பொழிவுத் தொண்டினைப் பாராட்டி இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் ஆலயம் 1991ஆம் ஆண்டில் சிவத்தமிழ் வித்தகர் என்ற பட்டத்தை வழங்கி மதிப்பளித்தது. திருமந்திர வாரிதி, இலங்கை அரசின் கலாபூசணம் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

ஆன்மிகக் கட்டுரையாளர்

ஆன்மிகக் கட்டுரைகளை அறிவுத் தளத்தில் நின்று படைக்கவல்லோருக்கான பற்றாக்குறை இன்றும் தொடர்கின்றது. இந்தக் குறையை நிவர்த்திக்கவல்ல கட்டுரையாளராகச் சிவ.மகாலிங்கம் விளங்கினார். சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடுகின்ற ஞானச்சுடர் சஞ்சிகை தொடர்ச்சியாக இவரது கட்டுரைகளைப் பிரசுரித்தது. பல்வேறு சஞ்சிகைகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். இவரது கட்டுரைகள் திருமுறைச் செல்வம், சிவஜோதி, ஞானவிளக்கு, தவமுனிவனின் தமிழ் மந்திரம், நற்சிந்தனை மலர், இந்து நாகரிகம் தரிசனங்களும் வாழ்வியலும் சைவசித்தாந்தமும் ஈழத்தவர் பங்களிப்பும், முருக மந்திரம் முதலிய பொருள்களில் நூல்களாக வெளிவந்தன. ஈழத்துச் சித்தர்கள் குறித்த கட்டுரைகள் பலவற்றை ஆக்கியுள்ளார். அதுநூலுருப்பெறுவதற்கு முன்னர் இறைவன் தன்னடியில் அவரை இணைத்துக்கொண்டான்.

நிறைவாக...

முருகக் கடவுள் மீது அதீத பக்தி கொண்டவர். செல்வச் சந்நிதியான் மீது தீராக் காதல் கொண்டவர். நீர்வேலிக் கந்தன் மீது வேட்கை மீதூரப்பெற்றவர். நல்லூர் திருவிழாவின் போது இருபத்தைந்து நாள்களும் கந்தர் அனுபூதி பஜனையில் ஈடுபடுவார். ஆன்மிக சிந்தனையுடன் அறவாழ்வைக் கடைப்பிடித்த சிவ.மகாலிங்கத்தின் இவ்வுலக வாழ்வின் நிறைவு அவரது எழுபதாவது வயதில் பூரணமாக அமைந்தமை அவரது இக வாழ்வின் வெற்றியைச் சுட்டிக்காட்டுகின்றது. அவரது நேரடி வாரிசுகள் ஐவரும் தாம் சார்ந்த துறைகளில் புகழ் பெற்று விளங்குகின்றனர். ஞானவாரிசுகள் அவர் குறிப்பிடும் பேச்சாளர்கள் ஆன்மிகச் செய்திகளைப் பரப்புகின்றனர். இதைவிட ஒரு மனிதன் அடைந்துவிடக் கூடிய பேறு வேறு என்ன உள்ளது?

கட்டுரையாளர்
(அமரரின் மாணவன்)
பிரதி முதல்வர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

காளமேகத்தார் என்னும் கவிக் குசும்பர்!

பிரகாஸ்

4

தமிழ்கூறு; நல்லுலகில்
சிலேடைகளின் வடிவம்
காளமேகத்தார். காளமேகத்தார்
இயற்றிய சிலேடைப் பாடல்களை
இந்தப் பகுதியில் பார்த்து
வருகின்றோம்.
கடந்த வாரம் யானையையும்,
வைக்கோலையும் ஒப்பிட்டு அவை
இரண்டினதும் குணங்கள் ஒன்று
என்றார் காளமேகத்தார். இந்த
வாரம் பாம்பையும்
வாழைப்பழத்தையும் ஒப்பிடுகிறார்
அவர். பாடல் இதுதான்

நஞ்சிருக்குந் தோலுரிக்கு நாதர்முடி
மேலிருக்கும் வெஞ்சினத்திற்
பற்பட்டான் மீளாது - விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத்
திருமலைரா மன்வரையில்
பாம்பாகும் வாழைப்பழம்.

பாம்பிடம் நஞ்சு இருக்கும். பாம்பு
தன் தோலை உரிக்கும்.
சிவபெருமான் முடி மேல் இருக்கும்.
கொடிய சினத்தில் அதன் பல்லால்
கடிக்கப்பட்டால் உயிர் மீளாது
என்றும் இதைப் பொருள்
கொள்ளலாம்.
வாழைப்பழம் நைந்துபோயிருக்கும்.
வாழைப்பழத்தின் தோல்
உரிக்கப்படும்.
சிவபெருமான் படையலில் மேலான
பொருளாக இருக்கும். கொடிய
பசியோடு இருக்கும் ஒருவர் பல்லில்
பட்டால் அந்தப் பழம் மீண்டுவராது
என்றும் இதற்குப் பொருள்
கொள்ளலாம்.



‘கழிவறைக் காகிதம்’ என்று தேடினால் பாகிஸ்தான் கொடியைக் காட்டும் ‘கூகுள்’

புதுடெல்லி.பெப்.20
‘உலகின் சிறந்த கழிவறைப் பேப்பர்’ எது? என்று ‘கூகுள்’ இயங்கு தளத்தில் தேடினால். பாகிஸ்தானின் கொடியே பதிலாக வருகிறது. இது புல்வாமாவில் நடைபெற்ற தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகச் சில இந்தியர்களால் மாற்றப்பட்டுள்ளது என்று கருதப்படுகிறது. பாகிஸ்தானின் கொடி கழிவறைப் பேப்பர் ஆகிய செய்தி, புல்வாமா தாக்குதல் நடைபெற்றுச் சில வலைப் பதிவுகளில் தாக்குதல் பற்றிப் பேச தொடங்கியவுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பின்னர் பரவலாகப் பரப்பப்பட்டுப் பிரபலமாகியுள்ளது. இது எப்படி நடந்தது என்பது குறித்து கூகுள் இன்னும் கருத்துத் தெரிவிக்கவில்லை. கூகுள் தேடலில் இந்த மாதிரியான சம்பவங்கள் நிகழ்வது இது முதல்முறையல்ல. இதற்கு முன் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இந்தியத் தலைமை அமைச்சர் மோடி குறித்த தேடல்களில் சில அவமரியாதையான சொற்கள் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெ.வில் அவசர நிலை உத்தரவு ட்ரம்ப் மீது 16 மாகாணங்கள் வழக்கு

வோஷிங்டன்.பெப்.20
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவசர நிலையை அறிவித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டின் 16 மாகாணங்கள் அவர் மீது வழக்குத் தொடுத்துள்ளன. அமொரிக்கா - மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் எழுப்பும் திட்டத்துக்கு அதிபர் ட்ரம்ப் கேட்கும் தொகைக்குக் குறைவான நிதியை ஒதுக்குவதற்கே எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினர் ஒப்புதல் அளித்தனர்.
எல்லைச் சுவருக்காக 570 கோடி டொலரை ட்ரம்ப் கோரினார்.
ஆனால், அதில், 137.5 கோடி டொலர் நிதியே ஒதுக்கீடு செய்ய ஜனநாயகக் கட்சி ஏற்றுக்கொண்டது. இதனால் ட்ரம்ப் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமலே நிதி பெறுவதற்காக அவசர நிலையை அறிவித்தார்.
இதற்குப் பல தரப்புகளிலிருந்து எதிர்ப்புகள் கிளம்பிய நிலையில் அமெரிக்காவின் 16 மாகாணங்கள் ட்ரம்பின் இந்த முடிவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளன.

ஏமன் போரை நிறுத்த இரு தரப்பும் இணக்கம்

ஐ.நா. தெரிவிப்பு

சனா.பெப்.20
ஏமன் அரசும், ஹவுத்திப் போராளிகளும் போர் நிறுத்தத்துக்குச் சம்மதம் வெளியிட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. ஏமனில் நடந்து வரும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை நீண்ட காலமாகப் பேச்சுக்களை நடந்தி வருகிறது. பலமுறை போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு அரசு மற்றும் ஹவுத்திப் போராளிகள் ஒப்புக் கொண்டும் அது தோல்வியிலே முடிந்துள்ளது. இந்த நிலையில் மீண்டும் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு அரசும், ஹவுத்திப் போராளிகளும் இணங்கியுள்ளதாக ஐ.நா. தெரிவிக்கிறது.
தென்மேற்கு ஆசிய நாடான ஏமனில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்திப் போராளிகளுக்கும் இடையே 2015 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெறுகிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவூதி அரசும், ஹவுத்திப் போராளிகளுக்கு ஆதரவாக ஈரானும் செயற்படுகின்றன. இந்த உள்நாட்டுப் போரால் இதுவரை 11ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 5ஆயிரம் பேர் குழந்தைகள்.



புல்வாமா தாக்குதல் சம்பவம்

இந்தியா பதிலடி சூத்திரதாரி சுட்டுக்கொலை

காஷ்மீர்.பெப்.20
இந்தியா புல்வாமா தாக்குதலுக்குத் திட்டம் வகுத்தவர் என்று கருதப்படும் முக்கிய ஆயுதாரியை 12 மணிநேரப் போராட்டத்துக்கு பிறகு இந்தியப் படையினர் நேற்றுச் சுட்டுக்கொன்றனர். பாகிஸ்தானைச் சேர்ந்த மற்றுமொரு ஆயுததாரியும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார். சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் இந்தத் தாக்குதலுக்குத் திட்டம் தீட்டிய சூத்திரதாரி என்றும், ஜெய்ஷ் இ முகமது அமைப்பின் முக்கிய தளபதி என்றும் இந்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
ஜம்மு காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத்தில் அவந்திபோரா நெடுஞ் சாலையில் கடந்த வியாழக்கிழமை இந்தியச் சிப்பாய்கள் பயணித்த பேருந்து மீது தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டதில், 40 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து, புல்வாமா மாவட்டம் பிங்லான் கிராமத்தைச் சுற்றி வளைத்த இந்திய இராணுவத்தினர் மீது ஆயுதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினார். இரு தரப்புகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதன்போது இந்திய இராணுவத்தினர் நால்வர் கொல்லப்பட்டனர். ஜெய்ஷ் இ முகமது அமைப்பைச் சேர்ந்த ஆயுததாரிகள் இருவர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட ஆயுததாரிகளில் ஒருவர் ஜெய்ஷ் இ முகமது அமைப்பின் முக்கிய தளபதியான கம்ரான் என்பவர் எனத் தெரிய வந்துள்ளது. புல்வாமா தாக்குதல் சம்பவத்தைத் திட்டமிட்டதும் அதற்கு மூளையாக இருந்து செயல்பட்டதும் இவர்தான் எனத் தெரிய வந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஊழல் வழக்கில் கைதாகினார் மாலைதீவின் முன்னாள் அதிபர்

மாலே.பெப்.20
15 இலட்சம் வரையான அமெரிக்க டொலர் பண ஊழல் வழக்கில் மாலைதீவின் முன்னாள் அதிபர் அப்துல் யாமீனைக் கைது செய்து சிறையில் அடைக்குமாறு அந்த நாட்டின் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.
மாலைதீவில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடந்த அதிபர் தேர்தலில் மாலைதீவு முன்னேற்றக் கட்சி சார்பில் போட்டியிட்ட அதிபர் அப்துல்லா யாமீன், எதிர்க்கட்சியான மாலைதீவு ஜனநாயகக் கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது சோலியிடம் தோல்வியடைந்தார். இதற்கிடையில், தனது பதவி, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தேர்தல் செலவுகளுக்குச் சுமார் 15 இலட்சம் டொலர்கள் அளவுக்கு முறைகேடாக நிதி திரட்டியதாக அப்துல்லா யாமீன் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.
இது தொடர்பாக அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்த

நிலையில், வங்கியிலுள்ள அப்துல்லா யாமீனுக்குச் சொந்தமான 65 இலட்சம் டொலர்கள் மதிப்பிலான பணத்தைப் பொலிஸார் முடக்கினர். பின்னர் அவருக்கு எதிராக கடந்த வாரம் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டது. வழக்கு விசாரணைக்கு வந்தபோது பொலிஸார் முன்வைத்த ஆதாரங்களின் அடிப்படையில் அப்துல்லா யாமீனைக் கைது செய்து சிறையில் அடைக்குமாறுநீதிபதி உத்தரவிட்டார். தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

அமெரிக்கா – தலிபான் இடையே பேச்சு ஆரம்பம்

இஸ்லாமபாத்.பெப்.20
பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்க அதிகாரிகள் மற்றும் தலிபான் பிரதிநிதிகளிடையே புதிய பேச்சுக்கள் தொடங்கின.
ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராகப் போரிட்டு வரும் அமெரிக்கா, அங்கு அமைதியை ஏற்படுத்தும் விதமாகத் தலிபான்களுடன் பேச்சுக்களை நடத்த முன்வந்தது. இதற்குத் தலிபான்களும் சம்மதித்தனர். அதன்படி கடந்த மாதம் இறுதியில் கட்டாரின் தலைநகர் டோகாவில் இந்தப் பேச்சு நடந்தது.
இதில் ஆப்கான் விவகாரத்தில் தீர்வுகாண ஓர் ஒப்பந்தத்தைக் கட்டமைப்பதற்கு இரண்டு தரப்புக்களும் ஒப்புதல் அளித்தன. அதே சமயம் குறிப்பிடத்தக்க வகையில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை.
இந்த நிலையில், பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்க அதிகாரிகள் மற்றும் தலிபான் பிரதிநிதிகளிடையே பேச்சுக்கள் தொடங்கின. இதில் ஆப்கானிஸ்தானில் நிலவும் அசாதாரண நிலைக்குத் தீர்வு காண்பது மற்றும் அமெரிக்க படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து திரும்பப் பெறுவது உள்ளிட்டவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

Vacancies - WEB Developer

EnXonE Technologies looking for a Web developer to our Jaffna office team

Requirements

- Minimum HNDIT/DIT qualified candidates
- PHP, Html5, CSS3, Java script and Jquery - intermediate level
- Experience with laravel is an added advantage
- Photoshop familiarity

Send your resume to info@enxonetech.com
For more details: 077 625 8116

(cs 23452 (13,17)

உ
சிவமயம்

அறநெறிக்காவலர் கந்தையா நீலகண்டன் (சட்டத்தரணி) ஞாபகார்த்த முதலாவது ஆண்டு நினைவுப் பேருரை

(அகில இலங்கை இந்து மாமன்ற முன்னாள் தலைவர், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை முன்னாள் தலைவர், மனித நேய அமைப்பின் முன்னாள் செயலாளர்)

காலம் :- இன்று (20.02.2019) புதன்கிழமை மாலை 4.00 மணி.
இடம் :- இந்துமாமன்ற பிராந்திய பணிமனை, 211/17, கோயில் வீதி, நல்லூர்.

தலைமை
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

பிரார்த்தனை உரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதல்வர், நல்லை ஆதீனம்)
ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்
(ஹவாய் சைவ ஆதீனம், அமெரிக்கா)

நினைவுப் பேருரை
ஒப்புரவாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

விடயம்
போருக்குப் பின் இலங்கையில் சைவ சமயம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அகில இலங்கை இந்து மாமன்றம்,
பிராந்திய பணிமனை, நல்லூர்.

(CS/23460)(11,17)

மரண அறிவித்தல்

செல்வி திருநாவுக்கரசு சாந்தி (பவா)

தோற்றம் 16.10.1959 மறைவு 19.02.2019

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்வி திருநாவுக்கரசு சாந்தி (பவா) நேற்று (19.02.2019) செவ்வாய்க் கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொலிஸ் சாஜன்ட் திருநாவுக்கரசு - அன்னலட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வியும், ஜெயபாலன் (கனடா), காலஞ்சென்ற ஜெயந்தி மற்றும் சறோஜா (முன்னாள் பிரதி அதிபர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), வசந்தி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் தேசிய வீடமைப்பு அதிகார சபை), காலஞ்சென்ற பாலேந்திரா மற்றும் கருணாகரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவலிங்கம், சிவானந்தன், நீலாம்பிகை (கனடா), காலஞ்சென்ற ஜெயவீர சிங்கம் மற்றும் சுதர்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், புவிராஜ் (Trade Finance & Investments PLC), காயத்திரி (CDO), பார்த்தீபன் (பொறியியலாளர்), ஜனனி (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), விஜிதா (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தியும், சர்வஜெயன் (கனடா), டில்லா (கனடா), சுகானா (கனடா), சுகான் (கனடா), தபோனா (கனடா) ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கம் புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்வளை,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
சி.புவிராஜ் (பெறாமகன்)

077 127 0302

(cs.23459) (13.17)

CANE

கேன் காப்பகம்

இல. 05, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்

வாகன வாடகை

கேன் நிறுவனம் வீடுகளில் தங்கியிருக்கும் நோயாளர்களை பார்வையிடும் செயற்திட்ட அமுலாக்கத்தின் கீழ் இரு வாகனங் களை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு எண்ணியுள்ளது. எனவே வாகனங்களினை வாடகைக்கு வழங்க ஆர்வமுடையோர் பின் வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் அதற்கான கூறு விலையை சமர்ப்பிக்க வேண்டும்.

- ஆகக் கூடியது 06பேர் பயணிக்கக் கூடியவாகனமாக இருத்தல் வேண்டும்.
- குறைந்தது 03 மாத காலத்திற்கு சேவையில் ஈடுபடவேண்டும்.
- யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் சேவையில் ஈடுபடவேண்டும்.
- குறைந்தது மாதாந்தம் 800km வரை சேவையில் ஈடுபட-வேண்டும்.

கூறுவிலை பற்றிய முழுவிவரங்களையும் காரியாலயத்தில் ரூபா.100/= செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். கூறுவிலை படிவத்தை கீழே குறிப்பிடப்பட்ட விலாசத்தில் விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00மணிமுதல் மாலை 4.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கூறுவிலைபடிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி திகதி 28.02.2019

தலைவர்
கேன் புற்றுநோயாளர் காப்பகம்
இல.05,சபாபதிப்பிள்ளைவீதி உடுவில்,
சுன்னாகம்.
தொ.பேசி இல.: 021 224 0458

(CS 23445)(14,17)

மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 08 . 1932

இறப்பு 16 . 02 . 2019

திருமதி குணராணி பூராசா

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணராணி பூராசா 16.02.2019 சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சீனிப்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான முத்தையா நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பூராசாவின் அன்பு மனைவியும் சறோஜினிதேவி, சிவபாதசுந்தரம்(Canada), தெய்வகுமார்(முல்லைத்தீவு), சிறிதரன்(தொண்டமானாறு) காலஞ்சென்ற குமுதினிதேவி மற்றும் பகிரதன்(பருத்தித்துறை), நிர்மலாதேவி(Germany), ரகுநாதன் (Germany), சிவானந்தன்(Germany) ஆகியோரின் அன்புத் தாயும் சீராளுராசா, நாகேஸ்வரி(Canada),குணசுந்தரி(முல்லைத்தீவு), மணிமேகலை(தொண்டமானாறு), வள்ளிநாயகி(பருத்தித்துறை), காலஞ்சென்ற மகிந்தன்(Germany) மற்றும் சறோஜாதேவி(Germany), நிறோஜா(Germany) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம்மா, ஜெகசோதி அம்மா, சிவபாக்கியம், கனகேந்திரம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசிக்குமார், ஜெயக்குமார், மாலினி(Germany), சிவாஜினி(Canada), கோபிகிருஸ்னா(Canada), கம்ஷாயினி, ஸ்ரீராதா கிருஸ்ணன்(Canada), சர்வேந்திரன், லோகேஸ்வரன்(ஆஸ்திரேலியா), பரமேஸ்வரன், ராஜேஸ்வரன், கமலேஸ்வரன் மேனகா, கீதா(கண்டி), திவ்வியா, துவாரகன், அகிலன், நவநீதன், நவராஜ், அசோக்(Germany), மதிராஜ்(Germany), சரண்ராஜ்(Germany), நிலானி(Germany), யானுகா(Germany), சந்தோஷ்(Germany), நிலுக்சிகா(Germany), அபிஷேக்(Germany), இலக்கியா(Germany), சௌமியன்(Germany) ஆகியோரின் பேர்த்தியும் நிலானி, தர்மிகா, ஷாலினி, சுவேதினி, பிரவீன்(Germany), அக்சயன்(Germany)கோபிதா(Canada), சதுர்சிகன்,இசைப்பிரியன், சசீபன், பிரியசகி, சுலக் ஷனா , மணி, டஸ்மன், மினுசியா, Bertilda Rodary ,Beryl Rosary அக் ஷியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு மு.ப 11.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய். (CS 23438) (14,17) **தகவல்: குடும்பத்தினர்.**

021 491 9488

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: அவசரப்பணி மனதிற்கு கஷ்டத்தைத்தரும். நண்பரின் உதவியால் நிலைமையை சரி செய்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு உதவும்.

இடபம்: சிலர் சொல்லும் அறிவுரை சங்கடத்தை உருவாக்கும். தொழில், வியாபார நடைமுறை மந்தகதியில் இயங்கும். முக்கிய செலவுக்கு சேமிப்புப் பணம் பயன்படும்.

மிதுனம்: வாழ்வில் முன்னேற்றம் பெற நல்வாய்ப்புகளிருந்து வரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை பெருக்க கூடுதல் பணியாளர்களை நியமிப்பீர்கள்.

கடகம்: பொது விவகாரங்களில் கருத்து சொல்வதை தவிர்த்திடுங்கள். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி தொந்தரவு தரலாம். செலவில் சிக்கனம் வேண்டும்.

சிங்கம்: இஷ்ட தெய்வ அருளால் நன்மை வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி பரிமாணம் ஏற்படும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

கன்னி: நலம் விரும்புபவரின் ஆலோசனைப்படி நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரம சூழ்நிலை சரியாகும். புதிய இனங்களில் செலவு ஏற்படலாம்.

துலாம்: செயல்களில் புதிய பரிமளிப்பு உதவும். தொழில் வியாபாரத்தில் அதிகம் பணிபுரிவீர்கள். லாப விகிதம் கூடுதலாக கிடைக்கும்.

விருச்சிகம்: எதிர்ப்பு விலகி வாழ்வில் முன்னேற்றப்பாதை உருவாகும். தொழிலில் உற்பத்தி விற்பனை அபிவிருத்தி யாகும். தாராள பணவரவு கிடைக்கும்.

தனுசு: கூடுதல் பணிச்சுமை ஏற்படலாம். வீணாக பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. புதிய யுக்தியினால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி சீராகும்.

மகரம்: நிச்சயந்த சூழ்நிலை ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி விற்பனை பெருக்க அதிகம் பணிபுரிவீர்கள். எதிர்பார்த்த அளவில் பணவரவு கிடைக்கும்.

கும்பம்: இறையருள் உங்களை நல்வழி நடத்தும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பணி இனிதே நிறைவேறும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

மீனம்: வாழ்வில் சந்தோஷ நிகழ்வு உருவாகும். செயல்களை மனப்பூர்வமாக துவங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

ராவணன் சொன்ன அறிவுரை

ராமன் செலுத்திய அம்பில் காயம்பட்டு குற்றுயிராய்க் கிடந்த இராவணனின் உயிர் பிரியாமல் இருந்தது.

அப்போது ராமர் லட்சுமணனை நோக்கி, "லட்சுமணா, ராவணன் அனைத்துக் கலைகளையும் அறிந்தவன், ராஜதந்திரம் மிக்கவன். நமக்கு அவனுடைய அரசியல் அனுபவம் மிகவும் பயனுள்ளதாயிருக்கும். நீ அவனிடம் போய் நான் கேட்டதாகக் கூறி அவனுடைய சிறந்த அறிவுரைகளைப் பெற்று வா" என்று கூறி அனுப்பினார்.

லட்சுமணன் அருகில் வந்ததும் இராவணன் சிரித்துக் கொண்டே வரவேற்றான்.

ராமன் தன்னிடத்தில் வைத்திருக்கும் மதிப்பு அறிந்து மகிழ்வுடன் தன் அறிவுரைகளைச் சொன்னான்.

"லட்சுமணா, ஒரு காலத்தில் சர்வ வல்லமை படைத்தவனாக நான் இருந்தேன். நவக்கிரகங்களும், எமனும், இந்திரனும் கூட எனக்குக் கீழ்ப்படிந்தனர். அப்போது நான் எண்ணியது என்ன தெரியுமா? நாட்டில் அனைவரும் சொர்க்கம் செல்ல வேண்டும். நரகம் யாருக்கும் இல்லை யென உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஒரு பறக்கும் ஏணி அனைவரையும் ஏற்றிச் செல்ல எமனைக் கொண்டே உருவாக்கப்பட வேண்டும் என்பதே.

ஆனால் இந்த நல்ல எண்ணத்தைச் செயல்படுத்தாமல் தள்ளிப் போட்டேன். அதன் விளைவாகவே இன்று நான் அவதிப்பட்டேன்.

சூர்ப்பனகை வந்து சீதாதேவி அழகின் சிகரம். அவள் உனக்கு ஏற்றவள் என்று கூறியதும் உடனே அந்தச் செயலை தள்ளிப் போடாமல் புறப்பட்டேன். விளைவு அனைவருக்கும் நாசம்.

அதனால் நான் முக்கியமாகச் சொல்ல விரும்புவது. நல்ல செயலை உடனடியாக செய்து முடி. அது பயன் தரும். தீய செயலைத் தள்ளிப் போடு. அதைச்செய்யாமல் இருக்க வாய்ப்புண்டு" என்றான்.

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் சாம்பசிவம்
(கணக்காய்வாளர்)

திருநெல்வேலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சாம்பசிவம் நேற்று (19.02.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம் - வள்ளிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தட்சணாமூர்த்தி , நீலாயதாட்சி ஆகியோரின் சகோதரரும் தவமணிதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - மானிப்பாய் இந்துக்கல்லூரி) பாசமிகு கணவரும் ரட்சிகா (மக்கள் வங்கி - கொழும்பு) , செந்தூரன் (Northern Central Hospital) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயமோகனின் (இலங்கைவங்கி - கொழும்பு) அன்பு மாமனாரும் அக்சாயினி, கனிஸ்ராயினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2019) புதன்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

338. பலாலி வீதி (பரமேஸ்வரா சந்தி அருகில்)
திருநெல்வேலி.

தகவல்
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

மலர்வு 23 . 08 . 1946

உதிர்வு 19 . 02 . 2019

கந்தையா பொன்ராசா

அரியாலையை பிறப்பிடமாகவும் துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்ராசா அவர்கள் நேற்று (19.02.2019) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேல் - தவமணி ஆகியோரின் அன்பு மருமகனும் கமலேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் சுதர்சன் (இ.போ.ச.) சுதேசன்(வினோ) தமிழினி .துசாஜினி .ஜனோஜா (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாகரன், சதீஷ்குமார் ,பிரகாஷ் (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2019) புதன்கிழமை மாலை 3 மணிக்கு துன்னாலை மத்தியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலைஉற்றார்உறவினர்கள்நண்பர்கள்அனைவரும்ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன்
பொ.சுதர்சன்(சுதன் இ.போ.ச.யாழ்ப்பாணம்)
0766851293

மல்லாகத்தில்
கடைவாடகைக்கு உண்டு

கே.கே.எஸ். வீதியில்மல்லாகம் சந்தி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 077 977 5554

மார்ச் மாத இறுதியில் 'ஜரா'



சர்ஜுன் இயக்கத்தில் நயன்தாரா நடிப்பில் உருவாகி இருக்கும் ஜரா படம் வெளியாகும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

நயன்தாரா நடிப்பில் தற்போது உருவாகி இருக்கும் படம் 'ஜரா'. இந்த படத்தில் நயன்தாரா முதல் முறையாக இரட்டை வேடங்களில் நடித்திருக்கிறார். மேலும் இவருடன் கலையரசன், யோகிபாபு, ஜெயப்பிரகாஷ், லீலாவதி உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

லட்சுமி, மா ஆகிய குறும்படங்களையும், `எச்சரிக்கை இது மனிதர்கள் நடமாடும் இடம்' என்ற திரைப்படத்தையும் இயக்கிய சர்ஜுன்.கே.எம். இப்படத்தை இயக்கியுள்ளார்.

இந்தப் படத்தின் முன்னோட்டக் காணொலி வெளியாகி ரசிகர்களை கவர்ந்தது. தற்போது இந்தப் படத்தை மார்ச் மாதம் 28ஆம் திகதி வெளியிட இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 08.01.2019 அன்று சிவபதமடைந்த

அமரர் குணரட்னம் குகதாஸ்

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (19.02.2019) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றதோடு, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (21.02.2019) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து சபிண்டீகரண கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
மாசார், பளை.
077 447 6862, 021 433 2975

(AKN/660) (11.17)

சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்
பெறுகைக்கான அழைப்பு
ஆதார சித்த வைத்தியசாலை, பம்பைமடு, வவுனியா
சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

ஆதார சித்த வைத்தியசாலை, பம்பைமடுவிற்கான சிற்றுண்டிச்சாலையினை 01.04.2019 ஆம் திகதி முதல் 31.03.2020 ஆம் திகதி வரை நடத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்களை "மாகாண ஆணையாளர், சுதேச மருத்துவத்-திணைக்களம், வட மாகாணம், இல.611, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு 13.03.2019 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல் " எனக் குறிப்பிடவும்.

குறிப்பு:
இது தொடர்பான படிவங்களை சுதேச மருத்துவத்திணைக்களம், வடமாகாணம், இல.611 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அலுவலக நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

Dr.திருமதி.சி.துரைரட்ணம்,
தலைவர், மாகாண திணைக்கள பெறுகைக்குழு
வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம்,
இல.611, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 0824 தொலைநகல்: 021 222 0822

(IN 9447)(14.17)

மரண அறிவித்தல்

திருமதி பாலாம்பிகை சண்முகநாதன்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

நல்லூர் செட்டித்தெருவை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலாம்பிகை சண்முக நாதன் நேற்று (19.02.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதனின் (முன்னாள் அதிபர், கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயம்) அன்பு மனைவியும், தெட்சணாமூர்த்தி - கமலாவதி தம்பதிகளின் அன்பு மகளும், குமாரவேலு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் தர்மராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கௌசலா (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை), குகதாஸ் (பிரதம கணக்காளர், சுகாதார அமைச்சு - வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நடராஜா (ஓய்வுநிலை பிரதேசசபை செயலாளர்), காலஞ்சென்ற கோமதி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும், யசோதராவின் (கனடா) அன்பு மைத்துனியும், பிரசாந்தன் (வர்த்தக வங்கி - கொழும்பு), பிரதாபன் (HNB, கொடிகாமம்), பிரதீபன் (Modern Soft Technologies Colombo), சரண்யா (யாழ். மருத்துவபீடம், முதலாம் வருடம்), சாருஜன் (யா/இந்துக் கல்லூரி), தாரங்கா (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2019) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமாகி நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/23461)(11.17)

அறைகள் நாள் வாடகைக்கு

வெள்ளவத்தையில் அறைகள் நாள் வாடகைக்கு 600 முதல் 3900 வரை A/C, TV, இணைந்த குளியலறையுடன் Villa Hotel 422/1, காலி வீதி, ராமகிருஸ்ண செட் அருகில்

077 796 7878

(CS 23449) (14.17)

விற்பனைக்கு

வட்டுக்கோட்டையில் பழைய வீட்டுக்கட்டடம், கதவு, யன்னல், மற்றும் கோப்பிசத்துடன் விற்பனைக்கு. கண்டகல் மற்றும் விறகும் விற்பனைக்குண்டு.

077 6913024

வேலையாள் தேவை

உணவகம் ஒன்றிற்கு
வேலையாள் தேவை
ரொட்டி போடுபவர் (தயாரிப்பவர்)
தங்கி நின்று வேலைபுரிபவர் விரும்பத்தக்கது

077 465 2860

(CS 23459) (13.17)

நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள்
உடன் தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306/077 138 7596

(CS 23403) (14.17)

சிவமயம்

தசாகாதி கிருஹயஜ்ஞ அழைப்பு

நிகழும் விளம்பி வருஷம் மாசி மாதம் 11.02.2019 திங்கட்கிழமை அமரத்துவம்மெய்திய எங்கள் குடும்பத் தலைவர்

சிவஸ்ரீ சி. மனோகரராஜக் குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

மாசி மாதம் 8 ஆம் நாள்	(20.02.2019) புதன்கிழமை	காலை 10.00 மணிக்கு தசாகம்
மாசி மாதம் 9 ஆம் நாள்	(21.02.2019) வியாழக்கிழமை	காலை 10.00 மணிக்கு ஏகோதிஷ்டம், மாசிகம்
மாசி மாதம் 10 ஆம் நாள்	(22.02.2019) வெள்ளிக்கிழமை	காலை 10.00 மணிக்கு சபிண்டீகரணம்
மாசி மாதம் 11 ஆம் நாள்	(23.02.2019) சனிக்கிழமை	காலை 10.00 மணிக்கு கிருஹயஜ்ஞம் மதியபோசனம்

20.02.2019 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தசாகத்தின் போது
"வைரவ மனோகரம்" சமஸ்கிரத நூல் வெளியீடு இடம்பெறும்

அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

136, முருகன் ஒழுங்கை, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்
திருமதி மனோகரராஜக் குருக்கள் நாகலட்சுமி
சி.மாதவராஜ சர்மா (சகோதரர்) குடும்பத்தினர்.

(CS/23466) (13.17)

மரண அறிவித்தல்

பிறப்பு 12.04.1932 — இறப்பு 19.02.2019

திருமதி வசந்தமலர் செல்வராஜா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தமலர் செல்வராஜா நேற்று (19.02.2019) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராஜாவின் (கடற்படைத் தள உத்தியோகஸ்தர்) பாசமிகு மனைவியும், சிவசும்பு, காலஞ்சென்ற தனபாக்கிய லக்ஷ்மி மற்றும் கோபாலபிள்ளை, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனகுமார் (இந்தியா), காலஞ்சென்ற தனபாலராஜா மற்றும் தனமலர் (பவானி), தனரஜனி (ஆசிரியை - நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் - வவுனியா), தனவதனா (சூட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தயாநிதி (இந்தியா), தில்லைநாயகி, மருதபிரான் (ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்தி உத்தியோகஸ்தர்), சிவனேந்திரன் (ஓய்வுபெற்ற கால்நடை உத்தியோகஸ்தர்), இரவீந்திரராஜா (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கோபிகா (இந்தியா), நிஷாந்தன், நிஷாந்தினி, யாழினி, ரஜீகா, சிவனேஸ்வரன் (கனடா), சஞ்ஜீகா, பொன்ரஜீந்திரராஜா (சுவிஸ்), தீபிகா (ஆசிரியை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை), சிவதீபன் (ஆசிரியர்- புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை), லிதுஷன், நேர்த்திகா, மதுமிகா (சட்ட உதவி ஆணைக்குழு, திருகோணமலை), சதீஸ்குமார் (டோக்கியோ சிமெந்து உத்தியோகஸ்தர்), மதுஷாந்தினி (ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), சுகந்தன் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், ஹேஸ்னா, ஸ்மித்திகா, சிறிவர்ஷன், தஸ்வீன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.02.2019) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோம்பயன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.472/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/23465)(11.17)

077 427 5896

CANADA , USA
study & work visa
Minimum Qualification O/L
VISA Consulting and Online form filling.
குறைந்த செலவில். விரைவில் பயணம்.
Bank Balance 100%
குறைந்த தகைமை O/L.
Swiss, France
செல்ல வழிகாட்டல்
Royal Visa Consultants & Education Service
No.128, Jampettah Street, Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 077 791 1649
Office : 0113 020 892

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பளை. புலோப்பளை மேற்கைச் சேர்ந்த
அமரர் சூசைப்பிள்ளை மரியமுத்து

பிறப்பு 12.03.1943 — இறப்பு 20.02.2018

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
மறையாதம்மா உம் நினைவு
கண்ணீர் பூக்களால்
மாலை தொடுக்கின்றோம் உமக்கு

என்றும்
திருமதி.அ.ஜூர்த்து நாயகி (மகள்)
பேரப்பிள்ளைகள்
ஆ.அருளப்பு (சகோதரம்)

மரண அறிவித்தல்

தர்மலிங்கம் இரத்தினசிங்கம் (தலைவர்)



பிறப்பு 20.01.1952 — இறப்பு 17.02.2019

சந்தைவீதி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கோட்டைக்காடு மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் இரத்தினசிங்கம் கடந்த (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் செல்வரத்தினத்தின் (கனடா) அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சூரியமலர் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புக் கணவரும் விஜய் (ஆசிரியர் - யா/நடேஸ் வராக்கல்லூரி K.K.S) ரவிநாத், சபீரன் (பிரான்ஸ்), திலக்சன் (ராசா - டோகா), நிக்சன் ஆகியோரின் அன்பு தந்தையும் நிசாந்தி, நிதர்சனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஜதுமிகன், அஜீஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், நகுலாம்பிகை மற்றும் சிவலிங்கம், பராசக்தி காலஞ்சென்ற சிவகுருநாதன் மற்றும் தங்கரத்தினம் (தங்கா), லீலாவதி, ராதா, ராணி, பாபு, தம்பிராசா, கணேசமூர்த்தி, காலஞ்சென்ற சந்திரகுமார் (கிளி) மற்றும் முருகையா லலிதாதேவி, சுசீலாதேவி, புஸ்பலீலாதேவி காலஞ்சென்ற நாகேஸ்வரன், இந்திரன், சூரியகுமார், விஜயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2019) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00மணியளவில் தொந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோட்டைக்காடு, மல்லாகம்

தகவல்: குடும்பத்தினர்.
077 810 1342, 077 790 1992

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி அதிஸ்ட ஜெகநாதன்

(யாழ். மாநகரசபை ஆணையாளர் பகுதி ஒய்வுநிலை உத்தியோகத்தர்)



பிறப்பு 11.08.1957 — இறப்பு 18.02.2019

கந்தர்மடம் ஆத்திகூடி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி (சிங்கராசா) அதிஸ்ட ஜெகநாதன் கடந்த (18.02.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வரோனிக்க தம்பதிகளின் ஏக புத்திரனும் ஆறுமுகம் - ஆயிலிபரதேவி தம்பதிகளின் மருமகனும் ஜெயந்தியின் அன்புக் கணவரும் லயறிசன் (லண்டன்), பியோஸ்ரன் (சுவிஸ்), மதுசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வினோஜன் (சுவிஸ்), கம்சினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற நாகரத்தினம், மற்றும் தையல்நாயகி, கந்தசாமி, புஸ்பராணி, மங்கையற்கரசி, கலாநாயகி, கலைவாணி சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு சகோதரரும் ஜெயவதனி, ஜெயரூபி, ஜெயராசகௌரி, ஜெகதா, ஆகியோரின் மைத்துனரும் பிறேமகுமார், சிவகருணா, காந்தி, ஸ்ரீகிருஸ்ணா ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 220 3126

தகவல் : குடும்பத்தினர்

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு
பெறுகைக்கான அழைப்பு
மருத்துவ உபகரணப்பொருட்கள் வழங்கல் - 2019

வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழுதலைவர் தகுதியான தகைமை வாய்ந்த மருத்துவ உபகரண பொருள்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருட்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

Reference No	Description	Qty	Bid Security	Reference No	Description	Qty	Bid Security
PSSP/MEP/2019/01	5 Part Hematology Analyzer	01	30,000.00	PSSP/MEP/2019/04	Suction Device	01	5,000.00
PSSP/MEP/2019/02	Fully Automated Biochemistry Analyzer	01	20,000.00		Weighing Scale	02	
PSSP/MEP/2019/03	Cardiac Monitor With Stand	01	20,000.00		Height Measuring board	02	
	Defibrillator	01			Auroscope	01	
	Ultra Sonic Nebulizer	02			Nebulizer	01	
	Patient Monitor	01			Spinal boards	02	
	ECG Machine	02			Oxygen Regulator	03	
MEP/2019/01	CR System For Existing X RAY Machine	01	20,000.00		Aneroid Sphygmomano Meter	04	

- விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
- நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாகசெலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலகநாள்களில் 20.02.2019 தொடக்கம் 11.03.2019 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைக்கேள்விகள் 12.03.2019 ஆந் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 12.03.2019 ஆந் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
- தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (T.P:021 229 0111 , Fax : 021 2290 104) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.
- கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

வைத்தியகலாநிதி. த. பூங்கோதை
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு.

(IN 9414)(4.17)

காணி விற்பனைக்கு
மீசாலை மாவடிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 9 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
077 353 0300

ES Printers

357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472
கிளை அலுவலகம்:-
New Market, 1st Floor, Chavakachcheri
021 492 7432
esprintersjaffna@gmail.com

வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- **காசாளர்** - Restaurant Cashier
- **இரவு ஒடிற்றர்** - Night Auditor
- **அறை பராமரிப்பு உதவியாளர்** - House Keeping Assistant (Trainee)

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்பு - 0777 696 443/ 0777 696 553
tilko.tilak@gmail.com

(C 9446/15/17)

மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள், என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

★காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
★காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
★பெற்றோர் விருப்பமின்மையா?
★கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
★வேலைத்தளத்தில் பிரச்சினையா?
★காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?

- இரகசியம் பேணப்படும்.
- நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்
வேலு ராஜேஸ்வரி அவர்கள்
மாத்தளை.
0778 432 602 / 075 302 4239
என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.

மந்திரக்குரல்

கோயிலில் புரியாத மந்திரத்துக்கு
வேண்டிக்கொண்டே
நூறு ரூபாயைத்
தட்டில் காணிக்கை செலுத்திய
வெள்ளை வேட்டி
வெளியே வருகையில்...
அய்யா... சாமீ
தர்மம் பண்ணுங்கய்யாவின்
விரித்த துணியில்
சட்டைப்பையில்
நோண்டியெடுத்து
ஒரு ரூபாயை
போட்டுவிட்டு நகர்ந்தபோது
வெளிக்கோபுர மாடமெங்கும்
எதிரொலித்தது
கால் வீங்கிக்கிடந்த
அய்யா... சாமீ...யின் குரல்
நீங்க நல்லாருக்கணுஞ் சாமி!

மரண அறிவித்தல்கள்

தோற்றம் 11.04.1988 | மறைவு 18.02.2019

பாலசுப்பிரமணியம் பரந்தாமன் (கண்ணன்)

வாரிவளவு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் பரந்தாமன் (கண்ணன்) 18.02.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் வனிதையற்கரசி தம்பதிகளின் அன்பு மகனும், துஷ்யந்தியின் அன்புக் கணவரும், இராசரத்தினம்-கோகிலவல்லி தம்பதிகளின் அன்பு மருமகனும், ராஜியின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல. 12A, லேக்றோட், கடுகஸ் தோட்ட, கண்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

எல்லாம் வல்ல மருதடி வீரகத்தி விநாயகரின்
பாதாரவிந்தங்களில் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

இல.12A, லேக் றோட், கடுகஸ்தோட்ட, கண்டி.
தகவல்: தி.இராசரத்தினம் (மாமனார்- கார்ராசன்)
077 879 9468

மரண அறிவித்தல்

தம்பையா சின்னத்தம்பி

பிறப்பு 27.07.1939 | இறப்பு 18.02.2019

புங்குடுதீவைப்பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சின்னத்தம்பி கடந்த (18.02.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நவரட்ணம் தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் ரேனுகாதேவியின் அன்புக் கணவரும் பாலகிருஷ்ணன், கிருஸ்ணவேணி, சிரேஷ்கீதன், நிருஜன் ஆகியோரின் அன்பு தந்தையும் காலஞ்சென்றவர்களான குமாரவேல், குஞ்சிப்பிள்ளை, சின்னத்தங்கம், ஆச்சிமுத்து, செங்கமலம், சடாச்சிவம், கதிரமலை, பாலசுந்தரம், செல்லத்துரை, தங்கக்குட்டி, வைத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவகடாச்சம், மதியாபரம், சற்குணம், அமராவதி, தளையசிங்கம், கண்ணம்மா மற்றும் வன்னியசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெகராணியின் அன்பு மாமனாரும் தனுசா, சன்சிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஹரிஸ்னியா, ஜீவசன், ஷயாத், ஆகியோரின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2019) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.4/1, 1ம் ஒழுங்கை கல்வியற்கல்லூரி வீதி
மகாறம்பைக்குளம், வவுனியா

தகவல்
தெய்வேந்திரன் (மருமகன்)
024 458 9079

கடந்து செல்வோம்

- அமைதியாக அமர்ந்து பார்த்துக் கொண்டிரு.
- துயரம் வரும்போது அதை அடையாளம் கண்டு கொள்
- அது நல்லது கெட்டது என்றோ இது எனக்கு வந்திருக்கக் கூடாது என்றோ வந்திருக்க வேண்டும் என்றோ மதிப்பீடு செய்யாதே
- துன்பம் வந்திருப்பதை பற்றி மட்டும் விழிப்போடு இரு. அதை உணர்ந்திரு
- மகிழ்ச்சியை உண்டாக்க முயற்சி செய்யாதே.
- செய்தால் அடுத்த பக்கமும் சேர்ந்தே வரும்.
- மகிழ்ச்சி வந்தால் அதைப் பிடித்து வைத்துக் கொள்ள முயற்சி செய்யாதே.

இல்லாவிடில் மற்றொரு பக்கத்தையும் சேர்ந்தே அனுபவிக்க நேரிடும்.

- திரும்பவும் துயரம் வந்து சேரும்.
- நீ தொடர்ந்து கவனித்துக் கொண்டே இருந்தால் துன்பம், மகிழ்ச்சி இரண்டையும் பார்த்துக் கொண்டே இருந்தால் திடீரென ஒரு நாள் நீ தனித்து இருப்பதை இரண்டிலிருந்தும் தனியாக பிரிந்து இருப்பதை, உணருவாய்.
- இந்த விஷயங்கள் அனைத்தும் உன்னைச் சுற்றி நடப்பவை மட்டும்தான்.
- நீ அவற்றுக்கு அப்பாற் பட்டவன் என்பது உனக்குத் தெரிய வரும்.

திருமதி சிவஞானமலர் குகேந்திரன்

சுதுமலையைப்பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் தற்போது ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானமலர் குகேந்திரன் கடந்த (14.02.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான மயில்வாகனம் - ஞானம்மா தம்பதியினரின் மருமகளும் குகேந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் (ஆஸ்திரேலியா) பாசமிகு சகோதரியும் மகேந்திராதேவி (ஆஸ்திரேலியா), பாலசுப்பிரமணியம் (அமரர்), சகுந்தலாதேவி இராசரத்தினம், சரஸ்வதி, நாகரட்ணம் (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சுமதி (ஆஸ்திரேலியா) மாதினி பிரணவன், மாதவன் பிரவீணா ஆகியோரின் அன்பு மாமியும் ஆத்மிகா, ஆரோஹணா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2019) புதன் கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலங்குழாய்
சண்டிலிப்பாய்

தகவல்
திருமதி ச.நாகரட்ணம் (மைத்துனி)

மரண அறிவித்தல்

திருமதி பரஞ்சோதி நாகராசா

தனங்களப்பு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி நாகராசா நேற்று (19.02.2019) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் வே. நாகராசா அவர்களின் அன்பு மனைவியும் அருந்தவம் (இலண்டன்), தயாநிதி (இலண்டன்), பகீரதன் (JP, வலி. தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்), சிவகரன் (பிரான்ஸ்), தயாளினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சி. பொன்னுத்துரை மற்றும் சி.இரத்தினம், சி.நாகையா (ஓய்வுபெற்ற அதிபர், J.P), கலஞ்சென்ற கமலாதேவி மற்றும் திருமதி க.புஸ்பமலா, காலஞ்சென்ற சி.செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2019) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் பிரசாத் வீதி, நவாலி (Y.M.C.A இற்கு அருகில்) உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதை ஏற்க முடியாது

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.20

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைக்குக் கால அவகாசம் வழங்க ஆதரவளிக்கக் கூடாது என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் இணைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட தாவது

எமது போராட்டம் ஆரம்பித்து இரு ஆண்டுகள் முடிந்துள்ளன. எமக்கு நீதி கிடைக்கவில்லை. சில வருடங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகம் வந்திருந்த ரணில் விக்கிரமசிங்க, மகிந்தவின் பிள்ளைகள் காணாமல் போயிருந்தால் அவர்கள் இப்படியிருப்பார்களா? எனவே நான் பதவிக்கு வந்தவுடன் உங்களுக்கு தீர்வை தருவேன் என்று கூறினார். ஆனால் இப்போது மறப்போம் மன்னிப்போம் என்று கிளிநொச்சி வந்து கூறுகின்றார்.

அப்போது எமது பிரதிநிதிகள் மௌனமாக இருந்தனர். கடந்த காலத்தைப் போன்று இலங்கைக்கு மேலும் ஐ.நாவில் கால அவகாசம் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர். அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

நாம் எதிர்வரும் 25ஆம் திகதி பெரும் போராட்டத்தை நடத்தவுள்ளோம். அதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும், தொழிற் சங்கங்களும், பொதுமக்களும் ஆதரவு வழங்க வேண்டும். என்று தெரிவிக்கப்பட்டது. (எ-214)

சீனக் கடன் கிடைப்பதில் தாமதம் 2 பில். டெலர் திரட்ட அரசு முயற்சி

கொழும்பு, பெப். 20

சீன வங்கியிடம் கோரிய கடன் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், பிணைமுறிச் சந்தையில் 2 பில்லியன் டொலர்களைத் திரட்டும் திட்டத்தை இலங்கை அரசு செயற்படுத்தவுள்ளது. அனைத்துலக நாணய நிதியத்துடன் கலந்துரையாடி புதிய பிணை முறிகளைக் கோரி, இலங்கை மத்திய வங்கி வரும் மார்ச் தொடக்க வாரத்தில் அறிவிப்பை வெளியிடவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இந்த ஆண்டில் 5.9 பில்லியன் டொலரைத் திருப்பிச் செலுத்த வேண்டும். அதில் 2.6 பில்லியன் டொலர், முதல் காலாண்டுக்குள் செலுத்த வேண்டியவை. ஏற்கனவே வைப்பில் இருந்த ஒரு பில்லியன் டொலரை இலங்கை அரசு பன்னாட்டுக் கடனுக்காகத் திருப்பிச் செலுத்தியுள்ளது.

இந்த நிலையில், சீன வங்கியிடம் 300 மில்லியன் டொலர் கடன் கோரப்பட்டது. எனினும், சீனபுத்தாண்டுவிடுமுறைகளால் இந்தக் கடனுக்கான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் குறித்த நீண்ட பேச்சுக்களில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கடன் ஜனவரி மாத கடைசியில் இறுதி செய்யப்படும் என்றும், இன்னொரு 700 மில்லியன் டொலர் மார்ச் முடிவுக்குள்ளும் இறுதி செய்யப்படும் என்றும் முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

இவற்றில் ஏற்பட்டுள்ள தாமதங்களையடுத்து, இலங்கை அரசு ஒரு பில்லியன் டொலருக்கான பிணைப் பத்திரங்களை வெளியிட்டும், ஒரு பில்லியன் டொலருக்கான பான்டா மற்றும் சாமுராய் பிணைமுறிகளின் மூலமும் 2 பில்லியன் டொலரைத் திரட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேவேளை, சீன வங்கியுடன் மீண்டும் பேச்சுக்களை பெப்ரவரி 20ஆம் நாள் ஆரம்பிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் சிறிலங்கா மத்திய வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (கு)

தலைமன்னார்...

இணைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்துள்ளன. உந்துருளியில் வந்த இளைஞர், அங்கிருந்த ஜே.சி.பி. வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானர் என்று தெரிவிக்கப்பட்டது. படுகாயமடைந்த இளைஞர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

சம்பவ இடத்துக்குச் சென்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். ஜே.சி.பி. வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-56)

மறப்போம்...

வடக்குக்குப் பயணம் மேற்கொண்டிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, போரின்போது இடம்பெற்ற சம்பவங்களை மறப்போம் மன்னிப்போம் என்று கூறியிருந்தார். இது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவரிடம் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப் போரில் போர்க் குற்றங்கள் நடைபெற்றமை, பாதிக்கப்பட்ட மக்களைக் கொண்டு நடத்தப்பட்ட உள்நாட்டு விசாரணைகளின் போது உறுதியாகியுள்ளது. இலங்கைக்கு வந்து சென்ற பன்னாட்டுத் தலைவர்கள், முக்கிய அதிகாரிகளிடமும் பாதிக்கப்பட்ட மக்கள் உண்மை நிலையைத் தெரிவித்துள்ளார்கள். இந்த நிலையிலேயே போர்க் குற்றங்களை இரு தரப்பும் புரிந்தனர் என்று சொல்லிவிட்டு எவரும் தப்பி விடமுடியாது. அதாவது இராணுவத்தினரும், புலிகளும் போர்க் குற்றம் புரிந்தனர் என்று ஒரு சொல்லைச் சொல்லி விட்டுத் தப்பி விடமுடியாது.

படையினர் விதி மீறினர்

ஒரு நாட்டில் போர் நடைபெறுகின்றது என்றால் முதலில் போர் விதிகளைப் பின்பற்ற வேண்டும். இரண்டாவதாக அந்த நாட்டு மக்களைப் பாதுகாத்து போர் புரியவேண்டும். இந்த இரண்டு விதிமுறைகளையும் உதறி எறிந்துவிட்டு இலங்கை அரச படைகள் அப்பட்டமான மனித உரிமை மீறல்களிலும், போர்க்குற்றங்களிலும் இறுதிப் போரில் ஈடுபட்டனர். பல்லாயிரக்கணக்காண மக்களை கொன்றொழித்தனர். ஆயிரக்கணக்கான மக்களை காணாமல் ஆக்கினார்கள். இந்த நிலையில் இந்தப் போர்க்குற்றங்களுக்கான உண்மைகளை ஏற்று அதனை மறப்போம் மன்னிப்போம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நீதிவேண்டும்

அரச படைகள் குறித்த போர்க்குற்றத்தை ஒப்புக் கொண்ட அவரின் கருத்தை வரவேற்கின்றோம். ஆனால் அவரின் மறப்போம் மன்னிப்போம் என்ற கருத்தை அடியோடு நிராகரிக்கின்றோம். மறப்போம் மன்னிப் போம் என்ற பேச்சுக்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். படையினரின் போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் வன்னியில் இன்னமும் இருக்கின்றார்கள். எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கும் கொன்றொழிக்கப்பட் மக்களுக்கும் காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்கும் நீதிவேண்டும். பன்னாட்டு பொறிமுறை ஊடாக உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இதற்கு அரசு அனுமதிக்கவேண்டும்.

ஆதாரங்கள் உண்டு

இதைவிடுத்து இரு தரப்பும் போர்க்குற்றங்கள் புரிந்தார்கள், மறப்போம் மன்னிப்போம் என்று கூறி அரசு தப்பிக்க முடியாது. இதற்கு நாமும் இடமளிக்கமாட்டோம். பன்னாட்டுச் சமூகமும் அனுமதிக்காது. இறுதிப்போரில் தமிழ் மக்கள் மீதும் மட்டும் அல்ல தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் படையினர் போர்க் குற்றங்களைப் புரிந்தார்கள். சரணடைந்த, கைது செய்யப்பட்ட போராளிகளைக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்தார்கள், துன்புறுத்தினார்கள். பலரைக் காணாமல் ஆக்கினார்கள். பலரைச் சாகடித்தார்கள். இதற்குரிய ஆதாரங்களும் வெளியாகியிருக்கின்றன. எனவே இலங்கை அரசு ஐ.நா. தீர்மானங்களை மதித்து அதனை நடைமுறைப்படுத்தி உரிய வகையில் தனது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். உண்மைகள் கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்படவேண்டும் - என்றார். (ஒ,5,22)

போர்க்...

மாட்டோம். பன்னாட்டுச் சமூகமும் ஏற்றுக் கொள்ளாது. பாதிக்கப்பட்ட மக்கள் சாட்சிகளாக இன்னமும் உள்ளார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெறவில்லை என்று மகிந்த ராஜபக்ச கொழும்பு நகர மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியிருந்தார். இது தொடர்பில் கேட்டபோதே, சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில்தான் இறுதிப் போர் நடந்தது. போர்க்குற்றங்கள் இடம்பெற்றன. இந்தப் போர்க்குற்றங்கள் நடைபெற்றதை தற்போதைய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஒப்புக் கொண்டுள்ளார். இந்த நிலையில் அவர் நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டார் என்று மகிந்த ராஜபக்ச தெரிவிப்பதை, நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். உண்மைகள் வெளிவரும்போது எதிர்ப்புக்களும் வெளிவரத்தான் செய்யும்.

மகிந்த ராஜபக்ச ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு விதமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். தற்போது போர்க்குற்றங்கள் என்று எதுவுமே இடம்பெறவில்லை என்று உறுதியாகக் கூறுகின்றார். இதனை நாமும் ஏற்கமாட்டோம். பன்னாட்டுச் சமூகமும் ஏற்காது. பாதிக்கப்பட்ட மக்கள் சாட்சியாக உள்ளார்கள். எனவே விசமத்தனமான பரப்புரைகளைக் கைவிட்டு தெற்கிலுள்ள அரசியல்வாதிகள் அனைவரும் ஐ.நா. தீர்மானங்களுக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும். நாட்டின் நன்மதிப்பைக் காப்பாற்ற வேண்டும் - என்றார். (ஒ,5,22)

கத்திகள்...

தப்பிச் சென்றது. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் நேற்றுப் பட்டப் பகலில் நடந்துள்ளது.

நல்லூர் பிரதேச சபை வீதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அடுக்கு மாடி வீடொன்றில் இரு குடும்பங்கள் வாடகைக்கு இருந்துள்ளன. தாய், பல்கலைக் கழக மாணவி என ஒரு குடும்பமும், வாகனச் சாரதி ஒருவரின் குடும்பமும் அங்கு வசித்துள்ளன.

நேற்றுப் பட்டப்பகலில் சுமார் 8க்கும் மேற்பட்டவர்கள் முகங்களை மூடிக் கட்டியவாறு வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். அவர்கள் கத்திகள் கோடரிகள் போன்ற ஆபத்தான ஆயுதங்களை வைத்திருந்துள்ளனர். அவர்கள் வீட்டுக்குள் நுழைந்து அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஹைஏஸ் வாகனத்தையும், இரு மோட்டார் சைக்கிள்களையும் அடித்து நொருக்கியுள்ளனர். தாயும், பல்கலைக் கழக மாணவியும் சுதாரித்து கதவை மூடுவதற்கு முன்னர் இருவர் கோடரிகள் சகிதம் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். அவர்களைக் கோடரிகளை காட்டி அச்சுறுத்தியுள்ளனர்.

அதேநேரம் வீட்டுக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த ஹைஏஸ் மற்றும் உந்துருளிகளுக்கு பெற்றோல் ஊற்றித் தீயிட்டுள்ளனர் ஏனையவர்கள். வாகனச் சாரதியின் ஹைஏஸ் வாகனம், உந்துருளியும், பல்கலைக் கழக மாணவியின் உந்துருளியுமே தீ வைக்கப்பட்டன. அவை முற்றாகளிந்து நாசமாகியுள்ளன. வீட்டின் சாளரக் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கியுள்ளனர்.

இந்தனையும் செய்துவிட்டு அந்தக் கும்பல் சாவகாசமாக அங்கிருந்து வெளியேறியது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற் கொண்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில்வாகனங்களுக்குத் தீ வைக்கும் சம்பவங்களும், பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. அந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அந்தச் சம்பவங்கள் தொடர்பாக எவரும் கைது செய்யப்படாத நிலையே காணப்படுகின்றது என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (எ-105,106)

போரில்...

உதவிக் குருக்களான மகேந்திரநாதகுருக்கள் மற்றும் சிவாஜிகுருக்கள், சேரன்குருக்

கள் ஆகியோர் இணைந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையை நடத்தினர். இந்த பூசை வழிபாட்டினை உதயராசா என்பவர் ஏற்பாடு செய்திருந்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நினைவு இடத்தில் கொட்டகை அமைக்கப்பட்டு யாகம் வளர்க்கப்பட்டு ஆத்மாசாந்தி பூசைகள் நடத்தப்பட்டன. பிண்டங்கள் முள்ளிவாய்க்கால் கடலில் கரைத்து வழிபாடு செய்யப்பட்டது. அன்னதானமும் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களும் முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த மக்களும் இவற்றில் பங்கு கொண்டனர். (எ-ரி3)



பெண்களுக்கான கால்பந்தாட்டத்தில் இமையாணன் மத்தி. சம்பியனானது

யாழ்ப்பாணம், பெப். 20
கரவெட்டிப் பிரதேச செயலக பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்றது இமையாணன் மத்திய அணி. இதன்மூலம் தொடர்ந்து மூன்று தடவைகள் கிண்ணம் வென்ற அணி என்ற அடைவை அது நிலைநாட்டியது.
உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. நடப்புச் சம்பியனான இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணியும் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணியும் மோதின.
2:0 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது. (ம108)

கிரிக்கெட் வீரர்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், பெப். 20
19 வயதுப்பிரிவு தேசிய துடுப்பாட்ட அணியில் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களான வி. வியாஸ்காந், எஸ். மதுஷன் இருவருக்கும் மின்வலு எரிசக்தித்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் அண்மையில் உதவிகள் வழங்கப்பட்டன. இரண்டு ஆண்டுகளுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வீதம் அவர்களுக்கு வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம23)

பிரதேச செயலகங்களின் ஹொக்கித் தொடர்

சண்டிலிப்பாயைத் தோற்கடித்து சங்கானை கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஹொக்கித் தொடரில் ஆண்கள் பிரிவில் சங்கானை பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாதமையை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
3:2 என்ற கோல் கணக்கில் சங்கானை பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது. (ம-23)

வவுனியாவில் 'தாவுலு' எனும் தற்காப்புக்கலை அறிமுகம்

வவுனியா, பெப். 19
வவுனியாவில் 'தாவுலு' என்ற சீன தற்காப்புக்கலை பாடசாலை மாணவர்கள் மத்தியில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண 'வூசூ' தற்காப்புக்கலை சங்கத்தின் ஏற்பாட்டில் பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி மண்டபத்தில் 'தாவுலு' தற்காப்புகலை பயிற்சி முகாம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
வவுனியா ஏழாம் அறிவு தற்காப்புகலை சங்கத்தின் தலைவர் எஸ். நந்தகுமார் தலைமையில் இரு தினங்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சி பட்டறையில் 'தாவுலு' பன்னாட்டுப் பயிற்றுவிப்பாளரும், அகில இலங்கை வூசூ பயிற்சி நிறுவனத்தின் பயிற்றுவிப்பாளருமான டபிள்யூ. எம். வசந்த பண்டார கலந்து கொண்டு மாணவர்களுக்கு தற்காப்புக்கலை பயிற்சிகளை வழங்கியிருந்தார்.
வவுனியா கோவிற்குளம் இந்துக்கல்லூரி, அகில இலங்கை திருச்சபை தமிழ்கலவன் பாடசாலை, கூமாங்குளம் அரசினர்தமிழ்கலவன் பாடசாலை, பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 50 மாணவர்கள் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். (ம110)

துசாந்தன் சம்பியன்!

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்ப்பாணம் பூப்பந்தாட்டச் சங்கம் நடத்திய பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் துசாந்தன் கிண்ணம் வென்றார்.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் துசாந்தனை எதிர்த்து றெமின்சன் மோதினார். 3:1 என்ற செற் கணக்கில் துசாந்தன் வெற்றிபெற்றார்.
(ம-23)

மேசைப்பந்தாட்ட தொடரில்

காருணியா – காண்டீபன் இணை மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்ப்பாணம் பூப்பந்தாட்டச் சங்கம் நடத்திய பூப்பந்தாட்டத் தொடரின் கலப்பு இரட்டையர் பிரிவில் காருணியா, காண்டீபன் இணை கிண்ணம் வென்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் காருணியா, காண்டீபன் இணையை எதிர்த்து றெமின்சன், கீர்த்தி இணை மோதியது. முதலிரு செற்களையும் முறையே 21:15, 21:08 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி கிண்ணம் வென்றது காருணியா - காண்டீபன் இணை.
(ம-23)

ஆதிசக்தியின் கால்பந்துத் தொடரில் றேஞ்சர்ஸ் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், பெப். 20
ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்றது றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி.
மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் இந்தத் தொடரை முன்னெடுத்தது. அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து விண்மீன் அணி மோதியது.
கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 37ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணியின் கோலைப் பதிவுசெய்தார் ஆர்த்திகன். வேறெந்தக் கோலும் பதிவாகவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றேஞ்சர்ஸ் அணி.
(ம-108)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இலங்கை ஒருநாள் அணி அறிவிப்பு

இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் 2 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் இடம்பெற்று வருகின்றது. தற்போது இரு அணிகளுக்குமான இரண்டு டெஸ்ட் போட்டிகள் இடம்பெற்று வருகின்றது. முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஓர் இலக்கு வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றிருந்தது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகின்றது. அதன்பின்னர் எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி ஒருநாள் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

ஒருநாள் போட்டிக்கான மலிங்கா தலைமையிலான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. மலிங்க(அணித் தலைவர்), பெர்னாண்டோ, தரங்கா , டிக்வெல்லா , குசல் பெரேரா, குசல் மெண்டிஸ், டி சில்வா, திசரா பெரேரா, தனஞ் செயா, ஏ. பெரேரா , ஓ பெர்னாண்டோ , கே. மெண்டிஸ், உடானா, வி. பெர்னாண்டோ, கே. ரஜிதா, சண்டகன் ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

நாடுதான் முக்கியம் ஹர்பஜன் ஆவேசம்

எமக்கு நாடுதான் முக்கியம், உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுடன் மோதும் ஆட்டத்தை இந்திய அணி புறக்கணிக்க வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் ஆவேசமாகத் தெரிவித்தார்.

புல்வாமாவில் இந்திய இராணுவத்தினர் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில், இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங், தெரிவித்ததாவது;

"இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தை இந்திய அணி புறக்கணிக்க வேண்டும். அந்த ஆட்டத்தில் நாம் விளையாடக் கூடாது. எமக்கு நாடுதான் முக்கியம். நாம் அனைவரும் நம்முடைய நாட்டுக்கும், இராணுவ வீரர்களுக்கும் துணையாக இருக்க வேண்டும். பாகிஸ்தானுடன் எந்தவிதமான உறவும் வைத்துக்கொள்ளக் கூடாது, அவர்களை தனிமைப்படுத்த வேண்டும். பாகிஸ்தான் ஆதரவுடன் நமது வீரர்கள் மீது தீவிரவாதி நடத்திய தாக்குதல் அதிர்ச்சி அளிக்கிறது.

பாகிஸ்தான் அணியுடன் இந்திய அணி விளையாடாமல் போனால், ஏதேனும் புள்ளிகள் இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை. அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. கவலைப்படவும் கூடாது"- என்றார்.

தனஞ்செயவின் தடை அகன்றது

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அகில தனஞ்செயவின் பந்து வீசும் முறையில் சந்தேகம் இருப்பதாக கடந்த நவம்பர் மாதம் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் போது புகார் எழுந்தது. இதையடுத்து அவர் பன்னாட்டுப் போட்டியில் பந்துவீச தடை விதிக்கப்பட்டது.

இதன்பிரகாரம் அவர் பந்து வீச்சு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். பரிசோதனையில் தனஞ்செயவின் பந்து வீச்சில் எந்தவித சந்தேகமும் இல்லை என்று பன்னாட்டுக் கிரிக்கெட் சபை தெரிவித்ததையடுத்து, அவர் பன்னாட்டு கிரிக்கெட் போட்டியில் பந்து வீச அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவர் இடம்பெறவுள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இணைக்கப்பட்டுள்ளார்.

பெரேராவுக்கு லாரா பாராட்டு

இலங்கை அணியின் வீரர் குசல் பெரேராவுக்கு மேற்கிந்திய முன்னாள் வீரர் பிரைன் லாரா பாராட்டு தெரிவித்துள்ளார்.

இலங்கை - தென்னாபிரிக்காவுக்கு இடையில் இடம்பெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி திரில் வெற்றி பெற்றிருந்தது. குசல் பெரேராவின் அதிரடி ஆட்டத்தால் வெற்றியைப் பெற்றிருந்தது. இந்த நிலையில் பெரேராவுக்கு பல்வேறு பிரபலங்களிடம் இருந்து பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் இருந்தன.

இந்த நிலையில் மேற்கிந்திய முன்னாள் வீரர் பிரைன் லாரா தெரிவிக்கையில்; ஒரு சிறந்த இளம் வீரருக்குத் தேவையான திறமை, உறுதியை குசல் பெரேரா கொண்டுள்ளார் அவருக்கு எனது பாராட்டுக்கள். இவர் ஒரு சிறந்த இன்னிங்ஸின் இளம் வீரர் என்று தனது கீச்சகப் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

பில்பாவோ அணி அசத்தல் வெற்றி

ஸ்பானியக் கழகங்களுகிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டி ஒன்றில் பில்பாவோ அணி வெற்றி பெற்றது.

நேற்று இடம்பெற்ற போட்டியில் பில்பாவோ - கொஸ்கா அணிகள் மோதின. முதல் பாதி ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் பில்பாவோ அணி வீரர் ராகுல் ஜெரிக்கா ஒரு கோலைப் போட்டார். முதல் பாதி ஆட்டத்தில் பில்பாவோ அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் முயன்றும் கோலைப் போட முடியாமல் போக பில்பாவோ அணி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இலங்கை அணியின் முன்னாள் வீரரும், தற்போது களநடுவராகப் பணிபுரியும் குமார் தர்மசேனவுக்கு பன்னாட்டுக் கிரிக்கெட் சபையால் 2018ஆம் ஆண்டுக்கான சிறந்த களநடுவருக்கான விருது அண்மையில் வழங்கப்பட்டது. இதன்பின்னர் இவர் கடந்த சனிக்கிழமை நாடு திரும்பிய நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆஸி. தொடரில் கோக்லி ஆதிக்கம் செலுத்துவார்

ஹைடன் கணிப்பு

ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது. இரு அணிகளுக்குமிடையில் இரண்டு ரி-20 போட்டிகள் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் இடம்பெறவுள்ளன. முதலாவது ரி-20 போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டித் தொடர் குறித்து ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் மத்யூ ஹைடன் தெரிவிக்கையில்: சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் நடந்த தொடரில் விராட் கோக்லிக்கு ஆஸ்திரேலிய இளம் வேகப் பந்து வீச்சாளர் ரிச்சர்ட்சன் சிம்ம சொப்பனமாக விளங்கினார். இவர் கோக்லியின் இலக்கை 3 முறை

கைப்பற்றியிருந்தார். ஆனால் இந்தியாவில் விளையாடிய அனுபவம் ரிச்சர்ட்சனுக்கு இல்லை. இதனால் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கோக்லி ஆதிக்கம் செலுத்துவார் என நம்புகிறேன் - என்றார்.

ரிஷப் பந்த தனக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தினார்

சகா தெரிவிப்பு

டோனி டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றதும் கொல்கத்தாவைச் சேர்ந்த விருத்திமான் சகா இந்திய அணியின் இலக்குக் காப்பாளராகச் செயற்பட்டு வந்ததுடன் துடுப்பாட்டத்திலும் சிறப்பாக விளங்கினார். இதனால் நீண்ட நாள்களாக சகா டெஸ்ட் அணியில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தென்னாபிரிக்கா தொடரின்போது அவருக்குக் காயம் ஏற்பட்டது. இதனால் இங்கிலாந்து தொடரின்போது தினேஷ் கார்த்திக் இலக்குக் காப்பாளராகச் செயற்பட்டார். ஆனால், தினேஷ் கார்த்திக் இங்கிலாந்து தொடரில் சிறப்பாக விளையாடவில்லை. இதனால் ரிஷப் பந்த் அணியில் இடம்பிடித்தார். அவர் தனக்குக் கிடைத்த வாய்ப்பை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். தற்போது சகா காயம் குணமடைந்து இந்தியாவின் உள்ளூர் போட்டிகளில் விளையாடி வருகின்றார்.

எனது இடத்தை கெட்டியாக பிடித்துக் கொண்ட ரிஷப் பந்தை நான் போட்டியாளராக கருதவில்லை என்று சகா தெரிவித்தார்.

இலங்கை – தென்.ஆ டெஸ்ட் போட்டி நாளை

இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது.இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி திரில் வெற்றி பெற்றிருந்தது. இரு அணிகளுக்குமான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டியில்சொந்த மண்ணில் தோல்வியைத் தழுவிய தென்னாபிரிக்கா அணி போராடும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. எனினும் வெற்றிக் களிப்பில் இருக்கும் இலங்கை அணியும் சளைத்தவர்கள் இல்லை என்பதையும் நிரூபிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் போட்டியில் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றாலும் போட்டி சமநிலையில் முடிவடையும். ஏனெனில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரே இரு அணிகளுக்குமிடையில் இடம்பெறுகின்றன.

டோனி - கோக்லி மோதலுடன்

ஆரம்பமாகிறது ஐ.பி.எல். 2019

இந்தியாவில் நடைபெறும் 12ஆவது ஐ.பி.எல். தொடர் மார்ச் மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகின்றது என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நேற்று அறிவித்துள்ளது.

ஐ.பி.எல். போட்டி அட்டவணை வெளியிடுவதில் இழுபறி நிலை இருந்து வந்தன. ஏனெனில் இந்தியாவில் தேர்தல் இடம்பெறவுள்ளதால் போட்டிகள் முழுமையாக இந்தியாவில் நடத்துவதா அல்லது பிரித்து வேறு இடத்தில் நடத்துவதா என்று சிக்கல் நிலை இருந்து வந்தது. இந்த நிலையில் அனைத்துப் போட்டிகளும் இந்தியாவில்தான் இடம்பெறும் என்று ஐ.பி.எல். நிர்வாகம் தெரிவித்திருந்த நிலையில் போட்டியின் முதல் இரண்டு வாரத்துக்கான அட்டவணையை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டது. மார்ச் மாதம் 23ஆம் திகதி போட்டிகள் ஆரம்பமாகின்றன.இதில் 8 அணிகள் பங்கேற்கின்றன. முதல் போட்டியில் சென்னை-றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன.

முகமது ஷமி உதவிக்கரம்

புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த இந்திய இராணுவத்தினர்களுக்கு பல்வேறு தரப்பினர் தங்களால் முயன்ற உதவிகளைச் செய்து வருகின்றனர். இந்த வகையில் இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர்களில் ஒருவரான முகமது ஷமி உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்பத்துக்கு 5 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்; "நாம் நாட்டுக்காக விளையாடிக் கொண்டிருக்கும்போது இராணுவத்தினர். எல்லையில் பாதுகாப்புக்காக நின்று கொண்டிருக்கிறார்கள். வீரர்களுடைய குடும்பத்துடன் நாம் இருக்க வேண்டும். நாம் எப்போதுமே அவர்களுக்கு உறுதுணையாக இருப்போம்"- என்றார்.

நான்காவது இடத்தில் டோனியை களமிறக்குங்கள் - சுரேஷ் ரெய்னா

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் மே மாதம் ஆரம்பமாகின்றது. கிண்ணத்தை வெல்லும் அணிகளில் இந்தியாவும் ஒன்று எனக் கருதப்படுகிறது. ஆனால், அந்த அணியின் நான்காவது இடத்தில் களம் இறங்கி துடுப்பெடுத்தாடப் போவது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலையில் டோனியின் அனுபவத்தை இந்திய அணி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார். ஏற்கனவே இந்த நான்காவது இடத்தில் அம்பதி ராயுடுவைக் களமிறக்கலாம் அல்லது ரிஷப் பந்தைக் களமிறக்கலாம் என்ற கேள்விகளும் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; "அண்மையில் நடைபெற்ற ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து தொடர்களில் டோனி கணிசமான ஓட்டங்களை விளாசியிருந்தார். அதோடு இளம் வீரர்களை சிறப்பாக வழி நடத்துகிறார். குறிப்பாக இளம் பந்து வீச்சாளர்களுக்கு டோனி கொடுக்கும் அறிவுரை பயனுள்ளதாக இருக்கிறது.

அவர் பல உலகக் கிண்ணத்தில் விளையாடியுள்ளார். ஐ.பி.எல். இறுதிப் போட்டிகளில் அதிக அளவில் பங்கேற்றுள்ளார். எனவே என்னை பொறுத்தவரையில் உலகக் கிண்ணத்தில் டோனி நான்காவது இடத்தில்களம் இறங்கி துடுப்பெடுத்தாடுவது சிறந்தது "- என்றார்.

தரவரிசையில் மந்தனா முதலிடம்

பன்னாட்டுக் கிரிக்கெட் சபை பெண்கள் கிரிக்கெட்டின் ஒருநாள் போட்டித் தரவரிசைப் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்தது. இதில் இந்திய அணியின் வீராங்கனை மந்தனா 774 புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கிறார்.

இரண்டாவது இடத்தில் ஆஸ்திரேலியாவின் எலிசா பெர்ரியும், மூன்றாவது இடத்தில் லன்னிங்னும், இந்திய அணியின் ஒருநாள் போட்டி தலைவி மிதலிராஜ் 5ஆவது இடத்திலும் உள்ளனர்.

அறிமுக வீரர்களுக்கு

சிமித், வோர்னர் கட்டாயம் தேவை

ஹசில்வூட் கவலை

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி வீரர்களான சிமித். வோர்னர் பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஓர் ஆண்டு தடை விதிக்கப்பட்டனர். இதனால் ஆஸ்திரேலிய அணியில் இளம் வீரர்களுக்கு வாய்ப்புக்கள்அதிகளவில்கிடைக்கின்றன. ஆனால் அவர்களை வழி நடத்த மூத்த வீரர்களான சிமித். வோர்னர் இல்லாதது வருத்தமளிக்கின்றது என அந்த அணியின் வீரர் ஹசில்வூட் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; "முதல் முறையாக 6 புதுமுக வீரர்கள்களம் இறங்கும்போது, மூத்த வீரர்கள் இல்லாமையால் பயிற்சியாளரிடம் மட்டுமே இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

ஒவ்வொரு முறையும் சிமித் துடுப்பெடுத்தாடும் போது அவர் சதம் அடிக்கும் நிலையில் இருப்பார். அதனால் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடி ஏற்படாது. ஆறு புதுமுகங்கள் இருக்கும்போது இரண்டு முன்னணி வீரர்கள் அணியில் இருந்து கற்றுக்கொடுப்பது அவசியம்.

அனைத்து விடயங்களையும் பயிற்சியாளர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள முடியாது. மூத்த வீரர்களுடன் ஆடுகளத்தில் இணைந்து விளையாடும்போது, அவர்களிடம் இருந்து இளம் வீரர்கள் அதிகளவில் கற்றுக் கொள்ள முடியும்"- என்றார்.



வாடகைக்கு
யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற வீடு கிழமை வாடகைக்குண்டு.
077 5745441

பணியாளர் தேவை
▼ சமையலாளர்
▼ உதவியாளர்கள்
▼ துப்புரவாளர்கள்
077 652 9583

SAAMSON Experts in English Training
இன் இலவச ஒருநாள் ஆங்கிலப் பயிற்சி 23.2.2019 சனி
1. காலை 08-10 2. மாலை 03-05
ஏதாவதொரு பிரிவில் பங்குபற்றமுடியும்
பங்குபற்றுதியமைக்கான சான்றிதழ் ,வழிகாட்டி இலவசம்
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர். 021 621 4567 077 1570 486

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
► பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
► அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
► யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.